REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 ஓகஸ்ட் 25 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 88 இல. 201 | August 25, Tuesday, 2020 | 16 பக்கங்கள் | 30/-





சமுர்த்தி, மனைப் பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில், தொழில் அபிவிருத்தி மற்றும் அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடப்பட்டது. இக் கலந்துரையாடலின் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச விளக்கமளிப்பதையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, பசில் ராஜபக்ச மற்றும் அதிகாரிகளையும் படத்தில் காணலாம்.

பிரதி பிரதமர் பதவி விவகாரம்;

## அரசாங்கம் தீர்மானம் எதையும் எடுக்கவில்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் பிரதி பிரதமர் பதவியொன்றை உருவாக்குவது தொடர்பில் அரசாங்கம் எவ்வித தீர்மானத்தையும் இதுவரை மேற்கொள்ளவில்லையென கல்வியமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.



அதேவேளை பிரதிப் பிரதமர் பதவியொன்றை உருவாக்குவது தொடர்பில் அரசாங்கம் இதுவரை எந்தவொரு பேச்சுவார்த்தையையும் நடத்தவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய 06


அமெரிக்கா புளோரிடா மாநிலத்திலுள்ள பிரித்தானியா - அமெரிக்கன் சர்வதேச பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் இலங்கையின் சீகாஸ் கல்வி நிறுவனத்தின் ஊடாக பி.எம்.ஐ.சி.எச் மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் சிவஸ்ரீ பாபுசர்மா இராமச்சந்திர குருக்கள் கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். படம். எஸ். உதயகுமார்

நல்லாட்சியில் உருவாக்கப்பட்ட ஆணைக்குழுக்களில் சுயாதீன தன்மை இல்லை

# அரசியலமைப்பு திருத்தம் மூலம் ஆணைக்குழுக்களுக்கு சுயாதீனம்



## மக்கள் வழங்கிய மூன்றிலிரண்டு ஆணைக்கு மதிப்பளிப்போம் என்கிறார் அமைச்சர் கெஹலிய

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நல்லாட்சி அரசாங்கத்தில் உருவாக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் சுயாதீனமாக செயற்படவில்லை. அதை சுயாதீனமாக்குவது தொடர்பில் சில மாற்றங்களை எதிர்வரும் அரசியலமைப்பு திருத்தம் மூலம் மேற்கொள்வதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என வெகுஜன ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவை நியமித்த அரசியலமைப்பு பேரவை அங்கத்தவர்கள் 10 பேரில் 7 பேர் நல்லாட்சி அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களென்றும் அதில் செயற்பட்ட மூன்று சிவில் செயற்பாட்டாளர்கள் தொடர்பில் சிக்கல்கள் நிலவுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இம்முறை பொதுத் தேர்தலில் தமது வெற்றிக்காக ஒத்துழைப்பு வழங்கிய மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கண்டி ஹரிஸ்பத்துவவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சுயாதீன ஆணைக்குழு எனக்குறிப்பிடப்படுகின்ற போதும் அடிப்படை விடயங்கள் கூட அதில் மீறப்பட்டுள்ளதாகவும் அதனால் அதனை நிவர்த்திசெய்ய வேண்டியது அவசியமென்றும் அவர் தெரிவித்தார்.

தகவலறியும் சட்டமூலம், ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஐந்துவருட காலத்திற்கு மட்டுப்படுத்தல், இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது போன்ற காரணங்கள் 20வது அரசியலமைப்பில் உள்ளடக்கப்படுவதற்கு 06

## சிங்கராஜ வனத்தில் எனக்கு சொந்தமான ஹோட்டலா?

பொய் குற்றச்சாட்டு என யோசித்த மறுப்பு



சிங்கராஜ வனத்திற்கு அருகில் தனக்கு சொந்தமான ஹோட்டல் இருப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டை நிராகரிப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்சவின் புதல்வர் யோஷித்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

யோஷித்த ராஜபக்சவின் ஹோட்டலுக்கு செல்ல வீதி வசதியை ஏற்படுத்தவே சிங்கராஜ வனத்தின் ஊடாக லங்காம வரை வீதி நிர்மாணிக்கப்படுவதாக சுற்றாடல் ஆர்வலர் சஞ்ஜீவ சாமிகர ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் குறித்த குற்றச்சாட்டுக்கு எதிராக 06

## UNP தலைமைத்துவ சவாலை ஏற்க தயாரென கரு அறிக்கை

குழப்ப நிலையை முடிவுக்கு கொண்டுவர தீர்வாம்



ஐக்கிய தேசிய கட்சிக்கு தலைமைத்துவத்தை வழங்கும் சவாலை ஏற்க தான் தயாராக உள்ளதாக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கட்சியின் தற்போதைய தலைமைக்கு இது தொடர்பில் அறிவித்துள்ளதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய நிலையில் கட்சியில் ஏற்பட்டுள்ள குழப்பநிலையினை கருத்திற் கொண்டு, பல்வேறு தரப்பினர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக கட்சியின் மேம்பாட்டிற்காக 06

## எதிரணி எம்.பிக்கள் பலரும் அரசுடன் இணைய திட்டம்?

பேச்சுக்கள் இடம்பெறுவதாக சிங்கள ஊடகம் தகவல்

எதிர்க்கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் புதிய அரசாங்கத்தில் இணைந்துகொள்ள பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.


அரசாங்கத்தில் இணைவது தொடர்பான பூர்வாங்க கலந்துரையாடல்கள் ஏற்கனவே தொடங்கிவிட்டதாகவும், தற்போது இந்த விவாதங்கள் அரசாங்கத்தின் 06

## துப்பாக்கியால் பட்டபாடு போதும் மாற்றுவழி பற்றி சிந்திப்போம்

கிளிநொச்சியில் அதிகாரிகளுக்கு டக்ளஸ் ஆலோசனை

துப்பாக்கிகளைப் பயன்படுத்தியதால் எமது மக்கள் கடந்த காலங்களில் பட்டபாடுகள் அனைத்தும் போதும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாற்று வழியை ஆராயுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மே லும், கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவான காணிகள் பல்வேறு திணைக்களங்களின் கட்டுப்பாட்டில் உள்ள நிலையில், அவற்றை விடுவித்து அடுத்த போகத்திற்கான பயிர்செய்கையை 06



## தலதா, பூஜித் அரசியல் ஆணைக்குழுவில் ஆஜர்



கட்டாய விடுமுறையிலுள்ள பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தரவும், முன்னாள் அமைச்சர் தலதா அத்துகோரளவும் நேற்று (24) முற்பகல் அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகியுள்ளனர். எதிர்வரும் 14ஆம் திகதி மீண்டும் குறித்த ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்ட பின்னர், அவர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். 06

## SPBயின் உடல் நிலை குறித்து மகன் சரண் நேற்று விளக்கமளிப்பு



எஸ்.பி. பாலசுப்பிரமணியம் குணமடைந்துவிட்டதாக வெளியான செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என மகன் எஸ்.பீ.பி.சரண் தெரிவித்துள்ளார். பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியம் கொரோனா 06

## பற்றி பல்கலைக்கழகத்தை பாதுகாக்க தேர்தலில் வேண்டுமென்றே தோற்றேனா?

ஒருபோதும் இல்லை; மூச்சிருக்கும் வரை அரசியல் என்கிறார் ஹிஸ்புல்லா

**வாழைச்சேனை விசேட நிருபர்**



எனது பல்கலைக்கழகத்தை பாதுகாக்கவே பாராளுமன்றத் தேர்தலில் வேண்டுமென்றே தோல்வியை தழுவியதாகவும் சில சமூக வலைத்தளங்களில் கூறப்படும் பிரசாரங்கள் முற்றிலும் பொய்யானவை என முன்னாள் அமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வேட்பாளரும் தான் தேர்தலில் வெற்றி பெற 06

## வடக்கில் அரச நியமனங்கள் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகள் ஆளுநரிடம் மகஜர் கையளிப்பு

யாழில் 450 பட்டதாரிகளுக்கு நியமனம் நிராகரிப்பு; நிவர்த்தி செய்து தர கோரிக்கை

அரசாங்கத்தினால் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு நாடு பூராகவும் வழங்கப்படவுள்ள நிலையில் பட்டதாரிகளுக்கான அரச நியமன கடிதங்கள் தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயிரத்து 450க்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கான நியமனங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக பட்டதாரிகளுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நேற்று (திங்கட்கிழமை) 06






## கொலையான மாணவனின் சடலத்தை வீதியில் வைத்து மக்கள் போராட்டம்

வாள்வெட்டு கும்பலை கைது செய்யுமாறு கோரிக்கை

வாள்வெட்டு குழுக்களை இல்லாமல் செய்து பொதுமக்கள் அச்சமின்றி பாதுகாப்பாக வாழும் சூழலை உருவாக்குங்கள் என படுகொலை செய்யப்பட்ட மாணவனின் பிரேதத்தை வீதியில் வைத்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு கொம்மாதுரை பகுதியில் நேற்று முன்தினம் இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட வாள் வெட்டுச் சம்பவத்தில் 15 வயது மாணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், மாணவனின் இறுதி ஊர்வலம் 06



கல்கிஸ்ஸை கடற்கரையில் ஞாயிறன்று

## காணாமல் போன இளைஞன் நேற்று காலை சடலமாக மீட்பு

மற்றொருவரை தேடும் முயற்சி தொடர்கிறது

கல்கிஸ்ஸை கடலுக்கு நீராடச் சென்ற நிலையில் நீரில் அள்ளுண்டு சென்ற இரண்டு இளைஞர்களில் ஒருவரின் சடலம் நேற்று காலை கரையொதுங்கியுள்ளது.

பூண்டுலோயா ஹெரோ பகுதியை சேர்ந்த 18 வயதுடைய இளைஞரின் சடலமே இவ்வாறு கரையொதுங்கியுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

நீரில் அள்ளுண்டு சென்ற இளைஞரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். 06

**சம்பந்தன், சீ.வி, ஹக்கீம், ரிஷாட்டின் இனவாத அரசியல் மக்களால் நிராகரிப்பு**
அதாவுல்லா, அங்கஜனுக்கு அமைச்சு பதவி அவசியம் 03

**50,000 பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு; செப்டம்பர் 2ல் நியமனம் வழங்க முடிவு**
அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் அறிவிப்பு 03

## கிறிஸ்சேர்ச் பள்ளிவாசல் தாக்குதல்:

# துப்பாக்கிதாரிக்கு இதுவரை இல்லாத ஆயுள் தண்டனையை வழங்க வாய்ப்பு

நியூசிலாந்தில் 2019ஆம் ஆண்டு இரு பள்ளிவாசல்களில் 51 பேரை கொன்ற நபர் மற்றொரு பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்தது அவர் மீதான தீர்ப்பு வழங்கும் வழக்கு விசாரணையில் நேற்று தெரியவந்தது.

ப்ரெண்டன் டரன்ட் என்ற அந்தத் தாக்குதல்தாரி பள்ளிவாசல்களுக்கு தீ வைக்கவும், முடியுமான வரை உயிரிழப்புகளை ஏற்படுத்தவும் திட்டமிட்டிருந்துள்ளார்.

அவுஸ்திரேலியரான அவர் தம் மீதான 51 கொலை குற்றச்சாட்டுகள், 40 கொலை முயற்சிகள் மற்றும் ஒரு தீவிரவாத குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்நிலையில் 29 வயதான டரன்ட் மீது பிணையில்லாத ஆயுள் தண்டனை வழங்க வாய்ப்பு உள்ளது. இவ்வாறான தண்டனை நியூசிலாந்தில் இதற்கு முன்னர் அமுல்படுத்தப்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நேற்று நீதிமன்றத்தில் தாக்குதலில் உயிர்தப்பியவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தாக்குதல்தாரியை எதிர்கொண்டனர்.

“51 அப்பாவி மக்களின் ஆன்மாக்களை எடுப்பதற்கு நீங்கள் உங்களுக்கே அதிகாரம் கொடுத்தீர்கள். உங்களின் கண்களுக்கு முஸ்லிமாக இருப்பது மாத்திரமே அவர்கள் செய்த ஒரே குற்றம்” என்று தனது மகனை இழந்த மைசூன் சலாமா என்ற தாய் நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

“நீங்கள் உணர்வுகளைக் கடந்து வரம்பு மீறி செயற்பட்டிருக்கிறீர்கள். உங்களை என்னால் மன்னிக்க முடியாது” என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு மார்ச் 15 ஆம் திகதி கிறிஸ்சேர்ச்சில் இருக்கும் இரு பள்ளிவாசல்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்திய தாக்குதல்தாரி அதனை இணையதளத்திலும் நேரடியாக ஒளிபரப்பச் செய்தார்.

இந்நிலையில் கிறிஸ்சேர்ச்சில் அவர் மீதான தண்டனைக்கான விசாரணைகள் நேற்றுக் காலை ஆரம்பமானது. இந்த விசாரணைகளுக்கு நான்கு நாட்கள் வரை எடுத்துக்கொள்ளும்.



இதில் கைவிலங்கிடப்பட்டு சாம்பல் நிறக் கைதிகள் உடையுடன் மூன்று பொலிஸார் சூழவிருந்த துப்பாக்கிதாரி பெரும்பாலும் அமைதியாகவே காணப்பட்டதோடு இருந்து நின்று தாக்குதலில் தப்பியவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட உறவினர்கள் இருக்கும் பக்கமாக திரும்பிப் பார்த்தார்.

துப்பாக்கிதாரி இந்தத் திட்டத்தை பல ஆண்டுகளுக்கு முன்னர் தீட்டி இருப்பதாகவும் முடியுமான அளவு உயிர்ச் சேதங்களை ஏற்படுத்துவதே நோக்கமாக இருந்ததாகவும் அரச வழக்கறிஞர் பர்னபி ஹாவஸ் தெரிவித்தார்.

அவர் நியூசிலாந்து பள்ளிவாசல்கள் பற்றிய விபரங்களை சேகரித்து திட்டம், இடம் மற்றும் இலக்கு, பரபரப்பான நேரம் பற்றிய விடயங்களை ஆராய்ந்துள்ளார்.

தாக்குதலுக்கு சில மாதங்களுக்கு முன் அவர் கிறிஸ்சேர்ச்சிற்கு பயணித்து தமது பிரதான இலக்கான அல் நூர் பள்ளிவாசலுக்கு மேலால் ஆளில்லா விமானம் ஒன்றை பறக்க விட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு இலக்கான அல் நூர் பள்ளிவாசல் மற்றும் லின்வூட் இஸ்லாமிய நிலையத்திற்கு மேலதிகமாக அஷ்பர்டோன் பள்ளிவாசல் மீதும் தாக்குதல் நடத்த அவர் திட்டமிட்டிருந்தபோதும், அவர் மூன்றாவது பள்ளிவாசலை நோக்கி செல்லும்போது பிடிபட்டுள்ளார்.

தாக்குதல் தினத்தன்று அல் நூர் பள்ளிவாசலில் இருந்து தப்பிக்க முயன்றவர்கள் மீது அவர் சூடு நடத்தியுள்ளார் என்று நீதிமன்ற விசாணையில் கூறப்பட்டது.

தாக்குதல்தாரி குறைந்தபட்சம் 17 ஆண்டுகள் சிறைத் தண்டனைக்கு முகம்கொடுத்தபோதும், அவருக்கு பிணையின்றி முழுமையான ஆயுள் தண்டனை ஒன்றை விதிப்பதற்கு இந்த வழக்கை விசாரிக்கும் உயர் நீதிமன்ற நீதிபதி கெமரூன் மென்டருக்கு அதிகாரம் உள்ளது. அவ்வாறான ஒரு தண்டனை நியூசிலாந்தில் இதற்கு முன்னர் விதிக்கப்பட்டதில்லை.

## இந்தோனேசியாவில் எரிமலைக் குமுறல்



இந்தோனேசியாவின் சினபுங் எரிமலை மீண்டும் குமுற ஆரம்பித்துள்ளது.

சுமத்ரா தீவில் உள்ள அந்த எரிமலை கக்கிய சாம்பல், 1,000 கிலோமீற்றர் தொலைவுக்குக் காற்றில் பரவியுள்ளது. என்றாலும், அது விமானப் போக்குவரத்தைப் பாதிக்கவில்லை என்று அதிகாரிகள் கூறினர்.

எரிமலைக் குமுறலால் யாரும் காயமடைந்ததாகவோ, பெரிய அளவில் சேதம் ஏற்பட்டதாகவோ எந்தத் தகவலும் இல்லை.

இருப்பினும் எரிமலையை விட்டு ஐந்து கிலோமீற்றர் விலகியிருக்குமாறு குடியிருப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சினபுங் எரிமலை இந்தோனேசியாவில் இருக்கும் 120க்கும் அதிகமான எரிமலைகளில் ஒன்றாகும். கடைசியாக 2016 ஆம் ஆண்டு இந்த எரிமலை வெடிப்பில் ஏழு பேர் உயிரிழந்தனர்.

எனினும் கடந்த ஒருசில ஆண்டுகளில் இந்த எரிமலையை சூழ வாழும் சுமார் 30,000 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

## உக்ரைன் விமானம் தாக்கப்பட்டதன் பின்னரும் 19 வினாடிகள் பேசிக்கொண்டிருந்த விமானிகள்

உக்ரைன் விமானத்தின் மீது முதல் ஏவுகணை தாக்குதல் நடந்த பின்னரும் 19 வினாடிகள் விமானிகள் பேசிக்கொண்டிருந்ததாக ஈரான் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது.உக்ரைன் இண்டெர்நேஷனல் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் இந்த விமானம் ஜனவரி 8ஆம் திகதி டெஹ்ரானில் உள்ள இமாம் காமேனீ சர்வதேச விமான நிலையத்திலிருந்து கிளம்பிய சற்று நேரத்திலேயே விபத்துக்குள்ளானது.

விமான ஊழியர்கள் உள்பட இதில் பயணித்த 176 பெரும் உயிரிழந்தனர். உக்ரைன் தலைநகர் கீவ் நோக்கி சென்று கொண்டிருந்த அந்த விமானம், அங்கிருந்து கனடாவில் உள்ள டொரண்டோ நகருக்கு செல்ல இருந்தது.

முதலில் தாங்கள் இந்த விமானத்தை சுட்டு வீழ்த்தவில்லை என்று மறுத்து வந்த ஈரான், பின்னர் தங்கள் நாட்டு புரட்சிகர இராணுவத்தினர் தவறுதலாக இதை சுட்டு வீழ்த்தி விட்டனர் என்று தெரிவித்தது.

இந்நிலையில் விமானத்தின் கறுப்பு பெட்டியில் பதிவான தகவல்கள் குறித்த சில விபரங்களை ஈரான் அரசு தற்போது வெளியிட்டுள்ளது.

"முதல் ஏவுகணை விமானத்தை தாக்கிய பின்னும் 19 விநாடிகள் வரை இரண்டு விமானிகள் மற்றும் அவர்களின் வழிகாட்டி ஆகியோரிடையே உரையாடல் நடந்தது" என்று ஈரான் விமானப் போக்குவரத்து அமைப்பின் தலைவர் கெப்டன் சங்கானே தெரிவித்துள்ளார்."அதற்கு 25 விநாடிகள் கழித்து இரண்டாவது ஏவுகணை விமானத்தைத் தாக்கியது. அவர்கள் கடைசி நொடி வரை விமானத்தை இயக்கி வந்துள்ளனர்" என்று அவர் கூறியுள்ளார்.

## பிலிப்பைன்ஸில் இரு குண்டு தாக்குதல்களில் 10 பேர் பலி

இஸ்லாமிய போராளிகள் பலம் கொண்ட தெற்கு பிலிப்பைன்ஸ் தீவு ஒன்றில் தற்கொலை தாக்குதல்தாரி ஒருவர் நடத்திய இரட்டை குண்டு தாக்குதல்களில் 10 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு படையினர் மற்றும் பொலிஸார் உட்பட மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

அபூ சையாப் குழுவுடன் அரச ஆதரவு படையினர் நீண்ட காலமாக போராடி வரும் முஸ்லிம் பெரும்பான்மை சுலுவின் ஜோலோ நகரில் நேற்று இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.



சந்தை ஒன்றுக்கு வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் வைக்கப்பட்ட குண்டு முதலில் வெடித்து ஐந்து படையினர் மற்றும் நான்கு பொது மக்கள் கொல்லப்பட்டதாக லெப்டினன்ட் ஜெனரல் கொர்லெடோ வின்லுவான தெரிவித்தார்.

இதில் 20 பொதுமக்கள் காயமடைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதே வீதியில் பொலிஸார் நிலைகொண்டிருக்கும் பகுதியில் பெண் தற்கொலைதாரி ஒருவர் குண்டை வெடிக்கச் செய்ததில் இரண்டாவது வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் ஒருவர் கொல்லப்பட்டு ஆறு பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்துள்ளனர்.

தமது முன்னோர்கள் வாழ்ந்த தெற்கு பிராந்தியமான மின்டானோவில் சுதந்திரம் கேட்டு அபூ செய்யாப் நீண்ட காலமாக போராடி வருகிறது.



## இ.போ.ச பேருந்தில் மது பிரியர்கள் பாலியல் சேட்டை

### நடத்துனரும், சாரதியும் உடந்தை

கோவில்குளம் குறூப் நிருபர்

வவுனியாவிலிருந்து செட்டிக்குளம் செல்லும் அரச பேருந்தில் பெண்கள் பாலியல் தொல்லைக்கு ஆளாகி வருவதாக பயணிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வவுனியாவிலிருந்து பூவரசங்குளம் ஊடாக செட்டிக்குளம் மெனிக்பாம் நோக்கி இரவு 8.00 மணிக்கு பயணிக்கும் இ.போ.ச பேருந்திலேயே மேற்படி சம்பவம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

வவுனியாவிலிருந்து புறப்படும் பேருந்தில் பயணிக்கும் சிலர், பேருந்தில் வைத்து மது அருந்தி வருவதுடன், பேருந்தில் பயணம் செய்யும் பெண்களுடன் பாலியல் சேட்டை விடுவதாவும் இச் செயற்பாட்டை சாரதி மற்றும் நடத்துனர் கண்டுகொள்வதில்லை என பயணிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வவுனியா இலுப்பையடி சந்தியிலிருந்து இரவு புறப்படும் குறித்த பேருந்து பூவரசங்குளம் எட்டாம் கட்டையில் அமைந்துள்ள மதுபானசாலைக்கு முன்பாக நிறுத்தப்படுகிறது. இவ்வாறு குறித்த பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனர்கள் குறித்த சமூகவிரோத கும்பலுக்கு ஆதரவாக செயற்படுவதாக பாதிக்கப்பட்ட பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இச் சம்பவம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிசாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் பொலிசார் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை என்பதுடன் வடபிராந்திய போக்குவரத்து அமைச்சிற்கும் இச்சம்பவம் தொடர்பாக தெரிவிக்கபப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

# இந்திய இழுவைப் படகுகள் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

### கிளிநொச்சியில் அமைச்சர் டக்ளஸ்

பரந்தன் குறூப் நிருபர்

இந்திய இழுவைப்படகுகள் பிரச்சினைகள் தொடர்பாக விரைவில் தீர்வு எட்டப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கிளிநொச்சி, இரணைதீவு உள்ளிட்ட பகுதிகளில் மீண்டும் இந்திய இழுவைப் படகுகளின் வருகை அதிகரித்துள்ளதாகவும், இந்த அரசின் காலத்தில் மீண்டும் இவ்வாறான பிரச்சினை எழுந்துள்ளதாகவும் மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இந்த பிரச்சினைக்கு துறைசார்ந்த அமைச்சர் என்ற வகையில் தீர்வை பெற்றுக்கொடுப்பீர்களா என அவரிடம் ஊடகவியலாளர்கள் வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

குறித்த விடயம் தொடர்பில் இதுவரை எனக்கு யாரும் தெரிவிக்கவில்லை. இவ் விடயம் தொடர்



பில் எனக்குத் தெரியாது. ஆனாலும் இந்திய இழுவைப்படகு பிரச்சினை என்பது இரணைதீவிற்கு மாத்திரமல்ல வடக்கு மாகாணத்திற்கே பெரும் சவாலாக காணப்படுகின்றது.

இந்நிலையில் இந்திய அரசுடன் தொடர்ந்தும் பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றோம். வடக்கில் அச்சுறுத்தலாக காணப்படும் இந்திய இழுவைப்படகினை எல்லை பகுதிக்குள் அனுமதிக்காதவாறு தடுப்பதற்கான உறுதிப்பாட்டினை அரசாங்கம் வழங்கியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் விரைவில் இரணைதீவு பகுதிக்கு செல்வோம்.

அப்போது குறித்த விடயம் தொடர்பில் விரிவாக கவனம் செலுத்துவோம். இரணைதீவு மக்களின் மீள்குடியேற்றத்திற்கு அப்போது எதிர்கட்சியில் இருந்தாலும் எனது பங்கும் இருந்தது.

இவ்வாறான நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பில் எனக்கு இதுவரை யாரும் தகவல் தரவில்லை. அவர்களின் வாழ்வாதாரம் சார்ந்த முக்கிய விடயங்களில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். கடலட்டை வளர்ப்பதற்கான பண்ணைகளை அமைத்து கொடுத்துள்ளோம்.

மேலும் பல தொழில்சார் வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். ஆனாலும் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் எமது கவனத்திற்கு கொண்டுவரப்படவில்லை. அடுத்துவரும் வாரத்தில் அப்பகுதிக்கு செல்லவுள்ளோம். இதன்போது இந்திய இழுவைப்படகு, அவர்களின் தொழில் மற்றும் குடியிருப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்றார்.

## யாழ்.மாவட்டத்தில் விவசாய உற்பத்தி பொருட்களுக்கு சந்தை வாய்ப்பு இல்லை

### மாவட்ட கமக்கார அமைப்பு சபை செயலாளர்

ஐ.சிவசாந்தன்

யாழ். மாவட்டத்தில் விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு உரிய சந்தை வாய்ப்பு கிடைப்பதில்லை என யாழ் மாவட்ட கமக்கார அமைப்பு அதிகார சபையின் செயலாளர் எஸ். செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் கூறுகையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு உரிய சந்தை வாய்ப்பு கிடைப்பதில்லை. அதேபோல உற்பத்திக்கு செலவு செய்யும் பணத்தை அவர்கள் விளைச்சலின் போது பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த விடயத்தினை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருத்தில் எடுக்க வேண்டும். அதேபோல் விவசாயம் என்பது பயிர்ச் செய்கை மற்றும் கால்நடை வளர்ப்பு இவை இணைந்த ஒன்று. கால்நடைகளை பொருத்தவரைக்கும் கால்நடைகளுக்குரிய தீவனங்கள் பெறுவதில் சில இடர்பாடுகள் காணப்படுகின்றன.

அதனை விவசாயிகள் தமது இடங்களில் பெற்றுக் கொள்வதற்குரிய ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் மேற்கொள்ள வேண்டும். அதேபோல் தீவனங்களை தவிர்த்து புல் வளர்ப்பு போன்ற செயற்திட்டங்களை கருத்தில் எடுப்பது மிகவும் சிறந்தது.

கோழி வளர்ப்புக்குரிய கோழிக் குஞ்சுகள் பெற்றுக் கொள்வதிலும் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றார்கள். தற்போது கோழி வளர்ப்பாளர்கள் அச்சுவேலியில் உள்ள பண்ணை ஒன்றிலேயே கோழிக்குஞ்சுகளை பெற்றுக்கொள்ளக் கூடிய நிலைமை காணப்படுகின்றது.

அதேபோல் பால் உற்பத்தியை எடுத்துக்கொண்டால் கால்நடைகளுக்கான மருந்துப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றார்கள். இந்த விடயம் தொடர்பில் விவசாய அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு இணைந்து உரிய நடவடிக்கை எடுப்பார்களேயானால் விவசாயிகள் கால்நடை வளர்ப்பினை சிறப்பாக மேற்கொள்ள முடியும் என்றார்.



மன்னார் மாவட்ட ஆயர் இம்மானுவல் பெர்ணாண்டோவை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் நேற்று முன்தினம் மாலை சந்தித்த போது...

படம் மன்னார் குறூப் நிருபர்

# யாழில் 'பியர்' பாவனை குறைந்துள்ளது

### மதுவரி திணைக்கள தகவல்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

யாழில் "பியர் "பாவனை இவ்வருடம் குறைவடைந்துள்ளதாக யாழ்ப்பாண மதுவரி திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண மதுவரித் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட யாழ்ப்பாணம் நல்லூர்,வேலணை ஆகிய பகுதிகளில் கடந்த 2019 ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இவ்வருடம் கடந்த ஆறு மாதம் வரையிலான புள்ளிவிபரங்களின்படி பியர் நுகர்வு 27 வீதமாக குறைவடைந்துள்ளதாக யாழ்ப்பாண மதுவரி திணைக்கள புள்ளிவிபர தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2019ம் ஆண்டு 21 இலட்சத்துக்கு மேற்பட்ட லீட்டர் பியர் விற்பனை இடம்பெற்றதாகவும் எனினும் இவ்வருடம் கடந்த ஆறு மாத புள்ளிவிவரங்களின்படி 7 இலட்சத்து 42 ஆயிரம் லீட்டர் பியர் நுகர்வு மட்டுமே இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வைன் நுகர்வு கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 21 வீதத்தால் குறைவடைந்துள்ளது. அதேபோல் வெளிநாட்டு சாராய நுகர்வும் 1.74 வீதத்தினால் குறைவடைந்துள்ளது. உள்ளூர் சாராய பாவனை 2.6 வீதமாக அதிகரித்துள்ளது.

2020 ஓகஸ்ட் 25 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN

24ம் திகதி முதல் 26ம் திகதி வரை
தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | 04.46 |
| லுஹர் | 12.14 |
| அஸர் | 03.25 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.34 |

இன்றைய சுபதினம்

சார்வரி வருடம் ஆவணி 09

ராகுகாலம் : மாலை : 3.00 - 4.30 வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00 வரை
யோகம்: மரணசித்த யோகம்
நட்சத்திரம்: விசாகம் இரவு 7.08
திதி: சப்தமி

தினகரன் விளம்பரம் 0112429367 விற்பனை பிரிவு 0112429444, 0112429378 ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk



துறைமுகநகரம்,மிதக்கும் சந்தை மற்றும் மெனிங் சந்தை ஆகியவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் நாளக்க கொடஹேவா அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.
(படம்: கெலும் லியனகே)

# 50,000 பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு; செப்டம்பர் 2ல் நியமனம் வழங்க முடிவு

## அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்கம் மேலும் 50,000 பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்க தீர்மானித்துள்ளதுடன் எதிர்வரும் செப்டம்பர் 2 ஆம் திகதி அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கையளிக்கப்படும் என பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார். பொது ஜன பெரமுன அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வரும் செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமைக்காக செய் நன்றி மறவாமல் 50,000 பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நியமனக் கடிதங்கள் தயாரிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் செப்டம்பர் 2 ஆம் திகதி நாடளாவிய அனைத்து பிரதேச செயலகங்கள் மூலமும் பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட வுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டில் தொழில் இன்றி உள்ள பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு, மற்றும் 06

# சஜீவ சாமிகரவிடம் 500 மில். நட்டஈடு கோரும் யோஷித

சிங்கராஜ வனத்தை அண்மித்த பகுதியில் தனக்குச் சொந்தமான பாரியளவிலான ஹோட்டலொன்று தொழிற்பட்டு வருவதாக முன்வைக்கப்பட்ட உண்மைக்கு புறம்பான, ஆதாரமற்ற வகையிலான கருத்து தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோஷித ராஜபக்ஷ தனது சட்டத்தரணி ஊடாக சுற்றுச்சூழல் ஆய்வாளர் சஜீவ சாமிகரவிடம் ஏழு நாட்களுக்குள் ரூபா 500 மில்லியன் நட்டஈடு கோரி நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

சிங்கராஜ வனத்திற்குள் யோஷித ராஜபக்ஷவுக்கு சொந்தமான ஹோட்டலொன்று காணப்படுவதாகவும் சிங்கராஜ ஊடாக வீதியொன்று நிர்மாணிக்கப்பட்டு வருவதானது அதனை அண்மித்த வீதியுடன் தொடர்புபடுத்துவதற்காவே எனவும் சஜீவ சாமிகர கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற ஊடக சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார்.

அவரது கருத்தில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லையென தெரிவித்துள்ள யோஷித ராஜபக்ஷ, அது ஆதாரமற்ற குற்றச்சாட்டு எனவும் இதனால் தனக்கும் தனது நன்மதிப்பிற்கும் களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்து நட்டஈடாக ரூபாய் 500 மில்லியன் கோரி நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

அத்துடன் அந்த கருத்தில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லை என ஒப்புக்கொண்டு தன்னிடம் மன்னிப்பு கோரல், ஊடக நிறுவனங்கள், சமூக வலைத்தளம் மற்றும் இணையத்தளங்களில் இந்த உண்மைக்கு புறம்பான செய்தி வெளியாகியிருப்பின் அதனை அவற்றிலிருந்து நீக்குமாறு உரிய நிறுவனம் அல்லது குறித்த தரப்பினருக்கு விழிப்பூட்டுதல் மற்றும் குறித்த செய்தியை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல், குறித்த கருத்தில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லை என ஊடக வெளியீடொன்றின் மூலம் ஊடகங்களுக்கு 06

# வறுமையை ஒழிப்பதற்கு முன்னுரிமை வழங்கி சமுர்த்தி திட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள்

## ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ



சமுர்த்தி நிவாரணத்தை நாட்டுக்கு சுமையாவதற்கு இடமளிக்காது குறைந்த வருமானம் பெறும் மக்களை பலப்படுத்தும் செயற்திட்டமாக மாற்றுங்கள் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

குறைந்த வருமானம் பெறுவோருக்கு புதிய வருமான வழிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமே அவர்களின் வருமானத்தை அதிகரித்து வறுமை மற்றும் சமூக ஏற்றத்தாழ்வை குறைக்க முடியும். அதனால் வறுமையை ஒழிப்பதற்கு முன்னுரிமை வழங்கி சமுர்த்தி செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அனைத்து குடும்பங்களினதும் வருமானத்தை அதிகரித்தல், கிராமிய பொருளாதாரத்தின் வளர்ச்சி மக்கள் மைய பொருளாதாரத்தை மேம்படுத்தல் என்ற விடயங்களை இதற்காக பயன்படுத்திக்கொள்ளலாம்.

சமுர்த்தி, மனைப் பொருளாதார, நுண்நிதி, சுயதொழில், தொழில் அபிவிருத்தி மற்றும் அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

சமுர்த்தி உதவி வழங்குவதற்காக வருடாந்தம் 50,000 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது. இந்த தொகை நாட்டுக்கு முதலீடாக வேண்டும். சமுர்த்தி பயனாளிகளை நிவாரணம் பெறும் 06

# அறிவுபூர்வமான அரசியலுக்குள் நுழைந்து நாம் செயற்பட வேண்டும்

## பேருவளை வரவேற்பு நிகழ்வில் அலி சப்ரி

**பேருவளை விசேட நிருபர்**



இந்நாட்டில் சிறுபான்மையினராக வாழும் முஸ்லிம் சமூகம் அறிவுபூர்வமான அரசியல் சித்தாந்தத்திற்குள் நுழைந்து செயல்படுவதன் ஊடாக சிறந்ததோர் எதிர்காலம் உதயமாகும் என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பேருவளை கெச்சிமலை தர்ஹாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் பேசும் போது அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் கூறியதாவது, நாட்டில் இன்னும் 20 அல்லது 30 வருடங்களுக்கு ராஜபக்ஷ ஆட்சி தொடரும்.

சென்ற ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம்கள் ஐந்து சதவீதமளவே பொதுஜன பெரமுனவுக்கு வாக்களித்தனர். எனினும் பொதுத் தேர்தலில் அதை விட சிறந்த முறையில் வாக்களித்துள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ 68 இலட்சம் வாக்குகளைப் பெறுவார் என்றும் பொதுத் தேர்தலில் 137 ஆசனங்களை பொதுஜன பெரமுன கைப்பற்றும் என்று நான் கூறிய போது சிலர் சிரித்தார்கள்.

தேசிய பட்டியல் மூலம் எம். பி. பதவியையோ அமைச்சர் பதவியையோ நான் கேட்கவில்லை. ஜனாதிபதியே இப்பதவியைத் தந்தார்.

தேசிய ரீதியாக நாட்டு மக்களுககு சேவை செய்யவே எனக்கு இப்பதவி வழங்கப்பட்டுள்ளது.

சமூகத்தை காட்டிக்கொடுக்க வரவில்லை. வழி நடத்தவே வந்துள்ளேன். சில விடயத்தில் விட்டுக்கொடுப்பு அவசியம். இனவாதம் பேசுவதில் பயனில்லை.

களவு செய்து பணம் சம்பாதிக்கவோ, கட்சி மாறி பணம் சம்பாதிக்கவோ நான் வரவில்லை. பொறுப்பை சரிவர நிறைவேற்ற வேண்டும். பதவிகள் அல்லாஹ் தந்த அமானிதமே.

நாம் ஒவ்வொரு நாட்டினதும் வரலாற்றினைப் புரட்டிப்பார்க்கின்ற பொழுது அந்த நாட்டில் வாழும் பெரும்பான்மை சமூகத்தினை எதிர்த்து முட்டி மோதி வெற்றி பெற்ற வரலாறு கிடையாது. 06

# சம்பந்தன், சீ.வி, ஹக்கீம், ரிஷாட்டின் இனவாத அரசியல் மக்களால் நிராகரிப்பு

## அதாவுல்லா, அங்கஜனுக்கு அமைச்சு பதவி அவசியம் - அமைச்சர் விமல்



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சீ.வி.விக்னேஸ்வரனின் இனவாத அரசியலை தமிழ் மக்கள் புறக்கணித்து சுதந்திரக் கட்சியூடாக எம்.பி ஒருவரை பாராளுமன்றம் அனுப்பியுள்ளனர். மறுபக்கம் ரவூப் ஹக்கீமை ஒதுக்கி ஏ.எல்.எம். அதாவுல்லா கிழக்கில் பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளார். தமிழ் முஸ்லிம் மக்கள் இனவாதிகளை நிராகரித்து வருவதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அனைத்து இனங்களுக்கும் சம அந்தஸ்து வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கம் என்று கூறிய அவர், அதாவுல்லாவிற்கும் அங்கஜனுக்கும் அரசாங்கம் அமைச்சு பதவிகள் வழங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

ஹோமாகமயில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"திருமண வீடொன்றுக்கு ஒருவர் குடித்து விட்டு வந்து சர்ச்சைகளில் ஈடுபட்டால், ஏனையவர்கள் அச்சப்படமாட்டார்கள். அதுபோன்றுதான், சீ.வி.விக்னேஸ்வரனின் செயற்பாடுகளும் காணப்படுகின்றன. 06

# ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு ராஜித, விதானகே இருவருக்கும் அழைப்பு

அரசியல் பழிவாங்கல் சம்பவங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷ விதானகே ஆகியோருக்கு அழைப்பாணை விடுத்துள்ளது.

அதன்படி எதிர்வரும் செப்டம்பர் 03 ஆம் திகதி இருவரையும் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கடந்த வெள்ளிக்கிழமை அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழுவில் ஆஜரானார்.

ஜூன் மாதத்தில், அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிசங்க சேனாதிபதி வழங்கிய முறைப்பாடு குறித்த விசாரணைக்காகவே ராஜித சேனாரத்ன ஆஜராகியிருந்தார்.

கடந்த ஆட்சியின் போது அரசியல் பழிவாங்கல் குற்றச்சாட்டுகள், நீதித்துறை மற்றும் பொலிஸார் 06

# சிறைச்சாலைகளின் பாதுகாப்பிற்கு பொலிஸ் விஷேட அதிரடிப்படை

**ஸாதிக் ஷிஹான்**



சிறைச்சாலைகளின் பாதுகாப்பிற்கு நேற்று முதல் பொலிஸ் விஷேட அதிரடிப் படை அதிகாரிகள் சேவையில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

நாட்டின் தேசிய புலனாய்வு, இராணுவ, பொலிஸ் புலனாய்வு பிரிவுகள் முப்படை, பொலிஸ், பொலிஸ் விஷேட அதிரடிப் படை மற்றும் சிறைச்சாலையுடன் இணைந்து விஷேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்

தம்புள்ளையிலுள்ள இலங்கை இராணுவத்தின் 53ஆவது படைப் பிரிவின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பிரதான வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்; இங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்:

வெலிக்கடை சிறை, மகஸின் சிறை, விளக்கமறியல் சிறை மற்றும் சிறைச்சாலை வைத்தியசாலை ஆகியன 06



நீதி அமைச்சர் அலிசப்ரி, பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வும் துஆப் பிரார்த்தனையும் நேற்று முன்தினம் மாலை பேருவளை கெச்சிமலை தர்காவில் சங்கைக்குரிய காலிப் அலவி ஹாஜியார் பின் அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் ஹாஜியார் அலவியதுல் காதிரி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மௌலவி சில்மி நூரி துஆ பிரார்த்தனை நடாத்தினார். இந்நிகழ்வில் நீதி அமைச்சர் அலிசப்ரி, பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான்பளீல் ஆகியோருக்கு தர்மகர்த்தாக்களினால் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்படுவதையும் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: பேருவளை விசேட நிருபர்)

# நாணயமாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 |
| குவைத் டினார் | 603.09 |
| ஓமான் ரியால் | 483.42 |
| கட்டார் ரியால் | 50.73 |
| சவூதி ரியால் | 49.54 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

கொழும்பு டொக்கியாட் நிறுவனம்

## நோர்வே நிறுவனத்திற்காக பத்து கப்பல்கள் தயாரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு டொக்கியாட் நிறுவனம் நோர்வேயிலுள்ள மிஸ்ஜ் இகோ பல்க் அஸ் நிறுவனத்திற்காக பொருட்கள் போக்குவரத்து கப்பல்கள் ஆறு உட்பட 10 கப்பல்களைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த செயற்திட்டத்திற்கான உடன்படிக்கை கடந்த மார்ச் மாதம் 14ம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில் 06

## அறிவோர் ஒன்று கூடல்

கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் அறிவோர் ஒன்று கூடல் நிகழ்வு புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கப் பேரவை உறுப்பினர் பேராசிரியர் தை. தனராஜின் தலைமையில் நடைபெறும். அவர் அறிமுகவுரையை நிகழ்த்துவார். இந்நிகழ்வில் "இலங்கையில் உயர்கல்வித்துறையில் சிக்கல்கள் ஒரு பார்வை" என்ற தலைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் உரை நிகழ்த்தவுள்ளார்.

06

குருநாகல் மேயர் கைது

## பிடியாணை தொடர்பில் இன்று தீர்ப்பு

குருநாகல் மாநகர சபை மேயர் துஷார சஞ்சீவ விதாரண உள்ளிட்ட சந்தேக நபர்கள் ஐவரை கைது செய்யுமாறு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் கடந்த 7ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட பிடியாணை அமுல்படுத்தப்படுவதை தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை இன்று வரை நீடிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த பிடியாணையை அமுல்படுத்தப்படுவதா?

06

பொறிவைத்து வேட்டை

## கூடுதல் தண்டனை வழங்க புதிய சட்டம்

அமைச்சர் சீ.பி. ரத்னாயக்க

வன விலங்குகளை வேட்டையாடுவதற்கு பொறி வைக்கும் நபர்களுக்கு நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தண்டனையை அதிகரிக்க சட்ட திருத்தம் மேற்கொள்ள இருப்பதாக வன ஜீவராசிகள் மற்றும் வனவள அபிவிருத்தி அமைச்சர் சீ.பி. ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விரைவில் 06

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் ஆவணி மாதம் 09ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 முஹர்ரம் பிறை 05

**குறள் தரும் சிந்தனை**



இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை

இல்லறத்தில் வாழ்பவனாகச் சொல்லப்படுகிறவன் அறத்தின் இயல்பை உடைய மூவருக்கும் நல்வழியில் நிலை பெற்ற துணையாவான்.

## தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் வழங்கிய செய்தி

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் முக்கியமான செய்தியை முன்வைத்திருக்கின்றனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் தமிழ் மக்கள் இவ்வாறான செய்தியை வழங்கியிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

அதாவது, தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் தாமே என்று த.தே.கூட்டமைப்பு கூறிவந்தது. 2001இல் ஸ்தாபிக்கப்பட்ட இக்கூட்டமைப்பு ஒவ்வொரு பொதுத்தேர்தலிலும் போட்டியிட்டு வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் அதிக பாராளுமன்ற ஆசனங்களை வெற்றிபெற்று வந்ததோடு, தாமே அம்மக்களின் ஏக பிரதிநிதிகள் என்றும் கூறிவந்தது.

அதிலும் 2015 முதல் 19 வரையான காலப் பகுதியில் அன்றைய அரசாங்கத்தின் நிழல் பங்காளியாக எதிர்க்கட்சியிலிருந்து இக்கூட்டமைப்பு செயற்பட்டது. இருந்தும் கூட தமிழ் மக்களின் நியாயமான எதிர்பார்ப்புகளோ, சாதாரண பிரச்சினைகளோ தீர்த்து வைக்கப்பட இக்கூட்டமைப்பினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று கூறிய போதிலும் அம்மக்களின் எதிர்பார்ப்புக்கள், தேவைகள் குறித்து கூட கவனம் செலுத்த தமிழ்க் கூட்டமைப்பு தவறியது.

இவ்வாறான சூழலில் கடந்த 05 ஆம் திகதி நடந்த பாராளுமன்ற தேர்தலின் ஊடாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் இந்த செய்தியை வழங்கி இருக்கின்றனர். அதன் பிரதான செய்தி த.தே. கூட்டமைப்பு பெற்றுக் கொண்ட பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையை பத்தாக வீழ்ச்சியடையச் செய்திருப்பதாகும்.

இத்தேர்தல் முடிவின்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மூன்று ஆசனங்களை மாத்திரம் பெற்றுள்ள இக்கூட்டமைப்பு, மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு ஆசனங்களையும் வன்னி மாவட்டத்தில் மூன்று ஆசனங்களையும், திருகோணமலை மாவட்டத்தில் ஒரு ஆசனத்தையும் பெற்று தேசிய பட்டியலுடன் பத்து ஆசனங்களைப் பெற்றிருக்கிறது. அம்பாறை மாவட்டத்தில் ஒரு ஆசனத்தையும் வெற்றி பெறவில்லை.

ஆனால்,நீண்ட காலத்திற்கு பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாழ் குடாநாட்டில் இத்தேர்தலில் போட்டியிட்டு 66,579 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 61,464 வாக்குகளைப் பெற்று யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களில் இரண்டு ஆசனங்களையும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 67,766 வாக்குகளைப் பெற்று தேசியப் பட்டியலுடன் இரு ஆசனங்களையும், சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி 51,301 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் 33,424 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் 67,692 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் என்றபடி பாராளுமன்றப் பிரதிநிதித்துவம்பெற்றிருக்கின்றன.

வடக்கு, கிழக்கு மாவட்டங்களிலிருந்து இவ்வாறான தேர்தல் முடிவு வெளியாகியிருப்பது அண்மைக் காலத்தில் இதுவே முதற்தடவையாகும். இம்முடிவின்படி தமிழ் மக்களின் ஏகபிரதிநிதி என்ற அந்தஸ்தை த.தே.கூட்டமைப்பு இழந்துள்ளது என்பதே அரசியல் தலைவர்களதும் அவதானிகளதும் கருத்தாக உள்ளது. தாம் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களின் எதிர்பார்ப்புக்களையும் தேவைகளையும் நிறைவேற்றத் தவறியதன் விளைவாகவே இவ்வாறான பின்னடைவை இக்கூட்டமைப்பு சந்தித்திருக்கிறது.

அதேநேரம், வடக்கு கிழக்கு தமிழ் மக்கள், ஸ்ரீல.பொ.பெரமுன, ஸ்ரீல.சு. கட்சி, ஈ.பி.டி.பி., தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆகிய கட்சிகளின் ஊடாகவும் தம் பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்திருக்கின்றனர். தம் பிரதிநிதிகள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்க வேண்டும் என்பதை அம்மக்கள் விரும்புவதையே எடுத்துக் காட்டுகின்றது. தம் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிறைவேற்றி வைக்காது என்ற முடிவுக்கு மக்கள் வந்திருப்பதையே இது வெளிப்படுத்தி நிற்கின்றது.

அத்தோடு இக்கூட்டமைப்பின் பேச்சை தொடர்ந்தும் கேட்டுக் கொண்டிருப்பதற்கு தமிழ் மக்கள் தயாரில்லை என்பதையும் இத்தேர்தல் முடிவு எடுத்துக் காட்டுகின்றது. தாமும் நாட்டில் வாழும் ஏனைய எல்லா மக்களுடனும் இணைந்து ஒற்றுமையாகவும் புரிந்துணர்வுடனும் வாழ வேண்டும். கூட்டமைப்பினரின் பேச்சைக் கேட்டு தனித்திருப்பதும் பிரிந்திருப்பதும் சாத்தியமானதல்ல. ஆளுக்காள் புரிந்துணர்வு நல்லிணக்கத்துடன் வாழும் போது தான் சுபீட்சமாகவும் வளமாகவும் வாழ வழி கிடைக்கும்.

இந்த நிலையில்தான் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் இம்முறை வழங்கியிருக்கும் தேர்தல் முடிவுகளை நோக்க வேண்டியுள்ளது.

ஆகவே, த.தே. கூட்டமைப்பு தங்களது நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் மக்களின் தேவைகளுக்கேற்ப செயற்பட வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பும்கூட. அதனால், நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி வடக்கு, கிழக்கு உட்பட முழு நாட்டினதும் துரித அபிவிருத்திக்காக ஜனாதிபதி, அரசாங்கத்துடன் கைகோர்த்து செயற்பட த.தே. கூட்டமைப்பு முன்வர வேண்டும். அதுவேஇன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# பௌர்ணமி தினத்தன்று பௌத்த மக்கள் கடைப்பிடிக்கும் அஷ்டாங்க உபோசத சீலம்

எதிர்வரும் முதலாம் திகதி புனித பௌர்ணமி தினமாகும். அன்றைய தினம் பௌத்த உபாசகர்கள், உபாசகிகள் புனித அரஹத் தேரர்களை கௌரவிக்கும் வகையில் அவர்களை கருத்திற் கொண்டு புனித அஷ்டாங்க உபோசத சீலத்தை கடைப்பிடிப்பார்கள். பௌத்த உபாசகர்கள், உபாசகிகள் வழமையாக கடைப்பிடிக்கும் சீலம் பஞ்ச சீலமாகும். பஞ்ச சீலம் எனும் பொழுது அவர்

1. உயிர்களை கொல்லாமல் இருப்பார், 2. திருடாமல் இருப்பார், 3. தகாத காமத்தில் ஈடுபடாமல் இருப்பார், 4.பொய் பேசாமல் இருப்பார், 5.மதுபோதை உபயோகிக்காமல் இருப்பார்.


இது பஞ்ச சீலமாகும். அஷ்டாங்க உபோசத சீலம் எனும் பொழுது மேல் குறிப்பிட்ட மூன்றாவது சீலத்துக்கு பதிலாக பிரம்மச்சாரி சீலத்தை கடைப்பிடிப்பார்கள், மற்றும் கீழ் குறிப்பிட்டுள்ள மூன்று சீலத்தையும் கடைப்பிடிப்பார்கள்.

★ மதியம் 12 மணிக்கு மேல் உணவு உட்கொள்ளாமல் இருப்பார்★நடனம் ஆடுதல், இசைத்தல், பாடுதல் போன்ற இச்சைகளை பூர்த்தி செய்யும் செயல்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பார் மற்றும் தன்னை அலங்கரித்துக் கொள்ள மாட்டார்.

வாசனைத் திரவியங்கள் பூசிக் கொள்வது, மலர் மாலைகளை அணிவது போன்றவற்றை தவிர்த்து சாதாரணமான வாழ்க்கையை வாழ்வார் ★உயர்ந்த சொகுசான ஆசனங்களை உபயோகிக்காமல் இருப்பார்.

இது பௌர்ணமி நாட்களில் கடைப்பிடிக்கும் அஷ்டாங்க உபோசத சீலமாகும்.

பௌர்ணமி தினங்களில் உபாசகர்கள், உபாசகிகள் புத்த பகவான், தர்மம் மற்றும் சங்கையர் ஆகிய மும்மணிகளின் குணங்களை சிந்தித்தவாறே தர்மத்தின் வழியில் ஒரு நாள் பூராகவும் வாழ்வார்கள்.



அதிவணக்கத்திற்குரிய கிரிபத்கொடை ஞானானந்த தேரர்

பாக்கியமுள்ள புத்த பகவான் போதித்த தர்மத்தை கற்றுக் கொள்ளும் போது புத்த பகவான் கர்மம் தொடர்பாக போதித்த தர்மத்தை அறிந்து கொள்வது முக்கியமானதாகும். அந்த வகையில் நாம் கர்மம் தொடர்பாக புத்த பகவான் என்ன போதித்துள்ளார் என்பதைக் கற்றுக் கொள்வோம்.

**கர்மம் என்றால் என்ன?**

புண்ணியமிகு பிக்குகளே, நான் சிந்தனையையே கர்மம் என்பேன். சிந்தனையை அடிப்படையாகக் கொண்டே உடலினாலும் வார்த்தைகளினாலும் மனதினாலும் கர்மங்கள் செய்ய முடியும். (நிப்பேதிக சூத்திரம்)

தேவர்கள் மற்றும் மனிதர்களைக் கொண்ட சகல உலகவாசிகளாலும் இன்னும் விடுவித்துக் கொள்ள முடியாத ஒரு மர்மமான விடுகதையே இந்த கர்மம். எனினும் எமது பரமகுருவான பாக்கியமுள்ள புத்த பகவான் இந்த கர்மத்தின் இயல்பு, அது பலனளிக்கும் விதம், கர்மத்திலிருந்து விடுதலையடையும் முறை என்பவை தொடர்பாக உள்ளங்கை நெல்லிக் கனியைப் போன்று உய்த்துணர்ந்தார்.

மனித வரலாற்றின் பொற்காலத்தினை உருவாக்கிய எமது புத்த பகவான் கர்மம் தொடர்பாக வரைவிலக்கணப்படுத்தியுள்ள முறையிலேயே அவரது ஒப்பற்ற ஞானத்தினை எம்மால் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

கர்மம் அல்லது சிந்தனை, தோற்றம் பெறுவது காரணங்களினாலேயே ஆகும். காரண காரியம் இன்றி எதுவுமில்லை.

சிந்தனைக்கு காரணமாக அமைவது ஸ்பரிசமாகும். ஸ்பரிசம் என்றால் அறு வகைப் புலன்களுடன் புறவிடயங்கள் மற்றும் விஞ்ஞானம் (நுண்ணுணர்வு) எனும் மூன்றும் சேர்வதாகும். உதாரணமாக நாம் கண் எனும் புலனை எடுத்துக் கொள்வோம். கண்ணால் கேட்கவோ நுகரவோ முடியாது.

கண்ணினால் பார்க்க மட்டுமே முடியும். கண்ணும் உருவமும் எனும் இரு காரணிகள் ஒன்று சேர்வதால் அங்கு சக்கு விஞ்ஞானம் (விசேடமாக அறிந்து கொள்ளும் இயல்பு) கண்ணில் தோற்றம் பெறும். இம் மூன்றின் சேர்க்கையே ஸ்பரிசமாகும்.

**கண் + உருவம் + விஞ்ஞானம் = கண்ணின் ஸ்பரிசம்**

**காது + சப்தம் + விஞ்ஞானம் = காதின் ஸ்பரிசம்**

**நாசி + மணம் + விஞ்ஞானம் = மூக்கின் ஸ்பரிசம்**

**நாவு + சுவை + விஞ்ஞானம் = நாவின் ஸ்பரிசம்**

**உடல் + உடலுணர்வு + விஞ்ஞானம் ஸ்ர= உடலின் ஸ்பரிசம்**

**மனம் + எண்ணம் + விஞ்ஞானம் = மனதின் ஸ்பரிசம்**

அந்த ஸ்பரிசத்தினால் ரூப சஞ்சேதனம் தோன்றும். அதாவது கண்ணினால் கண்ட உருவத்தினை அடிப்படையாகக் கொண்ட சிந்தனையின் தொழிற்பாடாகும்.

அப்போது மனம், வாக்கு, உடம்பு எனும் மூன்றினாலும் கர்மம் ஆற்றுதல் இடம்பெறும். அனைத்து கர்மங்களும் இடம்பெறுவதற்கான பின்னணி இதுவாகும். நீங்களும் இவ்வாறான தர்மம் தொர்பான புத்தகங்களை இலவசமாக பெற்றுக் கொள்ள விருப்பினால் எமது Tamil Buddhist முகநூல் பக்கம் மூலமாக அல்லது தொலைபேசி இலக்கம் 071 232 8846 மூலமாக எங்களை தொடர்புகொள்ளவும்.

தமிழ் பௌத்தன் TAMIL BUDDHIST

# ஊடகத்துறையில் ஆரோக்கியமான கலாசாரம் உருவாக்கப்பட வேண்டும்

**நேத்திரா ரி.வி 'மக்கள் மேடை' கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்**

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தமிழ் அலைவரிசையான நேத்திரா தொலைக்காட்சியில் கடந்த ஞாயிறு (23.08.2020 ) இரவு 7.30 இற்கு ஒளிபரப்பான 'மக்கள் மேடை'எனும் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய வெகுஜன மற்றும் தபால் சேவைகள் தொழில் அபிவிருத்தி அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தமிழ் ஊடக துறை சீர்திருத்த திட்டங்கள் குறித்து விளக்கிக் கூறினார். "உள்ளதை உள்ளவாறே கூறும் கலாசாரமே ஊடகத் துறையின் சுபீட்சம்" என்று அவர் குறிப்பிட்டார். பிராந்திய செய்தி நிருபர்களின் தேவை குறித்தும் கூடுதல் கவனம் செலுத்த இருப்பதாக அவர் தெரிவித்தார். புதிய ஊடக மூலங்களான சமூக வலைத்தளங்கள் மற்றும் இணையத்தள ஊடக கலாசாரங்களில் ஆரோக்கியமான மாற்றங்கள் உருவாக வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் வலியுறுத்தினார்.



அரச ஊடகங்களில் உள்ள தமிழ்மொழிசார் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வியாழேந்திரன் குறிப்பிட்டார்.

சிறந்த ஊடகவியலாளர்களை உருவாக்க ஊடகக் கல்வி தரமும் உயர்த்தப்பட்டு பட்டப் படிப்பு வரை பரிமாணங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அமைச்சுப் பொறுப்பை ஏற்ற பின்னர், அரச ஊடகம் ஒன்றில் இடம்பெற்ற முதலாவது நேர்காணல் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்ச்சியில் இராஜாங்க அமைச்சரை நேர்கண்டு உரையாடியவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜெயரஞ்சன் யோகராஜ் என்பது குறிப்பிடத்தக்கது.



# காங்கிரஸின் தலைமையை ஏற்க பொருத்தமான ஒரேயொரு நபர்



காங்கிரஸ் கட்சியின் இடைக்கால தலைவர் பொறுப்பில் இருந்து சோனியா காந்தி விலக விருப்பம் தெரிவித்துள்ள நிலையில், கட்சிக்கு நேரு குடும்பத்தை சேராத ஒருவர் தலைவராக வேண்டும் என்று பிரியங்கா காந்தி கூறியிருந்த நிலையில், தேசிய கட்சியான காங்கிரசுக்கு அடுத்த தலைவர் யார் என்ற கேள்வி எழுந்து வருகிறது. குறிப்பாக ப.சிதம்பரம் அடுத்த தலைவராக உருவெடுப்பாரா என்ற எதிர்பார்ப்பும் எழுந்து வருகிறது.

நேரு குடும்பத்தை சேர்ந்தவர்கள் வழிநடத்த வேண்டும் என்று ஒரு தரப்பும், இனி அந்த குடும்பத்தில் இருந்து யாருமே தலைமைப் பொறுப்புக்கு வரக் கூடாது என்று ஒரு தரப்பும் மாறி மாறி பேச ஆரம்பித்துள்ளன.. இதற்கு நடுவில், எத்தனையோ முறை முதல்வர் பொறுப்பை வகித்தவர்களும், எம்.பிக்களாக பதவி வகித்தவர்களும், இந்த தலைமை பதவிக்கு ஆர்வம் காட்டியும் வருகின்றனர்.

அவர்களில் அசோக் கெலாட், கமல்நாத், ஏ.கே. ஆண்டனி, சசிதரூர் என்று வரிசை நீண்டு கொண்டே போனாலும், கர்நாடகத்தின் மல்லிகார்ஜுன கார்கே, தமிழகத்தின் ப.சிதம்பரத்தின் பெயர் சில தினங்களாகவே அடிபட்டு வருகிறது.

ஆனால் இதற்கு நிறைய எதிர்ப்புகளும், சலசலப்புகளும் கிளம்பி வருகின்றன. அதற்கு நிறைய காரணங்களும் உள்ளன.

டெல்லி சட்டமன்றத் தேர்தலில் ஒன்றில் கூட காங்கிரஸ் வெற்றி பெறவில்லை. மாறாக, ஆம்ஆத்மி அமோக வெற்றி பெற்றது. அப்போது, டெல்லி மக்களுக்கு சல்யூட் அடிப்பதாக சிதம்பரம் சொன்ன வாழ்த்து பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. போதாக்குறைக்கு ஊழல் குற்றச்சாட்டுகள் வரிசைப்படுத்தப்பட்டு விமர்சிக்கப்பட்டன.

இருந்தாலும், சிதம்பரத்திடம் தலைமைப் பொறுப்பை ஒப்படைக்க சோனியாவே ஒரு கட்டத்தில் முன்வந்தாகவும் செய்திகள் கசிந்தன. ராஜீவின் மிக நெருங்கிய நண்பரான சிதம்பரத்தின் மீது சோனியாவுக்கு எப்போதுமே மிகுந்த மரியாதை உண்டு. இவரிடமே பொறுப்பை ஒப்படைக்கலாம் என்று சோனியா கருதி உள்ளார். அதனால்தான் இன்றும் தலைமை பதவி பட்டியலில் உள்ளவர்களில் ப.சிதம்பரம் பெயர் தவிர்க்க முடியாமல் உள்ளது.

இந்த காரணங்களுக்காக மட்டுமில்லை. பா.ஜ.கவை சித்தாந்த ரீதியாக மட்டுமல்லாமல், சர்வதேச அரசியல், பொருளாதார ரீதியாகவும் நாசூக்காகவும் அதிரடியாகவும் கையாளக் கூடிய சரியான நபராக இருப்பார் என்பதும் சிதம்பரம் மீது வைக்கப்பட்டுள்ள நம்பிக்கை ஆகும். சமீப காலமாக, அதாவது சிதம்பரம் திகாருக்கு சென்று வந்ததில் இருந்தே அவரது ஒவ்வொரு பேட்டியும், கருத்தும், விமர்சனங்களும் பா.ஜ.கவை நிலைகுலைய வைத்து வருகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

பிரதமர் நரேந்திர மோடியின் ஒவ்வொரு அசைவுக்கும், சிதம்பரத்தை போல் எதிராக குரல் கொடுப்பவர் யாரும் இல்லை. இப்படி உடனுக்குடன் எதிர்வினை ஆற்றுவதும், புள்ளிவிபரங்களுடன் தகவலை எடுத்து வைத்து அவர்களை கேள்வி கேட்கவும் சிதம்பரத்துக்கு கூடுதல் தகுதியும் உள்ளதாகவே கூறப்படுகிறது. காரணம் பா.ஜ.க தரப்பில் மற்றவர்களை விட புள்ளிவிபரத்துடன் யாராவது பேசினால் அவர்களைப் பார்த்துதான் அதிகம் பயப்படுவார்கள்.

ஆனால், இவரை தலைமை பதவியில் உட்கார வைப்பார்களா? தமிழகத்தை சேர்ந்த ஒருவரை முதன்மைப் படுத்தினால் அகில இந்திய அளவில் காங்கிரஸார் அதை ஏற்பார்களா என்ற குழப்பமும் உள்ளது.

காரணம், என்ன இருந்தாலும் தென்னிந்தியர் ஒருவரை தலைவராக ஏற்க வட இந்திய மூத்த தலைவர்கள் முன்வர மாட்டார்கள் என்பதே நிதர்சனம். அது எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி தென்னிந்தியத் தலைவர்களின் தலைமையை ஏற்க வட இந்தியத் தலைவர்கள் ஒத்துக் கொள்வதே கிடையாது. பி.வி.நரசிம்மராவ் மட்டும் இதில் விதிவிலக்காக இருந்தார்.

# புதிதாக அரசியலமைப்பொன்றை உருவாக்கவே மக்கள் எமக்கு ஆணை



## அமைச்சர் உதய கம்மன்பிலவுடன் சந்திப்பு

**பழைய சட்டைக்கு புதிய தையல், பூச்சு போடுவதை விட புதிதாகவே ஒரு சட்டையை தைத்து விடுங்கள் என்று சொல்வதைப் போல, பழைய அரசியலமைப்புக்கு திருத்தங்களை கொண்டு வராமல் புதிதாகவே ஒரு அரசியலமைப்பை உருவாக்குவதற்காக மக்கள் இந்த அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொடுத்திருக்கிறார்கள். மக்கள் கொடுத்துள்ள அந்த ஆணையை கூடிய விரைவில் நிறைவேற்ற வேண்டும்' என்று வலு சக்தி அமைச்சரும் இணை அமைச்சரவை பேச்சாளருமான உதய கம்மன்பில கூறுகிறார்.**

### 'டைனோசர்களுக்கு என்ன நடந்ததோ அதேதான் இன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கும் நடந்துள்ளது. சூழலுடன் ஒத்துப் போகாவிட்டால் உயிர் வாழ முடியாது. ரணிலுக்கு ஏற்பட்ட அதே நிலைமை சஜித்துக்கும் ஏற்படும்'

அமைச்சர் உதய கம்மன்பில அண்மையில் எமக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு கூறினார்.

**கேள்வி: 19ஆம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்து விட்டு 20ஆம் திருத்தத்தை கொண்டு வர அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனை விரிவாக விளக்க முடியுமா?**

**பதில்:** 19ஆம் திருத்தச் சட்டம் அரச விவகாரங்களில் பல பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளதாக அத்திருத்தச் சட்டத்தை உருவாக்கியவர்களும் வகுத்தவர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். குறிப்பாக ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறு அரசியல் பிரிவில் உள்ளவர்களாக இருப்பின் இப்பிரச்சினைகள் சிக்கலை ஏற்படுத்துகின்றன. எனவே 2015 முதல் 2019 வரை அதிகாரத்தில் இருந்த நல்லாட்சி அரசாங்கம் முன்னேற முடியாமல் பல பிரச்சினைகளைச் சந்தித்து வந்தது.

20ஆம் திருத்தச் சட்டத்தை நாம் அறிமுகப்படுத்துவது இது போன்ற சிக்கல் நிலை மீண்டும் வரக் கூடாது என்பதற்காகத்தான். நாம் 19ஆம் திருத்தத்தை ரத்து செய்தவுடன் ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பான கட்டுப்பாட்டு நீங்கி விடும். அது ஐந்து வருடங்களுக்குப் பதில் ஆறு வருடங்களாக மாறும். எனினும் அவ்வாறு ஜனாதிபதியின் பதவிக் காலம் நீடிப்பதை நாம் விரும்பவில்லை. எனவே அவ்வாறான 5 வருட காலவரையறை 20ஆம் திருத்தத்தில் இடம்பெறும். இவ்வாறான சில அம்சங்கள் 19ஆம் திருத்தத்தில் இருப்பதைப் போன்றே இருக்கும்.

எமது முதலாவது அமைச்சரவை, கூட்டத்தில் நாம் இது பற்றி கலந்துரையாடினோம். 20ஆம் திருத்தச் சட்டத்தை வகுக்குமாறு நாம் நீதி அமைச்சருக்கு அதிகாரம் வழங்கினோம். அவர் அதனை வகுத்ததும் அமைச்சரவை உபகுழுவொன்று அதனை மீளாய்வு செய்யும். அந்த அமைச்சரவை உபகுழுவில் நானும் அங்கம் வகிக்கிறேன். அந்த குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக அமைச்சர்களான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், நிமல் சிறிபால டி சில்வா, தினேஷ் குணவர்தன மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி ஆகியோர் உள்ளனர். நாம் அந்த 20ஆம் திருத்த நகலை பரிசீலித்து அதனை அமைச்சரவையின் பார்வைக்கு அனுப்புவோம்.

**கேள்வி: தற்போதைய நிலையில் வெளிநாட்டு அரசியலமைப்பு மாதிரி எதனையும் பின்பற்றாத உள்ளூர் அரசியலமைப்பொன்றே தேவையாக இருப்பதாக அரசாங்கம் கூறி வருகிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

**பதில்:** விகிதாசார பிரதிநிதித்துவத்தின்படி எமது அரசாங்கத்துக்கு அதிக ஆசனங்கள் கிடைத்தன. எனினும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற எமக்கு இன்னும் ஐந்து ஆசனங்கள் குறைவாக இருந்தன. எனினும் எமக்கு ஆதரவு வழங்கிய கட்சிகளின் ஆசனங்களை கணக்கில் எடுக்கும் போது எமது கூட்டணிக்கு போதுமான மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தது.

தற்போதைய அரசியலமைப்பை தொடர்வதற்கு மக்கள் எமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொடுக்கவில்லை. குறிப்பிட்டுச் சொல்வதானால் பழைய சட்டைக்கு புதிய தையல் பூச்சு வேண்டாம். புதிதாகவே ஒரு சட்டையை தைத்துக் கொள்ளுங்கள் என்றே மக்கள் எமக்கு ஆணை வழங்கினர். எனவே நாம் அந்த ஆணையின்படியே செயற்பட வேண்டும். அதனால்தான் எமது முதலாவது அமைச்சரவை கூட்டத்திலேயே புதிய அரசியலமைப்பை வகுக்குமாறு நாம் நீதி அமைச்சரிடம் கூறினோம்.

1978 ஆம் வருட அரசியலமைப்பை எடுத்துக் கொண்டால் அது பிரெஞ்சு, அமெரிக்க மற்றும் பிரிடிஷ் அரசியலமைப்பு முறைகளின் கலவையாகும். அது எமது சரித்திரம் மற்றும் கலாசாரத்துக்கு ஏற்றதாக இல்லை. 1978 முதல் பல்வேறு அரசியலமைப்பு நகல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களினால் தூதரகங்களின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப அவை தயாரிக்கப்பட்டன. அவ்வாறான அரசியலமைப்பொன்று எமது மக்களுக்கு தேவையில்லை. எங்கள் நாட்டின் அபிலாஷைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியலமைப்பே எமக்குத் வேண்டும். அவ்வாறான ஒரு புதிய அரசியலமைப்பையே நாம் உருவாக்க விழைகிறோம்.

**கேள்வி: 73 வருடங்களின் பின்னர் இம்முறை பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவர் இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது. நீங்கள் இதனை எவ்வாறு காண்கிறீர்கள்?**

**பதில்:** டைனோசர்களுக்கு என்ன நடந்ததோ அதேதான் இன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கும் நடந்துள்ளது. சூழலுடன் ஒத்துப் போகாவிட்டால் உயிர் வாழ முடியாது. நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் 40 நாட்களின் பின்னர் நுகேகொடையில் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியொன்று இடம்பெற்றது. அப்போதே மக்களின் உணர்வுகளை அரசாங்கம் நாடி பிடித்துப் பார்த்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யத் தவறி விட்டனர். அதன் பின்னர் 2018 உள்ளூராட்சி தேர்தல் பெறுபேறுகளை அவர்கள் ஆராய்ந்து பார்த்திருக்க வேண்டும். அதனையும் அவர்கள் செய்யத் தவறி விட்டனர். ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி இந்த நாட்டை பலமற்றதாக ஆக்கி விட்டது. மக்கள் அதற்கு எதிரான தமது அதிருப்தியை சொல்லி விட்டனர். ரணிலின் பின்னர் வந்த சஜித்தும் அதே நிலையிலேயே தொடர்கிறார். ரணிலுக்கு ஏற்பட்ட அதே நிலையை சஜித்துக்கும் ஏற்படும்.

**கேள்வி: 9ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வில் 223 உறுப்பினர்கள் மாத்திரமே கலந்து கொண்டனர். ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அபே ஜனபலய கட்சிகளின் தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வில் கலந்து கொள்ளவில்லை. இது பற்றி என்ன கூறுகின்றீர்கள்.**

**பதில்:** பாராளுமன்றத்தில் இவ்வாறு நடப்பது இதுமுதல் முறையல்ல. 1989 இல் ஐக்கிய சோஷலிச கூட்டணிக்கு ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் கிடைத்தது. அந்த ஆசனத்தை யாருக்கு கொடுப்பது என்பதில் கூட்டணியின் பங்காளிகளால் ஒரு இணக்கத்துக்கு வர முடியவில்லை. அதனால் அந்த பாராளுமன்ற ஆசனம் மூன்று வருடங்களாக வெறுமையாகவே இருந்தது. பாராளுமன்றத்தின் அரைவாசிக் காலம் சென்ற பின்னர் ராஜா கொல்லுரேவை அந்த ஆசனத்துக்கு நியமித்தனர். எனவே இது போன்ற சிக்கல் நிலை முன்னரும் இடம்பெற்றுள்ளது.

**கேள்வி: அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்கள் கிடைத்துள்ள நிலையில், பலமான எதிர்க்கட்சி இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இது ஜனநாயகத்துக்கு ஆரோக்கியமாக இல்லை என்று கூறப்படுகிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

**பதில்:** ஐக்கிய மக்கள் சக்திக்கு பாராளுமன்றத்தில் 54 ஆசனங்களே உள்ளன. முன்னைய பாராளுமன்றத்தில் பலமான எதிர்க்கட்சி இருந்தது. 1977 இல் பாராளுமன்றத்தில் இருந்த எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் எட்டுப் பேர் மட்டுமே. எனவே இந்த நிலை புதிதான ஒன்றல்ல. எனினும் ஒரு பலமான பாராளுமன்றத்துக்குள் நாமே எதிர்க்கட்சியாகவும் மாறுவோம். அரசாங்கம் தவறான வழியில் சென்றால் நாம் அதை தட்டிக் கேட்போம். எனவே பாராளுமன்றத்தில் பலமான எதிர்க்கட்சியின் தேவையை நாம் இதன் மூலம் ஏற்படுத்துவோம்.

**கேள்வி: பாராளுமன்றத்தில் 81 பேர் புதுமுகங்களாக உள்ளனர். எனவே பழைய பாராளுமன்ற உறுப்பினர் உரிய வகையில் மக்கள் சேவையை ஆற்றத் தவறியதால் மக்கள் அவர்களை நிராகரித்து விட்டனர் என்று கூறலாமா?**

**பதில்:** ஆட்சி மாற்றம் ஏற்படும் போது இவ்வாறான விடயங்களும் இடம்பெறுவதுண்டு. தோல்வியடைந்தவர்களில் பலர் எதிர்க்கட்சியில் இருந்தவர்கள். முன்னைய பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 106 உறுப்பினர்கள் இருந்தனர். அது இப்போது 1 உறுப்பினர் என்ற நிலைக்கு வந்துள்ளது. அத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஜே. வி. பி உறுப்பினர்களும் தோல்வியடைந்துள்ளனர்.

இந்நிலையில் புதுமுகங்களைப் பார்க்கும் போது அவர்கள் இளைஞர்களாகவும், துடிப்பு மிக்கவர்களாகவும் காணப்படுகின்றனர். அவர்கள் பாராளுமன்றத்துக்கு புதிய வெளிச்சத்தைக் கொண்டு வந்துள்ளனர். சிரேஷ்டர்கள் என்ற ரீதியில் நாம் அவர்களுக்கு உதவி செய்து வழிகாட்டுவோம்.

உதித் குமாரசிங்க ...
தமிழில்: ராமலிங்கம்

# மருதமுனையின் பாரம்பரிய நெசவுத் கைத்தொழிலுக்கு வந்திருக்கும் பேராபத்து!



'பரம்பரை பரம்பரையாக நாங்கள் நெசவுத் தொழில் செய்துதான் சீவியம் நடத்தி வருகிறோம். நெசவுத் தொழிலை விட்டால் எங்களுக்கு வேறு தொழிலும் தெரியாது. கொரோனா தொற்று காரணமாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நெசவுத் தொழிலுக்கான நூல் போன்ற மூலப்பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம். கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக நெசவுத் தொழில் செய்ய முடியாது கைத்தறி எல்லாம் தூசு பிடித்துப் போய்க் கிடக்கின்றது. நெசவுத் தொழிலை நம்பியிருந்த எல் லோரும் சரியான ஷேட்டத்தில் இருக்கிறோம். நெசவுக்குரிய மூலப் பொருட்களைப் பெற முடியாது வாழ்வா தாரத்தை இழந்து நிற்கும் நெசவாளர்களுக்கு அரசாங்கம் ஏதாவது மானியங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.' இவ்வாறு நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வரும் அம்பாறை மாவட்டம் மருதமுனையைச் சேர்ந்த பஹ்மி கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் பாரம்பரிய நெசவுக் கைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் அதிகம் பேர் உள்ளனர். அதிலும் நெசவுக் கைத்தொழிலுக்கு பேர் போன கிராமமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள மருதமுனை கிராமம் உள்ளது. மருதமுனை என்றதும் முதலில் நினைவுக்கு வருவது நெசவுக் கைத்தொழிலாகும்.

ஒரு காலத்தில் மருதமுனை நெசவு கைத்தொழில் பற்றி பாடசாலை மாணவர்களுக்கான பாடப் புத்தகம் ஒன்றில் ஒரு பாட அலகு கூட இருந்தது. இங்கு உற்பத்தி செய்யப்பட்ட நெசவினால் ஆன ஆண்களுக்கான சாரம், பெண்களுக்கான சேலை மற்றும் நெசவுத்துணிகள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. அவை உள்நாட்டில் பல பாகங்களுக்கும் கொண்டு சென்று விற்பனை செய்யப்பட்டன. நெசவு ஆடைகளுக்கு நல்ல கிராக்கியும் இருந்தது. தற்போதும் நெசவுத்துணிகளுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்து வருகின்றது.

இந்நிலையில் கடந்த மார்ச் மாதத்திற்குப் பின்னர் நெசவுக் கைத்தொழிலை நம்பி தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வந்த பல குடும்பங்கள் அத்தொழிலை இழந்து நிர்கதிக்குள்ளாகியுள்ளன. உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் காரணமாக உலக நாடுகளின் பொருளாதாரம் சரிவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. அத்துடன் தனிநபர் வருமானமும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பாரம்பரிய குடிசைக் கைத்தொழில்களை செய்து வந்தவர்கள் தங்கள் தொழிலை இழந்துள்ளனர். அன்றாடம் உண்பதற்குக் கூட வருமானம் இன்றி அல்லல்படுகின்றனர். அதிலொரு பகுதியினராக நெசவுக் கைத்தொழிலாளர்கள் இருக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் நெசவுக் கைத்தொழிலை கூட்டாகவும், தனியாகவும் முன்னெடுத்த பலரும் நெசவுக்குரிய மூலப்பொருட்கள் இன்றி தங்களது நெசவு நிலையங்களை மூடியுள்ளனர். அதிகமாக இந்தியாவில் இருந்தே நெசவுக்கான மூலப்பொருட்களை பெற்றுக் கொள்கின்றனர். தற்போது இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகமாக இருப்பதனால் அங்கிருந்து நூல் போன்ற மூலப்பொருட்களை பெற முடியாதுள்ளனர். தற்போது இங்குள்ள உள்ளூர் வியாபாரிகளிடம் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த மூலப்பொருட்களும் முடிவடைந்து விட்டன.

அத்துடன் ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட நெசவுத்துணிகளைக் கூட மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையில் நெசவாளர்கள் இருக்கின்றனர். குறிப்பாக தென்னிலங்கையில் இருந்து வரும் வியாபாரிகள் கொரோனா வைரஸ் பயம் காரணமாக இங்கு வரப் பயப்படுகின்றனர். கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக நெசவுத் தொழிலில் ஈடுபடும் மருதமுனையைச் சேர்ந்த ஜாகிரா என்பவர் இப்படிக் கூறுகின்றார். "கொரோனா எங்களின் நெசவுத் தொழிலை நாசமாக்கி விட்டது. ஆறு மாதமாக தொழிலில்லாமல் கஷ்டப்படுகிறோம். நூல் கிடைத்தால் மட்டுமே நெசவ முடியும். நூல் இல்லாமல் எப்படி நெசவுவது? மருதமனை கிராமத்தில் ஏராளமானோர் நெசவுத்தொழில்தான் செய்கிறார்கள். ஒவ்வொரு முறையும் ஏதாவது இயற்கை அனர்த்தம் வந்து எங்களின் தொழிலை இல்லாமல் செய்து விடும்." நெசவுத் தொழில் என்பது ஆரோக்கியமான தொழிலாகும். ஒரு நெசவுத் தொழிலாளியின் உடல் உறுப்புக்கள் அனைத்திற்கும் பயிற்சி அளிக்கக் கூடியதான ஆரோக்கியமான தொழிலாக நெசவுத் தொழில் உள்ளது. அப்படிப்பட்ட நெசவுத் தொழில் இன்று கைவிடப்படும் நிலைக்குச் சென்றுள்ளது.



பாரம்பரிய நெசவுத் தொழிலை முன்னெடுப்பவர்களுக்கு வங்கிகளில் வட்டியில்லாக் கடன் வழங்கப்பட வேண்டும், இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நூல்களுக்கு தீர்வையற்ற வரிச்சலுகை வழங்கப்பட வேண்டும். அத்துடன் நெசவுத் தொழிலாளர்களுக்கு காப்புறுத் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். பரம்பரை பரம்பரையாக நெசவுத்தொழிலில் ஈடுபடும் வழிகாட்டிகள் அரசினால் கௌரவ விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட வேண்டும். இவ்வாறான மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்துமாக இருந்தால் பாரம்பரிய நெசவுக் கைத் தொழிலை பாரியளவு விருத்தியடையச் செய்ய முடியும். இத்துறை சார்ந்த அமைச்சர் இது விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்பதே இவர்களின் எதிர்பார்ப்பாகும்.

செ.துஜியந்தன் ...
(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

# ஆபத்தான கட்டத்திலிருந்து மீண்டார் பாலசுப்ரமணியம்

எஸ்.பி.பாலசுப்ரமணியத்துக்கு இறுதியாக நடத்தப்பட்ட பரிசோதனையின்படி கொரோனா தொற்று இல்லை என்று முடிவு வந்துள்ளதாக அவரது மகன் எஸ்.பி.பி. சரண் கூறியுள்ளார்.

ஒகஸ்ட் 5ம் திகதி பாலசுப்பிரமணியத்துக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சைக்கு நல்லபடியாக ஒத்துழைத்து வந்த அவருடைய உடல்நிலை ஒகஸ்ட் 14ம் திகதி மோசமடைந்தது.

இதனையடுத்து எஸ்.பி.பாலசுப்ரமணியத்துக்குத் தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தினமும் அவருடைய உடல்நிலை குறித்து மருத்துவமனை நிர்வாகம் அறிக்கை வெளியிட்டு வருகிறது. மகன் சரணும் தந்தையின் உடல் நிலை பற்றிய தகவல்களை அவ்வப்போது பகிர்ந்து வருகிறார்.

இந்நிலையில் தனது தந்தையின் உடல்நலம் குறித்து எஸ்.பி.சரண் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"என் தந்தையின் உடல்நலனுக்காக உங்கள் அனைவரது ஆதரவுக்கும், பிரார்த்தனைகளுக்கும் நன்றி. அப்பாவின் உடல்நிலை நலமாகவும், சீராகவும் உள்ளது. கொரோனா பரிசோ



தனையில் அப்பாவுக்கு 'நெகட்டிவ்' என்று வந்துள்ளது. நன்றி". இவ்வாறு சரண் கூறியுள்ளார்.

கடந்த 15 நாட்களுக்கும் மேலாக மருத்துவமனையில் தீவிர சிகிச்சையில் இருந்த எஸ்.பி.பிக்கு கொரோனா தொற்று நீங்கியுள்ளது என்ற செய்தி அவரது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது.

பாலசுப்பிரமணியம் சென்னை தனியார் மருத்துவமனையில் தொடர்ந்து வெண்டிலேட்டரில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் ஆபத்தான கட்டத்தில் இருந்து மீண்டு விட்டதாகவே தெரிவிக்கப்படுகிறது.

அவர் விரைவில் நலம் பெற வேண்டும் என எண்ணாத நெஞ்சங்களே இல்லை எனும் அளவுக்கு டிவிட்டர், இன்ஸ்டா, ஃபேஸ்புக் என சமூக வலைதளங்களில் பலரும் இயற்கை அன்னையையும் இறைவனையும் வேண்டி வந்தனர். அவர் விரைவில் நலமடைந்து வீடு திரும்ப வேண்டும் என கடந்த வியாழக்கிழமை தமிழகம் முழுவதும் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது.

இதேவேளை பழம் பெரும் நடிகை சரோஜாதேவி தன்னுடைய ஆயுளும் சேர்ந்து பாடகர் பாலசுப்ரமணியம் நல்லபடியாக மீண்டு வர வேண்டும் என உருக்கமாக கூறியுள்ளார்.

"பாலசுப்ரமணியத்தின் உடல்நிலை சரியில்லை என்பதை கேள்விப்பட்டு ரொம்ப வேதனை அடைந்தேன். அவர் ரொம்ப நல்ல மனிதர். ஒரு முறை விழா ஒன்றில் அவரை சந்தித்தேன். அப்போது, அவரிம் 'நீங்கள் தினமும் தேன் சாப்பிடுவீங்களா?' என்று கேட்டேன். அதற்கு அவர் 'ஏன் அப்படி கேட்குறீங்க?' என்றார்.

நான், 'உங்கள் குரல் இவ்வளவு இனிமையா இருக்கே' என்றேன். உடனே அவர் சிரித்து விட்டார்.

மேலும் 'நீங்களும்தான் அழகா இருக்கீங்க' என்று கூறினார். அவர் இப்படி இருப்பதை பார்த்து இந்திய நாடே கவலையில் உள்ளது. என் ஆயுளையும் சேர்த்து அவருக்கு கொடுத்து, கடவுள் அவரை மீட்டு கொடுக்க வேண்டும் என்று வேண்டி கொள்கிறேன். அவர் பூரண குணமடைந்து மீண்டு வர வேண்டும். இன்னும் பல பாடல்களை ரொம்ப வருஷம் பாடணும்" என கூறியுள்ளார் நடிகை சரோஜா தேவி.

## சிங்கராஜ வனத்தில்...

சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும், அது சம்பந்தமாக தனது சட்டத்தரணிகள் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் யோஷித்த குறிப்பிட்டுள்ளார். சில தரப்பினர் மீண்டும் ஒரு முறை ராஜபக்சவினரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சித்து, பொய் பிரச்சாரங்ளை செய்து வருகின்றனர். எனக்கு சொந்தமான ஹோட்டலோ, விடுமுறைவிடுதியோ காட்டிற்குள் இல்லை. இது மக்களை தவறாக வழிநடத்த மேற்கொள்ளப்பட்ட பிரசாரம்.

அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் யோஷித்த ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார்.

## அரசியலமைப்பு திருத்தம்...

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுத்துள்ளமைநாட்டுக்குபொருத்தமான அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்காகவே என்றும் தெரிவித்தார்.

19வது அரசியலமைப்பு திருத்தம் நாட்டின் எதிர்கால பயணத்திற்கு பாரிய தடையாக அமையுமென்றும் அதன் விளைவுகளை கடந்த காலங்களில் கடுமையாக அனுபவிக்க நேர்ந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

13வது அரசியலமைப்பு திருத்தம் ஒரு வார காலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள ஒரு திருத்தமாகும் என்பதால் அதில் குறைபாடுகள் இருக்க முடியுமென்றும் அது தொடர்பில் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் வெளியிடும் கூற்றுக்கள் இனவாதம் சார்ந்தவையென்றும் தேசிய ஒற்றுமைக்கு அது பெரும் பாதிப்பாக அமையுமென தாம் நினைப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## எதிரணி எம்.பிக்கள்...

முக்கியமானவருடன் நடத்தப்பட்டு வருவதாகவும் அறியப்படுகிறது.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்கு அரசாங்கம் 151 உறுப்பினர்களைக் கொண்டிருந்தாலும், மற்றவர்கள் அதை ஆதரிக்கத் தயாராக இருந்தால் அவர்களை ஒன்றிணைப்பது பிரச்சினையல்ல, இது அரசாங்கத்தை மேலும் பலப்படுத்தும்.

இதனிடையே, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் அரசாங்கத்தில் இணைந்து கொள்வது குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

எனினும், இதுவரை அரசாங்கத்திடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை என்றும், பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடமிருந்து பதிலுக்காக காத்திருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## SPBயின் உடல் நிலை...

வைரஸ் தொற்றினால் கடந்த 5 ஆம் திகதி சென்னையிலுள்ள எம்.ஜி.ஆர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அவரின் உடல் நிலை மோசமடைந்தது. இந்நிலையில். புதிதாக அவருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் தற்போது கொரோனா தொற்று இல்லை என தெரியவந்துள்ளதாக நேற்று செய்திகள் வெளியாகியிருந்தன. எனினும் அவரின் மகன் எஸ்.பி.பீ சரண் அதை மறுத்துள்ளார்.

இது தொடர்பில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ள சரண், தனது தந்தை தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருவதாகவும் தேவையற்ற வதந்திகளை பரப்பவேண்டாம் என்றும் கோரியுள்ளார்.

## தலதா, பூஜித் அரசியல்...

குறித்த சாட்சியமளிப்பு தொடர்பில் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள பிரதி தங்களுக்கு கிடைக்கவில்லை என சட்டத்தரணி ஊடாக தெரிவித்தமைக்கு அமைய குறித்த தினத்தில் மீண்டும் முன்னிலையாவதாக தெரிவித்து, அவர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவ்வினால் குறித்த ஆணைக்குழுவில் அளித்த முறைப்பாடு தொடர்பாக அவர்கள் இருவரும் இன்று ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் அரச நியமனங்கள்...

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகள் ஒன்றிணைந்து கலந்துரையாடியதோடு வடக்கு மாகாண ஆளுநரிடம் தமது நியமனத்தை உறுதிப்படுத்துமாறு கோரி மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

குறித்த மகஜரில் நிராகரிக்கப்பட்ட காரணங்களாக குறிப்பிடப்பட்டுள்ள EPF, ETF பிரச்சினை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பினை முடித்தவர்களுக்கான பிரச்சினை மற்றும் 45 வயதிற்கு மேற்பட்டவர்கள் பிரச்சினை போன்ற மூன்று விடயங்களை உள்ளடக்கி வடக்கு மாகாண ஆளுநரிடம் மகஜர் கையளித்துள்ளனர். குறித்த விடயங்கள் தொடர்பாக உரிய தரப்பினருக்கு அதனை தெளிவுபடுத்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கான நியமனத்தை வழங்க ஆவண செய்யுமாறு கோரி மகஜர் கையளித்துள்ளனர்.

மேலும் ஏற்கனவே அரசாங்கத்தினால் நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பட்டதாரிகள் எதிர்வரும் மாதம் 2ஆம் திகதி தமது கடமைகளை ஆரம்பிக்கின்ற நிலையில், நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கும் எதிர்வரும் 2ஆம் திகதிக்குள் உரிய தீர்வு பெற்றுத்தர வேண்டும் என பட்டதாரிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிடியாணை தொடர்பில்... 03ஆம் பக்கத் தொடர்

இல்லையா என்பது தொடர்பிலான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்று வௌியாகவுள்ளது.

அதுவரை பிடியாணையை அமுல்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. தொல்லியல் பெறுமதி வாய்ந்த கட்டடம் தர்க்கப்பட்டமை தொடர்பில் குருநாகல் மாநகர மேயர் கைது செய்யப்படுவதை தடுக்கும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த 12 ஆம் திகதி இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.

## ஆணைக்குழுவில்... 03ஆம் பக்கத் தொடர்

மீதான தலையீடு போன்ற குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இந்த வருடம் ஜனவரியில் மாதத்தில் உயர் அதிகாரமுள்ள ஜனாதிபதி அணைக்குழுக்களை நியமித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறைச்சாலைகளின்... 03ஆம் பக்கத் தொடர்

உள்ளடங்கியதால் வெலிக்கடை சிறைச்சாலை இந்த நாட்டிலுள்ள விசாலமான சிறைச்சாலைகளின் ஒன்றாக காணப்படுகின்றது.

இந்த சிறைச்சாலைகளில் போதைப் பொருள் பக்கட், கையடக்க தொலைபேசி மற்றும் சிம் கார்ட்கள் தினமும் எமக்கு கிடைக்கப்பெறுகின்றன.

இவை அனைத்தும் எவ்வாறு உள்ளே செல்கின்றது என்பதை தேடிபாரத்தோம். நுழைவாயிலில் சில முறைகேடுகள் இடம்பெறுகின்றமை தொடர்பில் எமக்கு அறிய முடிந்தது.

எனவே தான் உடனடியாக வெலிக்கடை சிறைச்சாலையின் சகல நுழைவாயில்களையும் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினருக்கு பொறுப்பு கொடுக்க தீர்மானித்தோம். அவர்கள் தான் சகல நுழைவாயில்களையும் இனி நிர்வகிப்பர்.

இதன்மூலம் போதைப் பொருள் போன்ற சட்டவிரோத பொருட்கள் உட்செல்வதை தடுக்க முடியும்.

பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் புதிதாக கடமையில் ஈடுப்படுவதனால் இதுவரை காலமும் நுழைவாயிலில் கடமையாற்றிய அதிகாரிகள் சிறைச்சாலையின் உள்ளே தேடுதல் நடவடிக்கைகளை அதிகரிக்க வாய்ப்பு கிடைக்கின்றது என்றார்.

பாதாள உலக கோஷ்டிகளை முறியடித்தல், போதைப்பொருள் கடத்தல், திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுப்படுதல் மற்றும் கப்பம் பெறல் போன்றன முழுமையாக இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர்.

இந்த நாடு சென்ற விதத்தில் இன்னும் ஐந்து ஆண்டுகள் சென்றிருக்குமேயானால் எவருக்கும் வீதியில் இறங்கி நிம்மதியாக சென்றிருக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கும்.

சோமாலியா போன்ற நிலைமை நாட்டில் ஏற்பட்டிருக்கும் நாம் தற்போது திட்டமிட்ட நடவடிக்கைகளின் மூலம் அவற்றை இல்லாமல் செய்திருக்கின்றோம்.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஷவேந்திர சில்வா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 53ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த செனவிரட்ன உட்பட உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## வறுமையை ஒழிப்பதற்கு... 03ஆம் பக்கத் தொடர்

மனநிலையில் இருந்து மீட்டெடுத்து நுண் தொழில் முயற்சியாளர்கள் என்ற நிலைக்கு மாற்றும் வேலைத்திட்டத்தை உடனடியாக திட்டமிட வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வலுவூட்டப்பட்ட சமுர்த்தி பயனாளிகளை சமுர்த்தி செயற்திட்டத்தில் உள்வாங்கி நாட்டுக்கு நன்மை கிடைக்கும் வழிமுறை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். நுண்நிதி கடன்கள் மூலம் பிரதிபலனை வழங்குவதற்கு ஒழுங்குபடுத்தல் அவசியம்.

நிதி இயலுமை குறித்து விளங்கிக் கொள்வது நுண்நிதி நிறுவனங்களின் மிக முக்கிய பணியாகும்.

சமூக மாற்றத்துக்கு மக்கள் மத்தியில் உத்வேகம் தோன்றியிருக்கும் இத் தருணத்தை வீட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டிய தன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொவிட் 19 போன்ற சவால்மிக்க நிலைக்கு முகங்கொடுத்த மக்களுக்கு தமது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக வங்கிகள் சலுகை வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்திய ஜனாதிபதி, இதன் மூலமே மக்களுக்கும் நாட்டுக்கும் சிறந்த பொருளாதாரத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் மேலும் குறிப்பிட்டார்.

"சமுர்த்தி" நிவாரணத்தை உண்மையாகவே பெறவேண்டியவர்களை இனங்காண்பதன் முக்கியத்துவத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இங்கு சுட்டிக்காட்டினார். நுண்நிதிக் கடன் பிரச்சினையாக மாறி இருப்பதாகவும், கடன் ஒழுங்குபடுத்தும் அதிகார சட்டம் அல்லது வேறு சட்டங்கள் மூலமாக அதனைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் முக்கிய எதிர்பார்ப்பாகிய காணி உரிமையை மக்களுக்கு வழங்குவதை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என இதன்போது பெஸில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

தெங்கு, மா, பலா போன்ற பயிர்ச் செய்கைளை ஆரம்பித்து மனைப் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வனஜீவராசிகள், மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் உள்ள காணிகளை மீண்டும் பிரதேச செயலகங்களின் கீழ் கொண்டுவந்து மக்களுக்கு உரிய உரிமையை உடனடியாக வழங்குவது பற்றியும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ ஜயசுந்தர, நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர் ஆடிகல ஆகியோர் உள்ளிட்ட இராஜாங்க அமைச்சுக்குரிய நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் வங்கித் துறையை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் உயரதிகாரிகள் பலரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ஸ)

## கூடுதல் தண்டனை... 03ஆம் பக்கத் தொடர்

பாராளுமன்றத்தில் சட்ட திருத்தம் கொண்டுவர உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காக பொறி வைப்பது தோட்டப்பிரதேசங்களில் அதிகரித்துள்ளது.இதனால் அத்தகைய விலங்குகள் அழிந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.அதிகமான சிறுத்தைகள் கடந்த காலத்தில் கொல்லப்பட்டுள்ளன.இது தொடர்பிலான சட்டங்களை வலுப்படுத்தவும் வனவிலங்குகளை வேட்டையாடுவதை தடுக்கவும் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

பொறிகளில் சிக்கும் விலங்குகளை துரிதமாக காப்பாற்றுவதற்காக கம்பொல,நல்லதன்னிய மற்றும் ஹட்டனில் வனவள மிருகவைத்தியயர் அடங்கிய குழுவொன்றை சேவையில் ஈடுபடுத்த இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கம்பளை தொலுவ பகுதியில் பொறியில் சிக்கி சிறுத்தையொன்று உயிரிழந்தது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.(பா)

## நோர்வே நிறுவனத்திற்காக... 03ஆம் பக்கத் தொடர்

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் குறிப்பிட்ட உரிமை நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் மேற்படி செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மிஸ்ஜ் இகோ பல்க் அஸ் நிறுவனம் கரே மஸ் அன்ட் கம்பனி நிறுவனத்தின் உப நிறுவனமாகும் என்பதுடன் அதன் தாய் நிறுவனம் பல்வேறு சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் பலவற்றின் பங்கு நிறுவனமாகும்.

அதற்கிணங்க கொழும்பு டொக்கியாட் நிறுவனம் மூலம் தயாரிக்கப்படவுள்ள மேற்படி பொருட்கள் போக்குவரத்து கப்பல் 89.5 மீற்றர் நீளத்தையும் 5000 தொன் பொருட்களை கொண்டுசெல்லக்கூடிய வகையிலும் தயாரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதற்கிணங்க கொழும்பு டொக்கியாட் நிறுவனம் 18 மாத காலத்திற்குள் முதலாவது கப்பலை தயாரித்து வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளது. ஏனைய கப்பல்களை எதிர்வரும் நான்கு வருடங்களுக்குள் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (ஸ)

## அறிவுபூர்வமான... 03ஆம் பக்கத் தொடர்

இந்த நிலையைப் புரிந்து கொண்டு சிறுபான்மை சமூகத்தினர் பெரும்பான்மை சமூகத்தோடு பரஸ்பர புரிந்துணர்வு ஒற்றுமையோடு வாழும் போதுதான் நாட்டில் சமாதானம், அபிவிருத்தி ஏற்படும் ஏற்படும் என்றார்.

## 50,000 பட்டதாரிகளுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

திறமை அடிப்படையில் தொழில் இல்லாத நிலையிலுள்ள பட்டதாரிகளுக்கும் தொழில் வழங்குவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தமது தேர்தல் வாக்குறுதிகளின் போது தெரிவித்திருந்தார்.

அந்த வாக்குறுதிக்கு இணங்க கடந்த பெப்ரவரி மாதம் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதற்கிணங்க கடந்த வருடம் டிசம்பர் 31ஆம் திகதியில் தமது பட்டப்படிப்பை நிறைவு செய்துகொண்ட பட்டதாரிகளிடமிருந்து தொழில் வாய்ப்புக்காக பட்டதாரிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

அதற்கிணங்க நியமனக் கடிதங்கள் கையளிக்கப்படவுள்ளன. 50,000 பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்ளும் வகையிலேயே இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

தற்போது தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகளின் விபரங்கள் அடங்கிய கட்டமைப்பு ஒன்றை அமைச்சின் அதிகாரிகள் தயாரித்துள்ளனர்.

அந்தவகையில் ஜனாதிபதியும் பிரதமரும் தம் மீது நம்பிக்கை வைத்து வழங்கிய பொறுப்பை சவால்களுக்கு மத்தியிலும் விரைவாக நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.(ஸ)

## சம்பந்தன், சீ.வி,... 03ஆம் பக்கத் தொடர்

அவருக்கு, சம்பந்தனைவிட பெரிய தலைவராக வேண்டும் என்பதுதான் ஆசை. தமிழர்களுக்கு யார் தலைவர் என்பதில், இவர்கள் இருவருக்கும் இடையில் போட்டி நிலவுகிறது.

தமிழர்களை ஏமாற்றும் வகையில் பொய்யான ஒரு நாடகத்தைத்தான் விக்னேஸ்வரன் அரங்கேற்றி வருகிறார்.

இதன் ஓர் அங்கமாகத்தான்,பாராளுமன்றம் வந்து உலகிலேயே மூத்த மொழி தமிழ் மொழி என கருத்து வெளியிட்டுள்ளார். , அப்படி கூறினால் இனவாதத்தை இலகுவாகத் தூண்டிவிட முடியும் என்றுஅவருக்கு தெரியும். வடக்கு மக்கள் இனவாதத்தை நிராகரித்துள்ளனர்.16 எம்.பிகள் இருந்த தமிழ் தேசிய கூட்டணி இன்று 10 எம்.பிகளாக குறைந்துள்ளது.சுதந்திரக் கட்சியூடாக யாழில் ஒரு எம்.பி தெரிவாகியுள்ளார்.நாம் நடுநிலையான தரப்பினரை பலப்படுத்த வேண்டும்.இனவாத குழுக்களுக்கு நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்க இடமளிக்க முடியாது. கிழக்கில் அதாவுல்லாவிற்கு அமைச்சு பொறுப்பு வழங்க வேண்டும்.இதனூடாக ஹக்கீமின் ரிசாதின் இனவாத அரசியலுக்கு முடிவு வரும்.

யாழில் இருந்து வந்த சுதந்திரக் கட்சி உறுப்பினருக்கும் கிழக்கிலிருந்து வந்த அதாவுல்லா போன்றோருக்கும் பாராளுமன்றம் வர முடிந்துள்ளது. இவர்களுக்கு அமைச்சு பதவி வழங்க வேண்டும்.

இதுதான் ஜனநாயகத்தை பலப்படுத்தும் வழிமுறைகளாகும். நாம் இவ்வாறான செற்பாடுகளை மேற்கொள்ளும்போதுதான் அனைத்து சமூகங்களும் முன்னேற்றமடையும்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் சம்பந்தன் மற்றும் விக்னேஸ்வரனின் இனவாத அரசியலுக்கும் தேவை ஏற்படாது போகும். இன்னும் சில நாட்களில் புதிய அரசியலமைப்பு ஸ்தாபிக்கப்படவுள்ளது. இதன் ஊடாக இந்த நாடு மேலும் பலமடையும்.ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, ஒரு நாடு – ஒரு சட்டம் என்ற கொள்கையில் மிகவும் தெளிவாக இருக்கிறார். ஒவ்வொருவருக்கும் தேவையான வகையில் சட்டங்களை வலைக்க நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்றும் அவர் கூறினார்.

## துப்பாக்கியால் பட்டபாடு...

ஆரம்பிக்க வேண்டும் என்று தெரிவித்த அமைச்சர், அதற்காகவே குறித்த மீளாய்வுக் கூட்டம் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் முன்னாய்வு கூட்டம் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிலையில் அமைச்சரினால் குறித்த கருத்து முன் வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற குறித்த முன்னாய்வு கூட்டத்தில், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு கூட்டத்தில் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது, கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் குரங்குத் தொல்லைகள் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்ட போது, சிறிய ரகத் துப்பாக்கிகளை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம், பயிர்செய்கைகளுக்கு நாசம் விளைவிக்கும் குரங்குகளை கட்டுப்படுத்த முயற்சிக்கலாம் என்று சம்மந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்ட போதே மேற்குறித்த கருத்தினை தெரிவித்த அமைச்சர், மாற்று வழிகள் தொடர்பாக ஆராயுமாறு தெரிவித்தார்.

அத்துடன், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் அரசாங்கத்தின் பொருளாதார கொள்கை என்பவற்றின் அடிப்படையில், பயன்படுத்தப்படாமல் இருக்கின்ற காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுவிவசாயத்தில்தன்னிறைவுஎட்டுவதே நோக்கமாக இருககின்ற நிலையில் வன வளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் போன்றவற்றினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள காணிகளை பயிர் செய்கைக்கு பயன்படுத்துவதற்கு ஜனாதிபதியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளமை குறப்பிடத்தக்கது.

## கொலையான...

நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்றது.

இதன்போது இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் செங்கலடி கொழும்பு மற்றும் பதுளை வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ வாள் வெட்டுக் குழுக்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ரவுடிகளிடம் இருக்கும் வாள்கள் அனைத்தையும் பறிமுதல் செய்ய வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோசம் எழுப்பினர்.

இதன் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இந்த வாள் வெட்டு குழுக்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். ரவுடிகளிடம் இருக்கும் வாள்கள் அனைத்தையும் பறிமுதல் செய்ய வேண்டும் என்ற கோசங்களை முன்வைத்து கதறி அழுதனர்.

## சஜீவ சாமிகரவிடம்... 03ஆம் பக்கத் தொடர்

அறிவித்தல், யோஷித ராஜபக்ஷ அவர்களுக்கு எதிராக மீண்டும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்கமாட்டேன்எனஉறுதியளித்தல், ஏழுதினங்களுக்குள்50 கோடி ரூபாயை நட்டஈடாக பெற்றுக் கொடுத்தல் ஆகிய விடயங்களை உள்ளடக்கியநோட்டீஸ் சட்டத்தரணிகள் சங்கத்தினால் நேற்று சுற்றுச்சூழல் ஆய்வாளர் சஜீவ சாமிகரவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது..(ஸ)

## UNP தலைமைத்துவ...

ஐக்கிய தேசிய கட்சிக்கு தலைமைத்துவத்தை வழங்கும் சவாலை பொறுப்பேற்க தன்னால் முடியும் என தற்போதைய கட்சித் தலைமைக்கு மற்றும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளதாக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## காணாமல் போன இளைஞன்...

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

7 பேர் நீரில் அள்ளுண்டு செல்லப்பட்ட நிலையில் 5 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். தனியார் நிறுவனமொன்றில் பணியாற்றும் குழுவொன்றே இவ்வாறு நீராடச் சென்றிருந்ததாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

## அரசாங்கம் தீர்மானம்...

கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் அரசியலமைப்பு திருத்தத்தை மேற்கொள்ள தீர்மானித்துள்ள நிலையில் அந்தத் திருத்தத்தின் ஊடாக எந்தவொரு பதவியையும் உருவாக்க முடியுமான நிலை உள்ளபோதும் பிரதி பிரதமர் பதவியொன்றை உருவாக்குவது தொடர்பில் அரசாங்கம் இதுவரை எந்தவொரு முடிவையும் மேற்கொள்ளவில்லை என அவர் தெரிவித்தார்.

அதேவேளை புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பிலும் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் பேராசிரியர் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அடுத்த வருடம் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட முன்னர் அல்லது டிசம்பர் மாதத்திற்கு முன்பதாக 19வது திருத்தத்தை நீக்குவது தொடர்பிலான யோசனை முன்வைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அதேவேளை 19வது அரசியலமைப்பு திருத்தத்தினூடாக நியமிக்கப்பட்ட சுயாதீன ஆணைக் குழுக்கள் சுயாதீனமாக செயற்படவில்லையென்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிர்வரும் அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் பதவியொன்றை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாக கடந்த 20ம் திகதி நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழு கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்திருந்தார்.

அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் யோசனைகளை முன்வைப்பதற்கு குழுவொன்றை நியமிப்பதற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்தார்.

அந்த குழுவின் தலைவராக தொழிலமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## பற்றி பல்கலைக்கழகத்தை...

வேண்டும் என்ற முயற்சியிலும் அதனைத்தொடர்ந்த நம்பிக்கையிலுமே பிரசாரத்தில் ஈடுபடுவதாக குறிப்பிட்டுள்ள அவர், தோல்வியை ஏற்றுக் கொள்ளவேண்டும் எனவும் தனது மூச்சு இருக்கும் வரையிலும் மக்களுக்கான அரசியல் பயணம் தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்குடா தொகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றிலே அவர் இதனை தெரிவித்தார். இணைப்பாளர் அஷ்ஷெய்க் ஹாரூன்(சஹ்வி) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது,

யாராவது இந்த நாட்டில் தனது வெற்றியை விட்டுக்கொடுத்த வரலாறுகள் காணப்படுகின்றதா? சிறுபிள்ளைத்தனமான சந்தேகங்களை மக்கள் மத்தியில் விதைப்பவர்கள் எதை எதிர்பார்த்து இவ்வாறு பிரசாரம் செய்கிறார்கள். மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் மிகவும் புத்திசாதுரியமான முறையில் தங்கள் வாக்குகளை அளித்ததால் வழமையாக வரவேண்டிய இரண்டு முஸ்லிம் பிரதிநிதிகளில் ஒரு முஸ்லிம் பிரதிநிதி இல்லாமல் ஆக்கப்பட்டார். உரிமைக்கென்று தமிழ்க்கூட்டமைப்புக்கும் அபிவிருத்திக்கென்று தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சிக்கென்றும் அவர்கள் வாக்களித்தார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த முஸ்லிம் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்களான அலிசாஹிர் மௌலானா, அமீரலி ஆகியோரும் என்னைப்போலவே தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர்.அவர்களது தோல்வியையும் நாங்கள் பெருந்துயரமாகவே கருத வேண்டும். சிரேஷ்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை இழந்த மாவட்டமாக மட்டக்களப்பு இப்போது காணப்படுகின்றது. எம்மைப்போல ஆளுமைகளின் தேவை அரசுக்கு வேண்டும் எனக்கருதினால் அதற்கான வாசலை இறைவன் தனது அதிகாரத்தினால் திறந்து வைப்பான்.

நான்கிழக்கு மாகாண ஆளுநராகவோ அல்லது பாராளுமன்ற உறுப்பினராக அல்லது உயர்ஸ்தானிகராக நியமிக்கப்படலாம் என்று எனது ஆதரவாளர்கள் நம்பிக்கை கொண்டு வருகின்றனர். இந்த அரசு பயணிக்கும் பாதையை பொறுத்தே அதனைப் பெற்றுக்கொள்வதா?இல்லையா?என்பது குறித்து தீர்மானம் எடுக்கப்படும்.

எனக்கு அரசியல் அதிகாரம் வந்தாலும் வராவிட்டாலும் எனக்குரிய சுயாதீனமான அதிகாரங்களை பயன்படுத்தி எனது மூச்சு இருக்கும் வரை இந்த மக்களுக்காக சேவை செய்வேன் என்றார்.

# வயோதிப பெண்ணின் தங்கச்சங்கிலி அபகரிப்பு

(புத்தளம் விசேட நிருபர்)

மாராவில முதுகட்டுவ பிரதேசத்தில் வசிக்கும் 78 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவரை ஏமாற்றி அப்பெண்ணிடமிருந்த சுமார் 90 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்கச் சங்கிலி ஒன்றைக் கொள்ளையிட்டதாகச் சொல்லப்படும் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்ய விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக மாராவில பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்திற்கு முகம் கொடுத்துள்ள வயோதிபப் பெண் தனது வீட்டில் தனிமையில் வசித்து வந்துள்ளவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் அவ்வீட்டுக்கு கார் ஒன்றில் வந்துள்ள நபர் ஒருவரே தனது தங்கச் சங்கிலியைக் கொள்ளையிட்டுச் சென்றிருக்கலாம் என சந்தேகிப்பதாக அவ்வயோதிபப் பெண் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். அவ்வாறு தனது வீட்டுக்கு வந்த நபர் பழைய நகைகளைப் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்ததால் தான் தன்னிடமிருந்த நகைகளை அந்நபரிடம் கொடுத்ததாகவும் அப்பெண் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அப்பெண்ணின் பேரன் தேடிப் பார்த்ததில் அப்பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலி காணாமல் போயிருந்தமை தெரிய வந்ததாகவும் அதனையடுத்தே இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பஸ் மோதி பெண் காயம்

# சாரதியின் அனுமதிப்பத்திரம் தற்காலிக இடைநிறுத்தம்

களுத்துறை சுழற்சி நிருபர்

மத்துகமை சந்தையில் பழ வியாபாரம் செய்துவிட்டு மத்துகமையில் இருந்து அகலவத்தை நோக்கி தனியார் பஸ் வண்டியில் பயணித்த அகலவத்தை நாவிட்டிகல பகுதியில் வசிக்கும் 76 வயதான இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரை வேண்டுமென்றே விபத்துக்குள்ளாக்கி விட்டு தப்பிச் சென்ற பஸ் சாரதி ஒருவரின் சாரதி அனுமதிப்பத்திரம் மத்துகமை நீதிமன்றத்தினால் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வயோதிப பெண் தனது மகளுடன் யட்டியன சுடுகாட்டுக்கு அருகில் இறங்க முற்பட்டபோது பஸ் வண்டியின் சாரதி பஸ் வண்டியை வீதி ஓரத்தில் இருந்த மதகு ஒன்றுக்கு அருகில் நிறுத்தி அப் பெண்ணை மதகுக்குள் விழுமாறு செய்ததுடன் குறித்த பெண் மதகில் வீழ்ந்து காயமடைந்த நிலையில் பஸ் சாரதி பஸ் வண்டியை நிறுத்தாமல் பயணித்துள்ளதாகவும் நேரில் கண்ட சாட்சிகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மத்துகமை பொலிஸ் நிலையத்தில் வைத்து பொலிஸார் முன்னிலையில் காயமடைந்த பெண்ணுக்கு 25000 ரூபாய் மருத்துவ சிகிச்சைக்கு உதவித் தொகையாக வழங்க இணங்கியதாகவும் பின்னர் பணம் கொடுக்க மறுத்ததுடன் தகாத வார்த்தைகளால் ஏசி விரட்டியதாகவும் அப் பெண்ணின் மகள் மத்துகமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைய சிறைவாசம் அனுபவித்து பின்னர் சாரதி அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 19ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவதே பொதுஜன பெரமுனவின் முதல் பணி

## பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல்

பேருவளை விசேட நிருபர்



அரசியல் அமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கான பணிளை பொதுஜன பெரமுன அரசாங்கம் தனது முதல் பணியாக மேற்கொண்டு வருகிறது. இது குறித்து எவரும் அஞ்சவேண்டிய அவசியம் கிடையாது. நாட்டை சீராக ஆட்சி செய்வதற்காக எடுக்கப்படும் இந்த முயற்சியை எதிர்க் கட்சியினர் வர்ணக் கண்ணாடி கொண்டு பார்க்காது நாட்டினதும் மக்களினதும் எதிர்கால சுபீட்சம் கருதி முழுமையான ஆதரவை வழங்க முன்வர வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் கூறினார்.

பேருவளையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு கூறினார்.

மர்ஜான் பளீல் எம்.பி மேலும் கூறியதாவது, நாட்டை சீராக ஆட்சி செய்வதில் 19ஆவது திருத்தச்சட்டம் பாரிய தடையாக இருப்பதனாலேயே அரசாங்கம் அதனை முழுமையாக மாற்றியமைக்க முன் வந்துள்ளது. நடைபெற்று முடிந்த தேர்தலில் நாட்டு மக்கள் அதற்காக தெளிவான ஆணையையும் பெற்றுக்கொடுத்துள்ளனர். இந்தநிலையில் எதிர் கட்சியினர் இதை வர்ணக்கண்ணாடி கொண்டு பார்க்கக்கூடாது.

முழு நாட்டையும் அபிவிருத்தி செய்வதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபகச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோரின் பிரதான இலக்காகும். அதற்கான பாரிய வேலைத் திட்டங்கள் மிக விரைவில்ஆரம்பமாகும். இந்த அபிவிருத்திப் பணிகளை சீராக முன்னெடுப்பதில் பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கு பாரிய பொறுப்புள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசின் கீழ் நாடு ஐந்து வருட காலத்தில் எவரும் எதிர்பாராத விதமான அபிவிருத்தி புரட்சியை காணும் என்பதில் சந்தேகமில்லை. நாட்டு மக்கள் அரசின் பணிகளுக்கு முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் மர்ஜான் பளீல் மேலும் தெரிவித்தார்.


சீட்டிழுப்பு இலக்கம்: 590

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 23/08/2020

Mega POWER

ஆங்கில எழுத்து: U — சுப்பர் இலக்கம்: 07 — வெற்றி இலக்கங்கள்: 34 41 54 77

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 05 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 130 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 274 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 6,974 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 4,539 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 114,004 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 20,773 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.230,280,210.35

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.11,383,845.20

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,506,656.40

ரூ. 5,341,500.00

தேசிய லொத்தர் சபை



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

வீதி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

**விலைமனுக்கோரல் அறிவித்தல்**

**அஸ்போல்ட் நிலையங்களுக்கு (ASPHALT PLANTS) பாதுகாப்பு சேவைகளை வழங்கல்**

**ஒப்பந்த இல. RDA/DPR/SE/SEC(Plant)/2020/87**

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக (ஆர்.டி.ஏ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை கொள்முதல் குழுவின் தலைவர் இங்கிரிய, கீரகல, கொடதெனியாவ, மஹியங்கன (மெதயாய), மதவாச்சி, சூரியவெவ, அம்பன்பொல, பொலன்னறுவ, பலங்கொட ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள அஸ்போல்ட் நிலையங்களுக்கு பாதுகாப்பு சேவைகளை ஒரு வருட காலத்திற்கு வழங்குதல் தொடர்பில் மூடிய விலைமனுக்களை தகுதி வாய்ந்த மனுதாரர்களிடமிருந்து கோரியுள்ளார்.
2. செயற்படுத்தும் நிறுவனம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகும்.
3. மனுகோரல்கள் "தேசிய போட்டி மனுகோரல்" நடைமுறைக்கமைய இடம்பெறும்.
4. மனு மூடப்படும் திகதியிலிருந்து 91 கலண்டர் நாட்கள் வரை, மனு செல்லுபடியாகும்.
5. மனுக்கள் ரூ. 400,000/- பெறுமதியான மனுப் பாதுகாப்பு பிணையுடன் (செல்லுபடி காலம் 15/01/2021 வரை) செலுத்தப்பட வேண்டும். மனுப் பாதுகாப்பு பிணை இல்லாத எந்த மனுவும் நிராகரிக்கப்படும்.
6. 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்த பதிவாளரால் வழங்கப்பட்ட பதிவு சான்றிதழுடன் எழுத்துபூர்வ விண்ணப்பத்தை ஆர்வமுள்ள மனுதாரர்கள் பணிப்பாளர் (கொள்முதல்), 4வது மாடி, "மகனெகும மஹாமெதுர", 216, டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்லையில் சமர்ப்பித்து ஏல ஆவணங்களை 27/08/2020 முதல் 17/09/2020 வரை காலை 09:00 மணி முதல் 15:00 மணி வரை திரும்பபெற முடியாத மனுக் கட்டணமான ரூ. 5,400.00/- இனை (வற் வரி உள்ளடங்கலாக) செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். மனுக்களை பெற்றுக்கொள்தல் 18/09/2020 பி.ப. 2.30 மணியுடன் மூடப்படும்.
7. மூடப்பட்ட ஏல ஆவணங்களை அவற்றின் நகல்களோடு பதிவுத் தபாலிலோ அல்லது, நேரடியாகவோ தலைவர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை கொள்முதல் பிரிவு 1ஆம் மாடி, "மகனெகும மஹாமெதுர" இல 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரைமுல்லை எனும் முகவரிக்கு முடிவுத் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் "அஸ்போல்ட் நிலையங்களுக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்கல்" எனக் குறிப்பிடவும்.
8. ஏல ஆவணங்களுடன் கீழ்க்காணும் ஆவணங்களையும் விண்ணப்பதாரிகள் சமர்ப்பிக்க வேண்டும்.
   அ. விண்ணப்பதாரி மாதாந்தம் ரூ 500,000/- க்கும் குறையாத ஒப்பந்த தொகைக்கு 4 வருடங்களுக்குள் பாதுகாப்புச் சேவைகளை வழங்கிய அனுபவம்.
   ஆ. குறைந்தது 02 வருடங்களுக்கு ETF மற்றும் EPF என்பனவற்றுக்கு பங்களித்ததற்கான ஆதாரம்.
   இ. 02 வருடங்கள் VAT வரி செலுத்தியதற்கான ஆதாரம்.
   ஈ. கைவசம் உள்ள பாதுகாப்பு சேவை ஒப்பந்தங்களின் பட்டியல் மற்றும் ஒவ்வொரு ஒப்பந்தத்திலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை விபரம்.
9. பணிப்பாளர், தலைவர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை கொள்முதல் பிரிவு 4ஆம் மாடி, "மகனெகும மஹாமெதுர" இல 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரைமுல்லை எனும் முகவரியில் ஏலதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
10. ஏலத்திற்கு முன்னரான கூட்டமானது 10/09/2020 காலை 10.30 மணிக்கு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, 4ம் மாடி, "மகனெகும மஹாமெதுர", இல 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள அதன் கொள்முதல் குழு காரியாலயத்தில் நடைபெறும்.
11. மனுப்பத்திரங்களை இலவசமாக, கொள்முதல் பணிப்பாளர், கொள்முதல் பிரிவு, 4ஆம் மாடி, "மகனெகும மஹாமெதுர", கொஸ்வத்த, பத்தரமுல்லவில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.
12. மேலும் விவரங்களுக்கு, தயவுசெய்து பணிப்பாளர் (கொள்முதல் பிரிவு), RDA தொலைபேசி: **011-2884790** இலக்கத்தை அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம்.

**தலைவர் - கொள்முதல் குழு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**1 வது மாடி, 'மகனெகும மஹாமெதுர',**
**216, டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்ல.**



23.08.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 605,219

பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 26,319,640.00

ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசுகள் 03 ரூ. 100,000.00 பரிசுகள் 28

www.nlb.lk

NLB NATIONAL LOTTERIES

தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 2020/08/23

சீட்டிழுப்பு இலக்கம் - 306

ஆங்கில எழுத்து: Q — வெற்றி இலக்கங்கள்: 25 58 59 71

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 02 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 63 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 148 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 3,290 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 2,158 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 53,713 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 10,075 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 2,271,240.00

பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 69,449

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை 115,279,097.44

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீடடிழுப்பு இலக்கம் 2518 சீட்டிழுப்பு திகதி 23.08.2020

ஆங்கில எழுத்து: M — வெற்றி இலக்கங்கள்: 13 26 41 71

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 09 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 164 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 324 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 8673 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 5654 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 142203 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 25975 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 183,003

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 7,009,020.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,704,611.60

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01

தொலைபேசி : 0114 607 000, 0112 324 324

Fax: 0114 663 416 Web: www.nlb.lk

சீட்டிழுப்பு இலக்கம் : 4223 உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத

திகதி: 23-08-2020

வெற்றி எழுத்து: A — வெற்றி இலக்கங்கள்: 7 3 3 3 2 1

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | 7 3 3 3 2 1 | ரூ. 2,000,000/- | 01 |
| | 3 3 3 2 1 | ரூ. 100,000/- | 09 |
| | 3 3 2 1 | ரூ. 10,000/- | 83 |
| | 3 2 1 | ரூ. 1,000/- | 903 |
| | 2 1 | ரூ. 100/- | 8,986 |
| | 1 | ரூ. 20/- | 89,072 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 7 3 3 3 2 | ரூ. 10,000/- | 09 |
| 8ஆம் பரிசு | 7 3 3 3 | ரூ. 1,000/- | 92 |
| 9ஆம் பரிசு | 7 3 3 | ரூ. 100/- | 899 |
| 10ஆம் பரிசு | 7 3 | ரூ. 50/- | 8,897 |
| 11ஆம் பரிசு | A | ரூ. 20/- | 35,540 |

– ரூ. 8,740,590.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.25,318,058.00

தேசிய லொத்தர் சபை www.nlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்

செவன

திகதி 2020/08/23

சீட்டிழுப்பு இலக்கம் 289

ஆங்கில எழுத்து: I — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 37 38 48 66

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ 1,000,000/- | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ 100,000/- | 03 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ 1,000/- | 71 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ 200/- | 126 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ 100/- | 3,439 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின் | ரூ 50/- | 1,949 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின் | ரூ 20/- | 48,416 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாக இருப்பின் | ரூ 20/- | 7,571 |

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை ரூ. 14,000,000/-

இச் சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,957,290/-

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

www.nlb.lk

# நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளது

அக்கரைப்பற்றில் பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன்

வாச்சிக்குடா விஷேட நிருபர்

நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளதாக அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட பின்னர் முதற்தடவையாக அக்கரைப்பற்று பிரதேசத்திற்கு வருகை தந்த அவரை மக்கள் மாலை அணிவித்து வரவேற்றனர்.

இதன் பின்னர் மக்கள் மத்தியில் உரையாற்றிய அவர், நாம் பல ஏமாற்றங்களை பெரும்பான்மை தலைவர்களால் எதிர்கொண்டுள்ளோம்.

குறிப்பாக இரு பெரும்பான்மை



கட்சிகள் இணைந்த கடந்த நல்லாட்சி அரசாங்கத்துடன் நாம் இணைந்து பயணம் செய்தபோதும் சில விடயங்களில் நன்மையடைந்தாலும் மக்களின் தீர்வு விடயத்தில் முன்னேற்றம் காணப்படவில்லை. அவ்வாறு நடைபெற்றிருந்தால் நம்பிக்கை ஏற்பட்டிருக்கும். இவ்வாறுதான் கடந்த காலத்தில் இருந்த அரசியல் தலைவர்களால் நாம் ஏமாற்றப்பட்டோம் என்றார்.

இதேநேரம் மாகாண சபை தேர்தல் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், தமிழ் மக்களின் நீண்ட கால அபிலாசைகளை ஒத்ததான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றவர்களோடு இணைந்து பயணிக்க தயார் எனவும், ஒற்றுமையின் அடிப்படையில் மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு அதிக ஆசனத்தை பெறுவதற்குரிய முயற்சியை நாம் மேற்கொள்வோம் என்றும் கூறினார்.


எதிர்காலத்தில் பலமான கட்டமைப்பை அம்பாறை மாவட்டத்தில் உருவாக்குவதுடன் பல பணிகளை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு எனக்குள்ளது. ஆனாலும் கடந்த தேர்தலில் சிலர் மாற்று முடிவுகளை மேற்கொண்டனர். இருந்தபோதிலும் அவர்களையும் இணைத்தே எமது பயணம் தொடரும் என்றார்.

யுத்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டம் இன்னும் முழுவதுமான அபிவிருத்தியினை அடையவில்லை. குறிப்பாக இளைஞர் யுவதிகளுக்கான தொழில்வாய்ப்பு வழங்கப்படவில்லை. இவற்றையெல்லாம் முன்னிறுத்தி எமது செயற்பாடு தொடரும் என்றார்.

# பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவட்ட அபிவிருத்திக்கு பாடுபட வேண்டும்

மட்டு. மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை

(தாமரைக்கேணி நிருபர் எஸ்.எஸ்.தவபாலன்)



மட்டக்களப்பில் உள்ள ராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ஒன்றிணைந்து பாடுபட வேண்டுமென பேராயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை கோரிக்கை விடுத்தார்.

காலைவேளை ஆராதனையின் பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்த ஆயர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இப்போது மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சாதகமான காலம், இதனை நமது அரசியல் பிரமுகர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என நம்புகிறேன். மட்டக்களப்பு மாவட்டத்தில் பிறந்த ராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்விடயத்தில் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

கட்சிகள் வெவ்வேறாக இருந்தாலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்காக ஒற்றுமையோடு செயற்படுவது மிகப் பொருத்தமானது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வளங்கள் முழுவதும் பயன்படுத்தப்பட்டு அது முழுமையான அபிவிருத்தியைக் காணும் என்றார்.

# இதழியல் கற்கை நெறி மீண்டும் ஆரம்பம்

(நிந்தவூர் குறூப் நிருபர்)

கொரோனா தாக்கம் காரணமாக இடை நிறுத்தப்பட்டிருந்த இதழியல் கற்கை நெறியின் இரண்டாம் பருவ கால (second semester) வகுப்புக்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் மொழித்துறை தலைவர் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் தெரிவித்தார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ள இந்த இதழியல் கற்கைநெறிக்கு சமூகம் தர உள்ள மாணவர்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி வகுப்புக்களில் கலந்து கொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை ஒரு வருட கால காலப்பகுதியைக் கொண்ட இந்த பயிற்சி நெறியானது கடந்த 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், ஏப்ரல் குண்டுத்தாக்குதல் மற்றும் கொரோனா நோய் தொற்று காரணங்களால் தடைப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

# அம்பாறையில் தமிழ் மக்களை ஓரணியில் போட்டியிட தமிழ் கட்சிகளுக்கு அழைப்பு

அம்பாறை மாவட்ட தமிழர் ஒருங்கிணைப்புக்குழு

(காரைதீவு குறூப் நிருபர்)



கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்திலிருந்து தமிழ் மக்கள் சார்பில் ஓரணியில் ஒருபொதுச் சின்னத்தில் போட்டியிட சகல கட்சிகளையும் சந்தித்து வேண்டுகோள் விடுக்கப்படவுள்ளது.

இத்தீர்மானம் நேற்றுமுன் தினம் (23) ஆலையடிவேம்பு கலாசார மண்டபத்தில் நடைபெற்ற அம்பாறை மாவட்ட தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் மாவட்ட மட்ட கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஆலையடிவேம்பு 'அன்புக்கரங்கள்' அமைப்பின் அனுசரணையில் உதயமான அம்பாறை மாவட்ட தமிழர் ஒருங்ணைப்புக்குழு மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளது.

'அன்புக்கரங்கள்' அமைப்பின் சார்பில் பொறியியலாளர், இராசையா யுவேந்திரா ஊடகவியலாளர் வி.சுகிர்தகுமார் ஆசிரியர் எஸ்.நிர்மலரூபன் ஆகியோரின் விளக்கவுரையுடன் கூட்டம் ஆரம்பமானது.

மாவட்டத்தின் பலபாகங்களிலுமிருந்து கலந்துகொண்ட பிரதிநிதிகள் தத்தமது அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்து கூட்டத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இம்முறை கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சகல கட்சிகளும் ஓரணியின்கீழ் பொதுச் சின்னத்தின் கீழ் போட்டியிட முன்வரவேண்டும் என்ற கருத்தை ஏகோபித்தரீதியில் முன்வைத்தனர்.

பொத்துவில் தொடக்கம் பெரியநீலாவணை தமிழ்க் கிராமங்கள் அனைத்திற்கும் இணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு அப்பகுதிகளில் மக்களுக்கு ஓரணியில் திரள்வதற்கான கட்டாயம் பற்றி விளக்கமளிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மிகவிரைவில் கட்சிகளின் செயலாளர்களுக்கு உரியமுறையில் தகவலை அனுப்பி சந்திப்பதற்கான நேரத்தைப் பெற்று சந்திப்பதென முடிவுசெய்யப்பட்டது.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழர் பிரதிநிதித்துவத்தை இழந்த காரணத்தின் எதிரொலியாக கிழக்கு மாகாண சபைக்கான முன்னேற்பாடாக இக்கூட்டம் நேற்றுமுன்தினம் இரண்டாவது தடவையாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

விரைவில் மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெறவிருப்பதால் இப்போதிருந்து அதற்கான வியூகங்களை அமைத்து 3 பிரதி நிதிகளை அனுப்பி வைப்பதன் மூலமே எங்கள் மீது இப்போது விழுகின்ற மற்றவரின் ஏளனப் பார்வைகளுக்கு சரியான பதிலடியைக் கொடுக்க முடியும் என பலரும் கருத்துரைத்தனர்.

# நிந்தவூரில் கொரோனா விழிப்புணர்வு செயலமர்வு



(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

நிந்தவூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச சுற்றுப்புறக் கழகங்களுடன் இணைந்து 'கொரோனா தொற்று நோயின் தாக்கத்திலிருந்து பொது மக்களை எவ்வாறு பாதுகாப்பு பெறுவது' தொடர்பான செயலமர்வு பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் தலைமையில் அண்மையில் நிந்தவூர் பிரதேச செயலக கூட்டமண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி (தொற்றா நோய்) வைத்தியசாலை பணிப்பாளர் கே.எல்.எம். நக்பர் வளவாளராகக் கலந்து கொண்டு 'கொவிட் 19' கொரோனா வைரஸினை இயற்கை மருத்துவத்தினைக் கொண்டு எவ்வாறு பாதுகாப்புப் பெறுவது சம்மந்தமாகவும் நஞ்சற்ற உணவுகளை உற்பத்தி செய்வது பற்றியும் சுற்றுச் சூழல் கழகங்களுக்கூடாக கொரோனா தொற்று தாக்கத்திலிருந்து வீடுகளில் எவ்வாறு மக்கள் நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் பல்வேறு விளக்கங்கள் முன்வைக்கப்பட்டன.

நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் (தொற்றா நோய்) ஏற்பாட்டில் இலவசமாக நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க வேண்டிய மருந்துப் பொதிகள் நிந்தவூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் பிரதேச சுற்றுப்புறக் கழகங்களின் பிரதிநிதிகளிடமும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச சுற்றுப்புறக் கழகங்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# மோ. சைக்கிள் விபத்து; நால்வர் படுகாயம்

இறக்காமம் தினகரன் நிருபர்

அம்பாறை வரிப்பத் தான்சேனைப் பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் (23) காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்து குறித்து மேலும் தெரிய வருவதாவது: வரிப்பத்தான்சேனையிலிருந்து இரு இளைஞர்கள் கல்மடு நோக்கி மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது கல்மடு சந்தியில் காத்தான்குடியிலிருந்து வந்த இரு இளைஞர்களின் மோட்டார் சைக்கிளுடன் நேருக்குநேர் மோதியதில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் அம்பாறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் நிலையில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதால் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்விபத்தில் படுகாயமடைந்த காத்தான்குடியைச் சேர்ந்த இருவரும் வளர்ப்புப் புறாக்களை விற்பனை செய்வதற்காக ஹிங்குராணை நோக்கி பயணித்ததாகவும், இவர்கள் கொண்டு வந்த ஆறு புறாக்களில் இரண்டு விபத்து சம்பவித்த இடத்தில் இறந்துவிட்டதாக தெரியவருகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தமன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வெளிவாரி மாணவர்களை பதிவு செய்வதற்கு விண்ணப்பம் கோரல்

(ஒலுவில் விசேட நிருபர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் வியாபார நிர்வாகமாணி மற்றும் வணிகமாணி பட்டப்படிப்புக்களுக்கு வெளிவாரி மாணவர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக பல்கலைக் கழக பதிவாளர் எச். அப்துல் சத்தார் தெரிவித்தார்.

க.பொ.த உயர் தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் ஆகக்குறைந்த சித்திகளுடன் பொதுச் சாதாரணப் பரீட்சையில் குறைந்த பட்சம் 30வீதம் புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. சாதாரண பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா தரம் ii அல்லது முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா தரம் ii அல்லது இலங்கை தொழிநுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய வணிக சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பத்தினை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 14ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டுமென அவர் கேட்டுள்ளார்.

# கிணற்றில் தவறி விழுந்த சிறுவன் உயிரிழப்பு

றொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை கிண்ணியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பூவரசன்தீவு பகுதியில் 07 வயது சிறுவன் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (23) இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

உயிரிழந்த சிறுவன் கிண்ணியா பூவரசன் தீவு பகுதியைச் சேர்ந்த முஹம்மது நிஜாம் முஹம்மது அஸ்மி (07 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, 11 வயது சிறுவனும் சக ஏழு வயது சிறுவனும் ஒன்றாக விளையாடிக் கொண்டிருந்தபோது 07 வயது சிறுவன் பாழடைந்த கிணற்றுப் பக்கம் சென்று தவறுதலாக கிணற்றில் விழுந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த சிறுவனின் சடலம் தற்பொழுது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உள்ளதாக வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

# அட்டாளைச்சேனை தைக்கா நகரில் நூலகம் அமைக்குமாறு கோரிக்கை

(பள்ளிக்குடியிருப்பு தினகரன் நிருபர்)

அட்டாளைச்சேனை தைக்காநகர் கிராமத்தில் நூலகமொன்று இல்லாததனால் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

அட்டாளைச்சேனை 15 மற்றும் 16 ஆகிய இரண்டு கிராம சேவை அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய, பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய தைக்காநகர் கிராமத்தில் சுமார் 3500க்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இப்பிரதேசத்தில் நூலகம் ஒன்று இல்லாததனால் மாணவர்களும் இப்பிரதேச மக்களும் தமது வாசிப்புத் தேவையை நிறைவேற்ற சுமார் 04 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள அட்டாளைச்சேனை பொது நூலகத்திற்கோ அல்லது அக்கரைப்பற்று பிரதேசத்திலுள்ள மாநகர பொது நூலகத்திற்கோ செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தாம் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.



மூதூர் பிரதேச சபையின் உறுப்பினர் ஏ.எம். றிபாஸின் வேண்டுகோளுக்கிணங்க செல்வ நகர் பிரதேச ஆட்டோ ஓட்டுநர்களுக்கான தரிப்பிடம் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்கினால் திறந்து வைக்கப்பட்ட போது. (படம்: கந்தளாய் தினகரன் நிருபர்)

# மீள்குடியேற்ற கிராமங்களில் பாம்புத் தொல்லை

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியேறி வசித்துவரும் கிராமங்களிலும் எல்லைக் கிராமங்களிலும் பாம்புத் தொல்லை அதிகரித்துள்ளதனால் பலர் பாம்புக்கடிக்கும் இலக்காகி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் சாகாமம், அலிகம்பை, சாந்திபுரம், தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடியாறு ஆகிய கிராமங்களில் பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் அங்குள்ள மக்கள் பாம்புக்கடிக்கு இலக்காகி வருகின்றனர்.

தற்போது அதிகரித்த வெப்பம் காரணமாக பல இடங்களிலும் பாம்புகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

வீடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களிலும் பாம்புகள் சுருண்டு கிடக்கின்றன. இதனால் வாகனங்களை எடுப்பவர்கள் நன்கு பரிசோதித்த பின்னரே வாகனங்களை ஓட்டுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

தற்போது நிலவும் வெப்பத்தினால் பாம்பக்கடிக்கு இலக்காகுபவர்களின் வீதம் அதிகரித்துள்ளதாகவும் வைத்தியசாலைகளில் பாம்புக்கடிக்கு இலக்காகுபவர்கள் சிகிச்சை பெறவருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



மூதூர் அல்ஹிலால் மத்திய கல்லூரிக்கு புதிய அதிபராக கே. றசீம் நியமிக்கப்பட்டுள்ளார். மூதூர் வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.எம். தாரீக் முன்னிலையில் தமது கடமையை ஏற்றுக் கொள்வதை காணலாம். (படம்: மூதூர் தினகரன் நிருபர்)

# பொகவந்தலாவ - ஹற்றன் பிரதான வீதி ரூ 880 மில்லியன் செலவில் புனரமைப்பு

## ஜனாதிபதிக்கு மக்கள் நன்றி தெரிவிப்பு

ஹற்றன் விசேட நிருபர்



பொகவந்தலாவ ஹற்றன் வீதி காப்பட் வீதியாக மாற்றப்படவுள்ளமை தொடர்பாக பிரதேச மக்கள் புதிய அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

பல ஆண்டு காலமாக பொகவந்தலாவ ஹற்றன் ஊடான பிரதான பாதை குன்றும் குழியுமாக மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டன. இதனால் பொது மக்கள் மற்றும் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

குறித்த வீதி சீரின்மை காரணமாக பல்வேறு விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன. அத்துடன் அடிக்கடி வாகனங்களும் பழுது பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதனால் இவ்வீதியில் பயணிக்கும் வாகனங்களுக்கு அதிக நேரம் செலவிட வேண்டிய நிலை ஏற்படுவதன் காரணமாக பாடசாலை மாணவர்கள், அரச பணியாளர்கள் உரிய நேரத்திற்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் இவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட வைத்தியசாலை கட்டடத்தினை திறந்து வைப்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி டிக்கோயா கிளங்கன் வருகைதந்த போது குறித்த வீதியின் ஒரு பகுதி நோர்வூட்டிலிருந்து டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலை வரை மாத்திரம் புனரமைக்கப்பட்டன. ஏனைய பகுதி கடந்த காலங்களில் நோர்வூட் பகுதி வரை மாத்திரம் காபட் இடப்பட்டன.

இதனால் நோர்வூட் முதல் பொகவந்தலாவை வரையான பகுதி மிகவும் மோசமான நிலையிலேயே காணப்பட்டது. இப் பாதையில் பல வாகனங்கள் விபத்துக்குள்ளாகியுள்ளன. மழை காலங்களில் இவ்வீதியில் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே வாகனங்கள் பயணம் செய்தன. நல்லாட்சி அரசாங்கத்தினால் இவ்வீதியினை புனரமைப்பதற்காக பல தடைவைகள் அடிக்கல் நாட்டப்பட்ட போதிலும் அவர்களால் குறித்த வீதியினை புனரமைக்க முடியாமல் போயிருந்தது.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டபாய பதவியேற்ற பின் நோர்வூட் பிரதேச சபையின் தலைவர் கே.கே. ரவி முன்வைத்த வேண்டுக்கோளுக்கமைய ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மூன்று கட்டமாக கெம்பியனுக்கு அருகாமை வரை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என பிரதேச மக்கள் குறிப்பிட்டனர்.

6.5 மீற்றர் அகலப்படுத்தி காபட்டிடப்படும் குறித்த வீதிக்கு அரசாங்கம் 880 மில்லியன் ரூபா செலவு செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பேராதனை பல்கலைகழகத்தின் ஆறு மாடி கட்டட திறப்பு விழா

கண்டி தினகரன் சுழற்சி நிருபர்



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 360 மில்லியன் ரூபா செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டடம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப வேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் உபுல் திஸாநாயக்க கலந்து கொள்ளவுள்ளார்.

இப் புதிய கட்டடத்தில் இணைய நூலகம், வை.பை வலையமைப்பு பிரதேசம், டிஜிட்டல் சுவர் தொழில் நுட்ப நூலகம், மனித வள நூலகம், நூல் வெளியீட்டு மண்டபம், ஓலைச் சுவடி காப்பகம், கணணி மையம், மாணவர்களுக்கான கலந்துரையாடல் அறை, கண்காட்சிக்கூடம், ஒவியப்பிரிவு, விசேட தேவைகளுடைய மாணவர்களுக்கான பிரிவு, அருட் பொருட்காட்சியகம் என பல்வேறு சேவைகளை உள்ளடக்கியதாக ஆறு மாடிகளை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

## பேராதனை நூலகத்தில் ஊடகவியலாளர்களுக்கு அங்கத்துவம்

கண்டி தினகரன் சுழற்சி நிருபர்

பேராதனை பல்கலைகழகத்தின் நூல் நிலையத்தை ஊடகவியலாளர்கள் பயன்படுத்த முதல் முறையாக அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இப் பல்கலைக்கழகத்தின் நூலகரது முன்மொழிவை ஏற்று நிர்வாக சபை இத் தீர்மானத்தினை எடுத்துள்ளது.

பேராதனைப்பல்கலைக்கழக நூலகச் சேர்கை இலங்கை பல்கலைக்கழகக் கல்லூரி காலத்திலிருந்து ஆரம்பிக்கிறது. 2021இல் நூற்றாண்டினை கொண்டாடவுள்ள இந் நூலகத்தின் சேர்கையிலுள்ள பொக்கிஷங்கள், பல்கலைக்கழக சமூகத்திற்கு மட்டுமன்றி வெளியுலகத்திற்கும் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கிலேயே ஊடகவியலாளர்களுக்கு அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

அவர்களது நடவடிக்கைகளை பொறுத்து ஏனைய மாவட்ட ஊடகவியலாளர்களுக்கும் எதிர்காலத்தில் அங்கத்துவம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## களுத்துறையில் பின்தங்கிய 3ம் தர மாணவர்களுக்கான செயலமர்வு

களுத்துறை சுழற்சி நிருபர்

களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை கல்வி வலயத்திற்கு உட்பட்ட புலத்சிங்கள மில்லகந்தை தமிழ் மகா வித்தியாலயத்தில் மூன்றாம் தர மாணவமாணவிகளுக்கான இலவச செயலமர்வு பாடசாலை அதிபர் கே.எஸ் கணேசன் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது உலகளாவிய ரீதியில் பரவி வரும் கொரோனா தொற்றில் இருந்து எமது மாணவச் செல்வங்களை பாதுகாத்தல் என்ற தொனிப் பொருளுடன் சிறுவர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு, எழுத்து பயிற்சி, வாசிப்பு மற்றும் சுயகற்றல் திறன்களை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் எதிர்காலத்தை எவ்வாறு வெற்றிக் கொள்வது என்பது பற்றிய விரிவான கலந்துரையாடல் மற்றும் ஆலோசனைகள் பிரபல வளவாளர்களினால் வழங்கப்பட்டன.

மேற்படி கருத்தரங்கு களுத்துறை வித்தியா அறக்கட்டளைகள் நிறுவனத்தின் ஆதரவில் புலத்சிங்கள ஒருங்கிணைப்பாளர் குணசீலனின் ஏற்பாட்டில் களுத்துறை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய ஹல்வத்துர, குடாகங்க, மிரிஸ்ஹேன, கலேஹேன, கொபவக்க மற்றும் கோவின்ன பகுதியில் அமைந்துள்ள தோட்டப்புறப் பாடசாலைகளின் மூன்றாம் தர மாணவர்களுக்காக நடத்தப்பட்டது.



## மலையக மாற்றம் தொடர்பான புகைப்படங்கள் வர வேண்டும்

### அனுஷா சந்திரசேகரன் தெரிவிப்பு

கினிகத்தேனை தினகரன் நிருபர்



தேயிலை சாயம் என்ற இந்த புகைப்படக் கண்காட்சியிலுள்ள புகைப்படங்களை பார்க்கும் போது, மலையகம் இன்னமும் அதே நிலையிலேயே உள்ளமை தெரிகின்றது. எதிர்காலத்தில் இது போன்ற புகைப்படக் கண்காட்சியில் மலையகத்தின் மாற்றங்கள் தொடர்பான புகைப்படங்கள் இடம்பெற வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் பிரதி செயலாளர் நாயகம் அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

'தேயிலை சாயம்' புகைப்பட கண்காட்சி தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் கோயில் மண்டபத்தில் நடைபெற்ற போது அதில் கலந்துக்கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் கூறுகையில்,இந்த புகைப்படங்களை பார்வையிடும் போது மனிதில் ஒரு அழுத்தம் ஏற்படுகின்றது. எத்தனையோ மக்களை நேரடியாக பார்த்திருந்தாலும் மக்களின் நிலையை புகைப்படங்களாக பார்க்கையில் இன்னும் மலையகம் மாறாமல் அப்படியேதான் இருக்கின்றது என நினைக்க தோன்றுகின்றது.

மலையகத்தின் மாற்றம் நிகழ்ந்திருந்தாலும் இன்னும் பலர் இந்த நிலையில்தான் இருக்கிறார்கள் என்பதே நிதர்சனம். இனி வரும் காலங்களில் இது போன்ற புகைப்பட கண்காட்சிகள் பல நடைபெற வேண்டும். அதில் மலையக மாற்றம் பற்றி புகைப்படங்கள் இடம் பெற வேண்டும்.

மலையகத்தின் அகத்தை படமாய் காட்டிய படைப்பாளிகளுக்கு பாராட்டுக்களும் வாழ்த்துக்களும். இவ்வாறான படைப்பாளிகளுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்க வேண்டும். அதற்காக நாம் இணைந்து செயற்படுவோம் என்றார்.

## 100 வருடம் பழமையான பாலத்தின் சிதைவுகள் மீட்பு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

இரத்தினபுரி குருவிட்ட பிரதேசத்தில் சுமார் 100 வருடங்களுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட பாலமொன்றின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குருவிட்ட ஹிக்கஸ்ஹேன தெவிப ஹல வீதிப் பகுதியில் நேற்று பாலம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நடும் போது இந்த சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டுவரும் தொழிலாளர்கள் தமது ஒப்பந்தக்காரர்கள் மூலம் இவ்விடயத்தை கிராம சேவகர் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளனர். இதனையடுத்து புதிய பாலத்தின் நிர்மாணப் பணிகளை தற்காலிகமாக இடை நிறுத்துமாறு அவர் ஒப்பந்தக்காரர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். தொடர்ந்து தொல்பொருள் மேலாக்கப் பிரிவினரால் ஆரம்ப பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது இப் பாலத்தின் நிர்மாணம் சுமார் 100 வருடங்களுக்கு முன் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக ஆராய்ச்சிகளை தொல்பொருள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

## கிராமங்களுக்குள் நுழைந்த யானைகள் வெளியேற முடியாது வேலி அமைத்ததால் ஊர் மக்கள் பாதிப்பு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

கிராமங்களுக்குள் நுழைந்த காட்டு யானைகள் வெ ளியில் செல்ல முடியாதவாறு மின்சார வேலிகள் அமைக்கப்பட்டமையால் கிராம மக்களுக்கு காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காணப்படுவதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இச் சம்பவம் பலாங்கொடை, இம்புல்பே பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

குறித்த பகுதியில் உள்ள இரண்டு கிராமங்களில் கடந்த காலத்தில் காட்டு யானைகள் உள்நுழைந்த நிலையில் யானைகளை காட்டுக்குள் விரட்டாமல் மின்சார வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் கிராமத்துக்குள் நுழைந்த யானைகள் மீண்டும் காட்டுக்குச் செல்ல முடியாது கிராமங்களுக்குள்ளேயே சுற்றி வருகின்றன.

இவை கிராமமங்களில் உள்ள வயல் நிலங்கள், தோட்டங்களை நாசமாக்கி வருவதாகவும், மக்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளதாகவும் இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் 7 கிராமங்களை சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக இம்புல்பே பிரதேச சபைத் தலைவர் ஸ்ரீலால் செனரத் கூறுகையில், கடந்த அரசாங்க காலத்தில் இந் நிலைமை ஏற்பட்டது. இவ்விடயமாக நாம் கடந்த அரசின் உயர் மட்டத்திற்கும் அதிகாரிகளுக்கும் அறிவித்தல் வழங்கினோம். ஆனால் நடந்த தவறுகளை நிவர்த்தி செய்ய எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே இவ்விடயம் இன்று வரைநீடித்துள்ளது. இவ்விடயமாக புதிய அரசின் அமைச்சர்கள் மற்றும் எமது பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரிடமும் முறையிட்டுள்ளோம்.

இவர்கள் இந் நெருக்கடி நிலைக்கு விரைவில் தீர்வினைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளனர் என்றார்.



மத்திய மாகாணத்தின் விளையாட்டு பயிற்சிவிப்பாளர்களின் அறிவை மேம்படுத்தும் வகையில் மத்திய மாகாண விளையாட்டுத்துறையினால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சிக் கருத்தரங்கு கண்டி குருதெனிய மேம்பாட்டு கல்வி நிலையத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட பயிற்றுவிப்பாளர்களை படத்தில் காணலாம். (படம்: கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)



கொழும்பிலிருந்து பதுளை நோக்கி சென்றுகொண்டிருந்த தனியார் பேருந்து பாதையை விட்டு விலகி வீடொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதை படத்தில் காணலாம். (படம்: பதுளை தினகரன் நிருபர்)

## சட்டவிரோதமாக போதைப் பொருள் விற்றவர்களுக்கு நீதிமன்றம் அபராதம்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

போதைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்த 17 பேருக்கு எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றம் 125, 500 ரூபா அபராதம் விதித்துள்ளது.

எம்பிலிபிட்டிய பொது சுகாதார காரியாலய அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். கசிப்பு தயாரித்தல், கசிப்பு விற்பனை செய்தல், தடை செய்யப்பட்ட சிகரெட் வகைகளை விற்பனை செய்தல், விற்பனைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள பியர் மற்றும் வெளிநாட்டு மதுபான வகைகளை அனுமதியின்றி விற்பனை செய்தல் ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட் டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## வான் படையினரின் உதவியுடன் கஞ்சா தோட்டம் சுற்றிவளைப்பு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

இலங்கையில் முதற் தடவையாக கஞ்சா தோட்டங்களை தேடும் முற்றுகை முயற்சிக்கு வான், தரைப்படைகள் பயன்படுத்தப்பட்டு பாரிய நிலப்பரப்பில் 8 கஞ்சா தோட்டங்களில் பயிர் செய்யப்பட்டிருந்த 159,530 கஞ்சா செடிகள் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டன.

### கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் பத்தாவது துணை ஆயராக

# பேரருட்திரு அன்ரன் ரஞ்சித்

### திருநிலைப்படுத்தல் சிறப்புத் திருப்பலி 29ம் திகதி



கொழும்பு அதி உயர் மறைமாவட்டத்திற்கு பரிசுத்த பாப்பரசரினால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள துணை ஆயர் அன்ரன் ரஞ்சித் அடிகளாரின் ஆயர்த்துவ திருநிலைப்படுத்தல் திருப்பலி எதிர்வரும் 29ஆம் திகதி பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இந்த திருநிலைப்படுத்தல் சிறப்புத் திருப்பலி பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நிறைவேற்றப்படவுள்ளது.

நாட்டில் அனைத்து மறை மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி அந்தந்த மறை மாவட்டங்களின் ஆயர்கள் இந்த திருநிலைப்படுத்தல் சிறப்புத் திருப்பலியில் பங்கேற்கவுள்ளதுடன் சிறப்பதிதியாக பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான அப்போஸ்தலிக்கப் பிரதிநிதி ஆயர் பிரையன் உடைக்வே ஆண்டகை கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மிகக் குறைந்தளவு அருட்பணியாளர்களே இந்நிகழ்வில் கலந்து கொள்வதுடன் நாட்டில் நிலவும் கொரோனா பாதிப்பு சூழ்நிலையில் பெருமளவில் குருக்கள், கன்னியாஸ்திரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்ள சந்தர்ப்பமளிக்கப்பட மாட்டாது என்றும் பங்கு பெறுவோரின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் உயர் மறைமாவட்டம் தெரிவித்துள்ளது.

கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் பத்தாவது துணை ஆயராக அருட்தந்தை அன்ரன் ரஞ்சித் அடிகளார் திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

இதற்கு முன்னர் முதலாவது துணை ஆயராக பேரருட்திரு அன்ரனி சேரம் ஆண்டகை பணியில் இருந்துள்ளதுடன் அதனை யடுத்து பேரருட்திரு பிரேங் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை, பேரருட்திரு எட்மன் பெர்னாண்டோ ஆண்டகை, பேரருட்திரு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை, தற்போதைய பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, பேரருட்திரு மேரியன் பீரிஸ் ஆண்டகை, பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, பேரருட்திரு மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகை, பேரருட்திரு ஜே.டி.என்டனி ஜயக்கொடி ஆண்டகை ஆகியோரும் மறைமாவட்டத்தின் துணை ஆயர் களாக பணிபுரிந்துள்ளனர்.

இவர்களில் ஏனையோர் ஓய்வு பெற்றுள்ள நிலையில் பேரருட்திரு மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தற்போது மறைமாவட்டத்தின் பேராயராகவும் பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராகவும் துணை ஆயர்களான மெக்ஸ்வெல் சில்வா, ஜே.டி.அன்டனி ஜயக்கொடி ஆகிய இருவரும் கொழும்பு மறை மாவட்டத்தின் துணை ஆயர்களாக தற்போது பணியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

லோரன்ஸ் செல்வநாயகம்...

# உண்மைக்கு சாட்சியம் பகர்ந்த புனித திருமுழுக்கு யோவான்

### ஆகஸ்ட் 29 புனிதரின் சிரசு துண்டிக்கப்பட்ட நினைவுத் திருநாள்

கத்தோலிக்கத் திருச்சபையில் அன்னை மரியாளுக்கு அடுத்தபடியாக இரண்டு திருவிழாக்கள் புனித திருமுழுக்கு யோவான் பெயரால் கொண்டாடப்படுகின்றன.

அதற்கிணங்க அவருடைய பிறந்தநாள் ஜூன் 24ஆம் திகதி திருவிழாவாக கொண்டாடப்படுவதுடன் ஆகஸ்ட் 29ஆம் திகதி புனிதரின் சிரசு துண்டிக்கப்பட்ட நாள் நினைவு கூறப்படுகின்றது.

செக்கரியா வுக்கும் ஆரோன் குலத்து எலிசபெத்துக்கும் அவர்கள் முதிர் வயதாக இருந்தபொழுது திருமுழுக்கு யோவான் பிறந்ததாக புனித லூக்கா முதலாம் அதிகாரம் தெரிவிக்கின்றது.

அவர் பிறக்கும் முன்பே அவரது பிறப்பு தொடர்பாக முன்னறிவிக்கப்பட்டதுடன் இயேசுகிறிஸ்துவின் தாயார் மரியாள் மூலம் வாழ்த்தப் பெற்றவராகவும் அவர் புகழ் பெறுகிறார்.

அவரது தூதுப் பணிகளில் தமது சீடர்களுக்கு இறைவேண்டல் செய்வதற்கு கற்பித்துக் கொடுத்ததை விசேடமாக குறிப்பிட முடியும். ஏனென்றால் அவர்கள் இறைவேண்டல் செய்ததை பார்த்த இயேசுவின் சீடர்கள் கூட யோவான் தம் சீடர்களுக்கு இறைவேண்டல் செய்யக் கற்று கொடுத்தது போல எங்களுக்கும் நீங்கள் கற்றுக் கொடுக்க வேண்டும் என கேட்கின்றனர் என்பதையும் புனித லூக்கா நற்செய்தி முதலாம் அதிகாரம் நமக்கு கூறுகின்றது.

புனித திருமுழுக்கு யோவான் தமது பணி வாழ்வில் இறைவனின் குரலாக செயற்பட்டு மக்களுக்கு நீதியை எடுத்துரைத்து அநீதியை கண்டிப்பவராகவும் காணப்படுகின்றார்.

அவர் புதிய ஏற்பாட்டின் தொடக்கமாகவும் பழைய ஏற்பாட்டின் நிறைவாகவும் இரண்டையும் இணைக்கும் இணையற்ற இறைவாக்கினராவார்.

அத்தகைய புகழ் பெற்ற இறைவாக்கினர் ஏரோது அரசன் ஒரு பெண்ணுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முற்பட்டு திருமுழுக்கு யோவான் தலை துண்டிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டார் என்பது கசப்பான உண்மை.



அந்த திருவிழாவையே ஆகஸ்ட் 29ஆம் திகதி புனித திருமுழுக்கு யோவான் சிரசு துண்டிக்கப்பட்ட நினைவாக கத்தோலிக்கத் திருச்சபை அனுஷ்டிக்கிறது.

பரிசுத்த வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்கள் பலரும் தமது உயிரை தியாகம் செய்கின்றனர். பாலைவனத்தில் ஒலித்த குரலான திருமுழுக்கு யோவான் தாவீது அரசனின் தவறை சுட்டிக் காட்ட தன் தலையை அடகு வைத்ததாக வேதாகமம் மூலம்அறிய முடிகிறது. அந்தவகையில் திருமுழுக்கு யோவானின் மரணத்துக்கு காரணமான மூன்று விடயங்களை நாம் பார்க்கலாம். முதலாவது குடிபோதையில் தாம் செய்வது இன்னதென்று தெரியாத நிலையில் அரசனால் கொடுக்கப்பட்ட வாக்குறுதி.

இரண்டாவது இச்சையை தூண்டும் ஒரு கேவலமான நடனம். மூன்றாவது பழிவாங்கத் துடித்த அரசின் கொடூரமான நாடகம். தர்மம் தலைகாக்கும் என்பார்கள் ஆனால் இங்கு தர்மம் தலையை துண்டித்து விடுகிறது.

புனித திருமுழுக்கு யோவானின் நடந்து வந்த பாதையை யும் அவர் ஏற்றுக்கொண்ட மரணத்தையும் நம் வாழ்வின் படிப்பினையாக கொள்ளவேண்டும். புனிதர் வாழ்ந்த புண்ணிய பூமியான ஜோர்தான் நதிக்கரை பிரதேசத்தை பார்வையிடும் சந்தர்ப்பம் அண்மையில் எனக்கும் கிடைத்தது. திருமுழுக்கு யோவான் கிறிஸ்து இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்த யோர்தான் நதிக்கரை புனித நீரை ஸ்பரிசிக்கும் பாக்கியம் கிடைத்தமை வாழ்நாளில் மறக்க முடியாதது.

# நூற்றாண்டு வரலாறு கூறும் மட்டக்களப்பு இஞ்ஞாசியார் ஆலயம்



### 104வது வருடாந்த திருவிழா 30 ஆந் திகதி

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் பாதுகாவலரான புனித இஞ்ஞாசியார் ஆலயத்தின் திருவிழா கடந்த 21 ஆந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் கல்லடி – டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலயமானது 1916ம் ஆண்டு அருட்பணி செபஸ்தியான் லாசராஸ் அடிகளாரினால் சிறு ஓலைக் குடிலாக ஆரம்பிக்கப்பட்டது. 1923ம் ஆண்டிலிருந்து புளியடிக்குடா பங்கில் வாழ்ந்துவந்த இயேசுசபைத் துறவியான அருட்பணி ஹெப்பெனோ அடிகளாரினால் பராமரிக்கப்பட்டு வந்த இந்த ஆலயப்பங்கில் அக்காலப் பகுதியில் குறைந்தளவான கத்தோலிக்க் குடும்பங்களே வசித்து வந்தனர்.

அருட்தந்தை ஹெப்பெனோ அடிகளாரைத் தொடர்ந்து அருட்தந்தை பீலிக்ஸ் கிலாக்சன் அடிகளாரின் பராமரிப்பில் இவ்வாலயம் ஒப்டைக்கப்பட்டபோது. அவர் ஓலைக் குடிசையாக இருந்த இஞ்ஞாசியார் ஆலயத்தை 1952ம் ஆண்டு கல்லினால் கட்டி மெருகூட்டினார்.





இவ்வேளையில் 1952 செப்டம்பரில் ஆயர் பேரருட்திரு இக்னேசியஸ் கிளேனி ஆண்டகை மறை மாவட்டத்தின் பங்குகளின் எல்லைகளை உருவாக்கிய வேளையில் இஞ்ஞாசியார் ஆலயமானது புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலய பங்கின் ஒரு ஆலயமாக அது பிரகடனம் செய்யப்பட்டது.

அதன் பின்னர் 1960களில் இப்பகுதியினை நோக்கி மக்கள் குடியேறத் தொடங்கினர். இவ்வாறு அதிகரித்த தொகையினராக கத்தோலிக்க மக்கள் வாழ்ந்து வந்த வேளையில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் கிழக்கில் வீசிய சூறாவளியினாலும் வெள்ளப் பெருக்கினாலும் இப்பகுதி வாழ் மக்களும் அவர்களுடைய வதிவிடங்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. இஞ்ஞாசியார் ஆலயமும் தரைமட்டமாகியது. அக்காலப் பகுதியில் பங்குத்தந்தையாக விளங்கிய அருட்பணி எப்.எக்ஸ்.மேயர் அடிகளார் புதியதோர் ஆலயத்தை அமைத்தார்.

இதனால் 1992ம் ஆண்டளவில் அக்காலப்பகுதியில் பங்குத்தந்தையாக இருந்த அருட்பணி யோசப்மேரி அடிகளாரின் முயற்சியினால் புதிய ஆலயம் அமைக்கும் பணிகள் 1992ம் ஆண்டு ஜனவரி 15ம் நாள் அப்போதைய ஆயர் பேரருட்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையினால் அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்வாலய நிர்மாணப் பணிகளில் அப்போது துணைப் பங்குத் தந்தையாக இருந்த அருட்பணி ஜோயல் அடிகளாரின் பங்கு கணிசமானது.

பின்னர் 2000ஆம் ஆண்டு தை மாதம் ஆயர் அவர்களினால் கல்லடி – டச்பார் ஒரு தனிப் பங்காகவும் இயேசு சபையினரின் பராமரிப்பிற்கு உட்பட்டதாகவும் பிரகடனம் செய்யப்பட்டது. அதன் பின்னர் முதல் பங்குத்தந்தையாக அருட்பணி யோசப்மேரி அடிகளார் நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து துணைப் பங்குத்தந்தையாக இருந்த அருட்பணி ரீ.ஜீவராஜ் அடிகளார் 2012ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் பங்குத் தந்தையாக பொறுப்பேற்றார். இவரினால் ஏற்கனவே நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்த ஆலய நூற்றாண்டு அபிவிருத்திப் பணிகளை முழுமூச்சுடன் செயற்படுத்தி சில திட்டங்களை பூர்த்தி செய்தார். அவரைத் தொடர்ந்து 2014ம் ஆண்டு ஆவணி மாதமளவில் புதிய பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்ட அருட்பணி லோரன்ஸ் லோகநாதன் அடிகளாரும் நூற்றாண்டினை முன்னோக்கியதாக பல திட்டங்களை வகுத்து செயல்படுத்தினார்.

அவரைத் தொடர்ந்து 2016 ஜனவரியில் புதிதாக பொறுப்பேற்றஅருட்பணி சுவக்கின் றொசான் அடிகளார் பங்குச் சபையினருடனும் பங்கு மக்களுடனும் இணைந்து 2016 ஆம் ஆண்டு ஆலய நூற்றாண்டினை வெகு விமரிசையாக கொண்டாடியமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்வாலயத்தின் 104 ஆவது வருடாந்த திருவிழாவானது கடந்த 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணி சுவக்கின் றொசான் அட்களாரின் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. முதல் நாள் திருப்பலியினை மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகை ஒப்புக்கொடுத்ததுடன் 38 சிறுவர்களுக்கு ஆயரினால் முதல் நன்மை, உறுதிப் பூசுதல் அருட்சாதனங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து எட்டு நவ நாள் ஆராதனைகளில் தினமும் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டு வருகிறது.

எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனை இடம் பெறவுள்ளது. கொவிட் 19 சூழ்நிலையினை கருத்திற்கொண்டு சுகாதார வழிமுறைகளை பின்பற்றி நடை பெறும் இத்திருவிழாவில் புனிதரின் திருச்சொரூபப் பவனி இம்முறை இடம்பெறாது.

அதனைத் 30 ஆந் திகதி காலை 7.15 மணிக்கு மட்டக்களப்பு மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஏ.தேவதாசன் அடிகளார் தலைமையில் திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு திருவிழா நிகழ்வுகள் நிறைவுபெறும்.

தகவல்,படங்கள்;
கல்லடி குறூப்நிருபர்

# அசையாத நம்பிக்கையே கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை

(கடந்த வாரத் தொடர்)

மனவளர்ச்சி குறைவாக உள்ள குழந்தைகள் படிக்கின்ற சிறப்பு பள்ளியில் பணியாற்றுகின்ற அருட்சகோதரி ஒருவர் பிற சமயத்தைச் சார்ந்த ஒரு பெண்மணிக்குஎவ்வாறு கடவுள் அவரின் நம்பிக்கையின் பொருட்டு வல்ல செயலைச் செய்தார் என்பதுபற்றிபகிர்ந்து கொண்டார்.

அவர் கூறியதாவது "திருமணமாகி 13 வருடங்களாக குழந்தை இல்லாத ஒரு பெண்மணி மூளை வளர்ச்சி இல்லாத குழந்தைகள்படிக்கின்ற ஒரு பள்ளியில்வேலை செய்து வந்தார். அவர் ஒரு பிற சமயத்தைபின்பற்றும்பெண்மணியாக இருந்தாலும் இயேசுவின் மேல் அதிகம் நம்பிக்கைகொண்டவராக இருந்தார். குழந்தை இல்லையே என்றமனவேதனை இருந்தாலும்முகமலர்ச்சியோடு அந்த குழந்தைகளுக்கு பணிவிடை செய்வார். ஒருமுறைஆசிரியர்களிடம் தன்னுடைய மனவேதனையை அவர் சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தபோது ஆசிரியர்கள் அனைவரும் இணைந்து ஒரு முடிவெடுத்தார்கள்.

தினமும் காலைசெபத்தில் எல்லா குழந்தைகளோடும் இணைந்து அந்த ஆசிரியருக்கு இறைவன் ஒருகுழந்தயைத் தர வேண்டும் என்று இயேசுவின் மீது ஆழமான நம்பிக்கையோடுசெபிக்கத்தொடங்கினர்.இறை நம்பிக்கையோடு செபிக்க அவர்கள் முடிவெடுத்ததற்கு ஏற்ப ஒவ்வொரு நாளும் காலையில் அந்த ஆசிரியரின் பெயர் சொல்லி அனைவரும் உருக்கமாகசெபித்தார்கள். என்ன ஆச்சரியம்; கடவுள் யார்? செபம் என்றால் என்ன? என்று உணராத அந்த மூளை வளர்ச்சி இல்லாத குழந்தைகள் கூடஅவருக்காக உருக்கமாக செபித்தார்கள். அவர்கள் செபத்தை கேட்ட இறைவன் அவருக்கு ஒரு குழந்தையை பரிசாகக் கொடுத்திருக்கின்றார். இது ஒரு உண்மைநிகழ்வு. குழந்தையைப் பெற்ற அந்த தாயானவள் உங்கள் அனைவரின் செபத்தையும்கடவுள் கேட்டு எனக்கு அருளினார் என்றுமகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டார்" என கூறினார்.

திருத்தொண்டர்
குழந்தை இயேசு பாபு...

# சம்பத் வங்கி பீ.எல்.சீ.

## 2020 ஜூன் 30இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான இடைக்கால நிதிக்கூற்றுக்கள்

(கொழும்பு பங்குச் சந்தையின் சட்டம் 7.4 பிரகாரம்)

கம்பனி பதிவு இலக்கம்: PQ144

### இலாபம் அல்லது நட்டம் பற்றிய கூற்று

| | வங்கி | | | | | | குழுமம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜூன் 30இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கானது | | | ஜூன் 30இல் முடிவடைந்த காலாண்டிற்கானது | | | ஜூன் 30இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கானது | | | ஜூன் 30இல் முடிவடைந்த காலாண்டிற்கானது | | |
| | 2020 ரூ. 000 | 2019 ரூ. 000 | மாற்றம் % | 2020 ரூ. 000 | 2019 ரூ. 000 | மாற்றம் % | 2020 ரூ. 000 | 2019 ரூ. 000 | மாற்றம் % | 2020 ரூ. 000 | 2019 ரூ. 000 | மாற்றம் % |
| மொத்த வருமானம் | 53,227,270 | 58,327,739 | (8.7) | 24,361,507 | 29,462,434 | (17.3) | 56,505,300 | 61,661,396 | (8.4) | 25,599,961 | 31,142,759 | (17.8) |
| வட்டி வருமானம் | 46,200,358 | 51,216,303 | (9.8) | 21,674,493 | 25,590,862 | (15.3) | 49,243,043 | 54,269,401 | (9.3) | 22,885,240 | 27,129,239 | (15.6) |
| கழி: வட்டிச் செலவினங்கள் | 28,751,908 | 31,413,847 | (8.5) | 14,203,959 | 16,012,936 | (11.3) | 30,308,131 | 33,080,366 | (8.4) | 14,781,649 | 16,835,053 | (12.2) |
| தேறிய வட்டி வருமானம் | 17,448,450 | 19,802,456 | (11.9) | 7,470,534 | 9,577,926 | (22.0) | 18,934,912 | 21,189,035 | (10.6) | 8,103,591 | 10,294,186 | (21.3) |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 4,418,159 | 5,550,856 | (20.4) | 1,750,417 | 2,782,743 | (37.1) | 4,594,447 | 5,705,736 | (19.5) | 1,835,332 | 2,858,904 | (35.8) |
| கழி: கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | 630,612 | 881,898 | (28.5) | 206,820 | 389,916 | (47.0) | 630,912 | 882,527 | (28.5) | 206,940 | 390,050 | (46.9) |
| தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 3,787,547 | 4,668,958 | (18.9) | 1,543,597 | 2,392,827 | (35.5) | 3,963,535 | 4,823,209 | (17.8) | 1,628,392 | 2,468,854 | (34.0) |
| வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | (106,541) | 2,168,215 | (104.9) | 557,580 | 671,896 | (17.0) | (106,541) | 2,168,215 | (104.9) | 557,580 | 671,896 | (17.0) |
| நிதிச் சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெற்ற தேறிய இலாபம் | | | | | | | | | | | | |
| - இலாபம்/(நட்டம்) கூற்றினூடாக சாதாரண பெறுமதியில் | 66,030 | 31,765 | 107.9 | 32,266 | 22,533 | 43.2 | 66,030 | 31,765 | 107.9 | 32,266 | 22,533 | 43.2 |
| - ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்றினூடாக சாதாரண பெறுமதியில் | 21,790 | - | 100.0 | 15,958 | - | 100.0 | 21,790 | - | 100.0 | 15,958 | - | 100.0 |
| - கடன் தீர்ப்பனவு செலவில் | - | 2,698 | (100.0) | - | - | - | - | 2,698 | (100.0) | - | - | - |
| தேறிய ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 2,627,474 | (642,098) | 509.2 | 330,793 | 394,400 | (16.1) | 2,686,531 | (516,419) | 620.2 | 273,585 | 460,187 | (40.5) |
| மொத்த தொழிற்பாட்டு வருமானம் | 23,844,750 | 26,031,994 | (8.4) | 9,950,728 | 13,059,582 | (23.8) | 25,566,257 | 27,698,503 | (7.7) | 10,611,372 | 13,917,656 | (23.8) |
| கழி: பெறுமதி குறைப்பு | 7,436,124 | 7,241,824 | 2.7 | 2,581,851 | 3,766,957 | (31.5) | 8,057,215 | 7,899,778 | 2.0 | 2,853,697 | 4,095,084 | (30.3) |
| தேறிய தொழிற்பாட்டு வருமானம் | 16,408,626 | 18,790,170 | (12.7) | 7,368,877 | 9,292,625 | (20.7) | 17,509,042 | 19,798,725 | (11.6) | 7,757,675 | 9,822,572 | (21.0) |
| கழி: தொழிற்பாட்டு செலவினங்கள் | | | | | | | | | | | | |
| ஊழியர் தொடர்பான செலவினங்கள் | 4,806,267 | 4,921,547 | (2.3) | 2,201,577 | 2,316,636 | (5.0) | 5,284,371 | 5,332,885 | (0.9) | 2,442,288 | 2,510,536 | (2.7) |
| பெறுமானதேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு செலவுகள் | 1,166,024 | 1,212,111 | (3.8) | 599,486 | 631,152 | (5.0) | 1,223,844 | 1,186,574 | 3.1 | 640,713 | 607,674 | 5.4 |
| ஏனைய செலவினங்கள் | 3,608,999 | 3,975,432 | (9.2) | 1,630,966 | 2,023,861 | (19.4) | 3,908,015 | 4,292,746 | (9.0) | 1,785,776 | 2,137,583 | (16.5) |
| மொத்த தொழிற்பாட்டு செலவினங்கள் | 9,581,290 | 10,109,090 | (5.2) | 4,432,029 | 4,971,649 | (10.9) | 10,416,230 | 10,812,205 | (3.7) | 4,868,777 | 5,255,793 | (7.4) |
| நிதியியல் சேவைகள் மீதான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம் | 6,827,336 | 8,681,080 | (21.4) | 2,936,848 | 4,320,976 | (32.0) | 7,092,812 | 8,986,520 | (21.1) | 2,888,898 | 4,566,779 | (36.7) |
இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசில் சீதுவை, மூக்கலன்முவ, நீர்கொழும்பு வீதி, இல. 531/2 இல் தமது பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ள மற்றும் பிவீ 7453 பதிவிலக்கத்தையுடைய, 2007 இலக்கம் 07 இலங்கை கம்பனிகள் சட்டத்தின் கீழாக ஒரு கம்பனியாக கூட்டிணைக்கப்பட்ட களம்பு கார்கோ எக்ஸ்பிரஸ் லிமிட்டடின் பணிப்பாளராகிய டொன் சந்ரசோம கஸாரா (093110566 இலக்க கடவுச் சீட்டு உரித்தாளர்) மற்றும் அநுகா கஸாரா (2428321 இலக்க கடவுச் சீட்டு உரித்தாளர்) ஆகிய நாம், இத்தால் இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்வதாவது, கிருளப்பனை மஸ்ஜித் வீதி, இல. 11 ஐச் சேர்ந்த மின்னேரி கமகே டொன் சமரக்கொடி பெரேராவிற்கு (581681801V இலக்க தேசிய அடையாள அட்டை உரித்தாளர்) எம்மால் வழங்கப்பட்ட, பிரசித்த நொத்தாரிஸ் எம்.வீ.எஸ் பிரேமதாஸவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011.09.28 திகதியிடப்பட்ட, 1734 இலக்க விசேட அற்றோணி தத்துவம் இன்று முதல் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு, இல்லாதொழிக்கப்பட்டு மற்றும் வெற்றும் வெறிதுமாக்கப்படுவதுடன், 2020 ஓகஸ்ட் 10ஆம் திகதி முதற்கொண்டு மேற்படி மின்னேரி கமகே டொன் சமரக்கொடி பெரேராவினால் மேற்கொள்ளப்படும் எவ்வித செயற்பாடுகளுக்கும் நாம் பொறுப்பாக இருக்கப் போவதில்லை என்பதாகும்.
இந்த ஆவணமானது, 2011.09.29 திகதியிடப்பட்ட, 6519 இலக்க நாட்புத்தகத்தின் இருமடித்தாள் 82, அத்தியாயம் 80 பதிவின் கீழாக, நுகேகொடை, தெல்கந்த, மேல் மாகாண பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## காணி விற்பனை – பண்டாரவளை

வ/ப பண்டாரவளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குரிய பிரதான வீதியில் நடாத்திச் செல்லப்படும் இலக்கம் 57 உடைய நகர கிராமிய வங்கி காணியின் பின்புறமாக 10 பர்ச்சு காணித் துண்டை விற்பனை செய்வதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது.

உங்கள் விலைமனுக்களை, 2020.09.15 அன்று 12.00 மணிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிப்புச் செய்வதுடன், அனுப்பப்படும் போர்மில் இடது பக்க மேல் மூலையில் ‘இலக்கம் 57 காணியின் பகுதியொன்றை விற்பனை செய்தல்’ எனக் குறிப்பிட்டு, மேலேயுள்ள தினத்திற்கு முன்னதாக தலைவர், வ/ப பண்டாரவளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், இலக்கம் 04, பெரேரா மாவத்தை, பண்டாரவளை என்ற முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட தபாலில் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கின்றேன்.

இது தொடர்பான போர்ம் கட்டணமாக ரூ. 1000/- உம், மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ. 1000/-உம் அறவிடப்படும்.

குறித்த போர்ம், பிரதான அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்டு மேலதிக விபரங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி இலக்கம்:-**
**057-2222153, 071-8427332, 071-8427383**

**கௌரவ தலைவர்.**

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

## அறிவித்தல்

**பெருந்தோட்ட அமைச்சு**

## இலங்கைத் தேயிலைச் சபை

**தேயிலை ஆணையாளர் பிரிவு**

**சுதுகஹஹேன தேயிலைத் தொழிற்சாலை – MF 1562**

**மாஹல்பே, ஹொரபாவிட்ட கம்புறுபிட்டிய நிலுவை கொழுந்துகளுக்கு பணம் செலுத்துதல்**

சுதுகஹஹேன தேயிலைத் தொழிற்சாலை (MF1562) இற்கு 2017 ஆகஸ்ட், செப்டெம்பர், ஒக்டோபர் ஆகிய மாதங்களுக்கு பச்சை தேயிலைக் கொழுந்தை வழங்கிய கொழுந்து உரிமையாளர்கள், தாம் வழங்கிய கொழுந்துக்காக பணம் கிடைக்கவில்லையாயின் 2020 செப்டெம்பர் 20 அல்லது அத்தினத்திற்கு முன் இலங்கை தேயிலைச் சபையின் மாத்தறை பிரதேச அலுவலகத்திற்கு கொழுந்து வழங்கிய ஆவணங்களுடன் அறிவிக்குமாறு இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

**அலுவலகத்தின் முகவரி : உதவி தேயிலை ஆணையாளர்**
**இலங்கை தேயிலைச் சபை**
**பிரதேச அலுவலகம்**
**இல. 23, அளுத் மாவத்த, உயன் வத்த,**
**மாத்தறை.**

தொலைபேசி/ பெக்ஸ் இலக்கம்: 0412222636

இந்த அறிவித்தல் பிரசுரமானபின் கிடைக்கும் வேண்டுகோள்களின் அடிப்படையில் இறுதிக் கொடுப்பனவு ஆவணம் தயாரிக்கப்படுவதால், 2020 செப்டெம்பர் 20ம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள்/ வேண்டுகோள்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

**தேயிலை ஆணையாளர்**
**இலங்கைத் தேயிலைச் சபை**
**இல. 574, காலி வீதி,**
**கொழும்பு - 03.**

## விலைமனு கோரல்

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

**கொழும்பு பெஸ்டியன் மாவத்தை பஸ் முனையத்தில் பயணிகள் தளம் 04 இல் பொருத்தப்பட்டுள்ள (Transparent Sheet) இல் உள்ள விளம்பரத்தின் உரிமத்தை மாற்றுவதற்கான விலைமனுக்கோரல்**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பெஸ்டியின் பஸ் முனையத்தில் பயணிகள் தளம் 04 இல் பொருத்தப்பட்டுள்ள (Transparent Sheet) இல் உள்ள 12000 சதுரஅடி அளவிலான பகுதியில் விளம்பரப்படுத்தலுக்கான உரிமத்தை மாற்றுவதற்கான (விளம்பரங்களை காட்சிப்படுத்துவதற்கு) மனுக்கள் கோரப்படுகின்றது.

இதன் மூலம் துறைக்கு பொருத்தமான தகவல்களை வழங்குதல் மற்றும் தெரிவு செய்யப்படும் நிறுவனத்தின் விளம்பரத்தையும் காட்சிப்படுத்துவதற்கான வசதி வழங்கப்பட்டுள்ளதுடன் விளம்பரப்பகுதியில் அச்சு ஊடகத்தை பயன்படுத்தி விளம்பரம் செய்யலாம்.

இந்த மனுக்கோரல் தொடர்பான அனைத்து விடயங்களும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் www.ntc.gov.lk பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்காக ஆர்வமுள்ள பதிவு செய்யப்பட்ட விளம்பர முகவர்கள்/ பதிவு செய்யப்பட்ட முகவர் நிறுவனங்களுக்கு உரித்தான விண்ணப்பங்கள், அனைத்து தகவல்களுடன் கூடிய மனு ஆவணங்கள் 2020.08.25 ஆம் திகதி முதல் 2020.09.10 ஆம் திகதி வரை மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப 03.00 மணி வரை மீள் செலுத்தப்படாத ரூபா.1,000.00 ஐ செலுத்துவதன் மூலம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளமுடியும். அதேபோல் மனுக்களை முன்வைக்கும் முன்பு குறித்த இடத்திற்கு சென்று பரீட்சித்துக்கொள்ள முடியும்.

முத்திரையிடப்பட்ட மனுக்கள் 2020.09.11 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வழங்கல் குழுவில் மனுக்களை சேகரிப்பதற்காக இடப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும். அதேநாளில் மு.ப. 11.00 மணிக்கு மனுக்கள் திறக்கப்படுவதுடன் அந்த தருணத்திற்கு மனுதாரர்களோ அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் கலந்து கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு 011-2503969 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்**
**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**
**241, பூங்கா வீதி, கொழும்பு- 05**

## பதவி வெற்றிடம்

**முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

## இலங்கை வக்ப் சபை

## சட்ட அலுவலகர் பதவி (தற்காலிக)

**மேற்கண்ட பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**A. கல்வித்தகைமை**

1. இலங்கை பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் சட்டத்துறையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் இலங்கை உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பதவியேற்றிருக்க வேண்டும்.

**B. ஏனைய தகைமைகள்**

தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் ஆற்றலுடையவராகவும் கணனித்திறனில் தேர்ச்சிப்பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். வக்ப் சம்பந்தமான அறிவும் தெளிவும் இருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.

**C. வயது:**

விண்ணப்பதாரி 24 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**D. சம்பளம் :**

ரூ.47,615 சம்பளத்திற்கு மேலதிகமாக வக்ப் சபையினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**E. நியமனத்தின் தன்மை :**

ஒரு வருடம் தற்காலிக நியமன அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதுடன் தேவைக்கேற்ப சேவை காலத்தை நீடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:**

i. இலங்கை குடிமகனாக இருக்க வேண்டும்.
ii. பதவிக்குரிய கடமைகளை சிறப்பாக மேற்கொள்வதற்குரிய தேகாரோக்கியம் மற்றும் புத்திசுவாதீனம் உடையவராக இருக்க வேண்டும்.
iii. சிறந்த பண்புகளையுடையவராக இருக்க வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்பும் முறை:**

**www.muslimaffairs.gov.lk** என்ற திணைக்கள இணையத்தளத்தில் விண்ணப்பப்படிவத்தை பெற்று முறையாக பூர்த்தி செய்து முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இல.180, ரீ.பீ.ஜாயா மாவத்தை, கொழும்பு - 10 எனும் முகவரிக்கு 07.09.2020ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் திணைக்களத்திற்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பணிப்பாளர்**
**முஸ்லிம் சமயபண்பாட்டலுவல்கள் திணைக்களம்**
**இல.180, ரீ.பீ.ஜாயா மாவத்தை, கொழும்பு - 10.**

## விலைமனுவிற்கான அழைப்பு

**கமத்தொழில் அமைச்சு**

## வ/ப இலங்கை உரக் கம்பனி

**வத்தளை, ஹுனுப்பிட்டிய, களஞ்சியசாலை தொகுதியிலுள்ள உரத்தை ஏற்றல், இறக்கல் மற்றும் ஏனைய சேவைகளுக்காக தொழிலாளர் சேவைகளை வழங்குவதற்கான விலைமனுக்கோரல் (விலைமனு இல.: 2020/ 21/CFC/HPT/LB/02/01) மற்றும் கலத்தல் மற்றும் ஏனைய சேவைகள் (விலைமனு இல.: 2020/21/CFC/HPT/LB/02/02)**

ஹுனுப்பிட்டியவிலிருந்து 10 கிமீ தொலைவு சுற்றுவட்டத்தில் இலங்கை உரக் கம்பனியின் களஞ்சியசாலையுள்ள ஹுனுப்பிட்டிய மற்றும் ஏனைய களஞ்சியசாலைகளுக்கு பின்வரும் தொழிலாளர் சேவைகளை வழங்குவதற்காக பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு சங்கங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், கமத்தொழில் அமைப்புக்கள், தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து வ/ப இலங்கை உரக் கம்பனியின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

| விலைமனு இலக்கம் | சேவையின் விளக்கம் | விலைமனு பிணை உத்தரவாதப் பெறுமதி (ரூபா சதம்) | சேவை ஆரம்பிக்கும் காலப்பகுதி |
|---|---|---|---|
| 2020/21/CFC/HPT/LB/02/01 | உரத்தை ஏற்றுதல், இறக்குதல் மற்றும் ஏனைய தொழிலாளர் சேவைகள் | 610,000.00 | 2020.10.01 ஆம் திகதியிலிருந்து 2021.09.30ஆம் திகதி வரையும். |
| 2020/21/CFC/HPT/LB/02/02 | உரத்தை கலத்தல் மற்றும் ஏனைய தொழிலாளர் சேவைகள் | 180,000.00 | 2020.10.01 ஆம் திகதியிலிருந்து 2021.09.30ஆம் திகதி வரையும். |

02. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.

03. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 2947765 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் 077-2069981 என்ற அலைபேசியூடாகவும் பெற்று வ/ப இலங்கை உரக் கம்பனியின் பெறுகை மற்றும் இறக்குமதிகளுக்கான பதில் கடமையாற்றும் முகாமையாளரிடமிருந்து பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

பதில் கடமையாற்றும் முகாமையாளர் (பெறுகை மற்றும் இறக்குமதிகள்),
பெறுகைப் பிரிவு,
வ/ப இலங்கை உரக் கம்பனி,
‘லக்பொஹொர’, சுவர்ண ஜயந்தி மாவத்தை,
ஹுனுப்பிட்டிய, வத்தளை,
இலங்கை.

04. உரத்தை ஏற்றல், இறக்கல் மற்றும் ஏனைய சேவைகள் மற்றும் கலத்தல் மற்றும் ஏனைய சேவைகளுக்காக தொழிலாளர் சேவைகளை வழங்குவதற்கான தகைமை மற்றும் தகுதிக்கான தகுதித்திறன்:

- கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 2 வருட அனுபவம் (நிகரான வேலைகளுக்கான உரம் அல்லது நிகரான பண்டங்களை ஏற்றல், இறக்கல் மற்றும் கலத்தல்)
- கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 2 வருடங்களுக்கான ஊசேநி மற்றும் ஊநநி ஆகியவற்றை செலுத்தியமைக்கான ஆவணச்சான்று.

05. பதினைந்தாயிரம் ரூபாவை (15,000 ரூபா) மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் கட்டணமாக ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர்,வத்தளை, ஹுனுப்பிட்டிய, வ/ப இலங்கை உரக் கம்பனியின் தலைமையலுவலகத்திலிருந்து விலைமனுக்களுக்கான அழைப்பு, விலைமனுதாரர்களுக்கான பணிப்புரைகள், விலைமனுப் படிவம், நிபந்தனைகள் மற்றும் அனைத்து உரித்தான இணைப்புக்களையும் அடக்கியுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2020.08.25 ஆம் திகதியிலிருந்து 2020.09.14 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.

06. விலைமனுக்கள் இரு தனித்தனியான தபாலுறைகளில் அடக்கப்பட்டு அவற்றின் மேல் மட்டத்தில் ‘மூலப்பிரதி’ மற்றும் ‘நகல்பிரதி’ என அடையாளமிடப்பட்டு, முத்திரையிடப்பட்டு, அவையிரண்டும் ஒரு தனியான தபாலுறையில் அல்லது உறையொன்றில் அடக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு, அதனது இடது பக்க மேல் மூலையில் **Bid No.: 2020/21/ CFC/HPT/LB/02/01 and or 2020/21/CFC/HPT/LB/02/02”** என குறிக்கப்பட்டு 2020.09.15 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியிலுள்ள பெறுகைப் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனு பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பெறுகைப் பிரிவு,**
**வ/ப இலங்கை உரக் கம்பனி,**
**‘லக்பொஹொர’, சுவர்ண ஜயந்தி மாவத்தை,**
**ஹுனுப்பிட்டிய, வத்தளை,**
**இலங்கை.**

விலைமனுக்கள் 2020.09.15 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் திறக்கும் வேளையில் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் அனைத்து விலைமனுக்களும் நிராகரிக்கப்படும். இது தொடர்பான எந்தவொரு தபால் தாமதத்திற்கும் அல்லது ஏதாவதொரு காணாமல் போவதற்கும் திணைக்கள பெறுகைக் குழுவானது பொறுப்பேற்க மாட்டாது.

07. வ/ப இலங்கை உரக் கம்பனியின் பெறுகைப் பிரிவில் 2020.09.08 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பெறுகைப் பிரிவு,**
**வ/ப இலங்கை உரக் கம்பனி,**
**ஹுனுப்பிட்டிய, வத்தளை,**
**திகதி: 25.08.2020.**

The Housewives’ companion
Classifieds on
Daily News

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

### மேல் மாகாணம்

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு, வர்த்தக, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)**

## மோட்டார் கார் வண்டியொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்

**(2012ஆம் வருடத்திற்குப் பின்னரான பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்)**

இந்த அதிகார சபைக்கு கார் வண்டியொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக அதிகார சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் திறந்த விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

அதன் பிரகாரம், இது தொடர்பான விலைமனு ஆவணத் தொகுதியை இலவசமாக பரீட்சித்துப் பார்க்க முடிவதுடன் இது தொடர்பாக ஆர்வங்காட்டும் வாகன உரிமையாளர்கள் அல்லது மோட்டார் வாகன நிறுவனங்களுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

இது தொடர்பான விலைமனு ஆவணத் தொகுதியை 2020.08.26 முதல் 2020.09.04 அன்று மு.ப. 8.30 முதல் பி.ப. 2.45 வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப் படிவக் கட்டணத்தின் கீழாக இந்த அதிகார சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கள் பொறுப்பேற்கப்படுவது, 2020.09.07 அன்று பி.ப. 2.30 மணிக்கு முடிவடைவதுடன் விலைமனுக்கள் திறக்கப்படுவது அன்றைய தினமே குறித்த நேரத்தில் இந்த அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் அச்சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்க்கு அல்லது அவரின் அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்குக் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்**
**பெறுகைக் குழு**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**
**இல. 59, சென்ற் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு - 12**
**தொ.பே. 011-5676903**

## சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**(சுத்திகரிப்பு பணியகம்)**

**பொது கேள்வி 4329 T**

**SUPPLY OF LATHE MACHINE**

விலைமனுக்கோரல் ஆவணத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஒத்திசைவாக மேலே குறிப்பிட்டுள்ள அம்சத்தை வழங்குவதற்காக புகழ்வாய்ந்த உற்பத்தியாளர்கள், வெளிநாட்டிலுள்ள அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட ஏற்றுமதி முகவர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட உள்ளூர் முகவர்கள் (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) ஆகியோரிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை, களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணியக, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக் கொள்வார்.

விலைமனுவொன்றை சமர்ப்பிக்கும் எந்தவொரு நபரும் 50,000 ரூபாவிற்கான மீளளிக்கப்படும் வைப்புத் தொகையையும் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 3,500 ரூபாவையும் 2020 செப்டம்பர் 25 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் பி.ப. 3 மணிக்கு முன்னராக, கோரிக்கைக் கடிதமொன்றின் மூலம் கொழும்பு-09, கலாநிதி டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்க இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தலைமையக 5 ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணியக காசாளரிடம் செலுத்துதல் வேண்டும்.

கேள்வியின் நிபந்தனைகள் மற்றும் விபரக் குறிப்புக்கள் அடங்கிய விலைமனுக்கோரல் ஆவணமானது **www.ceypetco.gov.lk** மற்றும் **www.dgmarket.com** என்ற இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன இணையதளங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மாற்றுவழியாக, கீழேயுள்ள முகவரியிலிருந்தும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

2020 செப்டம்பர் 30 ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரையும் திணைக்கள பெறுகைக் குழுத்தலைவரினால் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் அவைகள் அதன் பின்னர் சுத்திகரிப்பு பணியக மாநாட்டு மண்டபத்தில் உடனடியாகவே திறக்கப்படும்.

**முகாமையாளர் (பண்டங்கள்),**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்பு பணியகம்,**
**சப்புகஸ்கந்த, களனி, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்தல்


இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் சீதுவ, மூக்கலாங்கமுவ, நீர்கொழும்பு வீதி, 531/2 என்ற இலக்கத்தில் PV 7453 என்ற பதிவிலக்கத்தைக் கொண்டுள்ளதும் இலங்கை 2007 ஆம் ஆண்டின்7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதொரு கம்பனியான Colombo Cargo Express Limited என்ற கம்பனியின் பணிப்பாளர்களாகிய 093110566 என்ற இலக்கமுடைய கடவுச்சீட்டின் உரிமையாளராகிய டொன் சந்திரசோம கசர மற்றும் 2428321 என்ற இலக்கமுடைய கடவுச்சீட்டின் உரிமையாளராகிய அனுக்க கசர ஆகிய நாம் 543 என்ற இலக்கத்தையும் 2012.01.11 ஆம் திகதியையுமுடையதும் பிரசித்த நொத்தாரிஸ் பி.டி.பி.கே. சேனாரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், கிருளப்பன, மஸ்ஜிட் வீதி, 11 ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவரும் 581681801V என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்டவருமான மின்னேரி கமகே டொன் சமரக்கொடி பெரேரா என்பவருக்கு எம்மால் வழங்கப்பட்ட மேற்குறிப்பிட்டுள்ள விஷேட அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்து, வெற்றும் வெறிதுமாக்கி அத்துடன் ஒழித்துள்ளோம் என பொது மக்களுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் அறிவிக்கின்றோம் என்பதுடன் இந்த நாளாகிய 2020 ஒகஸ்ட் 10 ஆம் திகதியிலிருந்து மேற்கூறப்பட்ட மின்னேரி கமகே டொன் சமரக்கொடி பெரேரா என்பவரினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நாம் எவ்வித பொறுப்பையும் ஏற்க மாட்டோம்.

இந்த ஆவணமானது 2012.03.06 ஆம் திகதியிடப்பட்டதும் 1741 என்ற இலக்கத்தையுடைய நாட்புத்தகத்தின் 61 ஆம் பக்கத்தின் 91 ஆம் பாகத்தில் பதிவு செய்யப்பட்டு நுகேகொட, தெல்கந்த, மேல் மாகாண பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## சிறு விளம்பரம்



### மோட்டார் வாகனங்கள்



122

### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

WP BEZ-0750 Yamaha ray ZR, 2016, motor cy cle கூடிய விலைக் கோரி க்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0711 2 10 810 047017

## உள்ளக பாதுகாப்பு உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு

### குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்

# விலைகூறல்களுக்கான அழைப்பு

## தற்காலிக தடுப்பு நிலையமொன்றைப் பேணிச் செல்வதற்காக புதிய கட்டிடமொன்றை குத்தகைக்கு வாடகைக்குப் பெற்றுக் கொள்ளல்

01. குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வெளிநாட்டவர்களுக்காக நிறுவப்படவுள்ள தற்காலிகதடுப்பு நிலையமொன்றிற்காக புதிய கட்டிடமொன்றை, மேல் மாகாண எல்லைக்குள் அல்லது அண்டிய சனநெரிசலற்ற பிரதேசமொன்றிலிருந்து, அரசாங்க விலை மதிப்பீட்டின் கீழ் 5 வருடங்களுக்கு, வருடாந்தம் புதுப்பிக்கும் அடிப்படையில் குத்தகை அடிப்படையில் அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக விலைகூறல்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.
02. உத்தேச கட்டிடமானது,
    01. குறைந்த பட்சம் 150 - 200 இற்கும் இடைப்பட்டோரை தடுத்து வைக்கக் கூடிய இடவசதிகளைக்கொண்ட, சுமார் 7,500 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பளவைக் கொண்ட கட்டிடமாக இருத்தல் வேண்டும். அத்துடன், சுமார் 1,000 சதுர அடிகளைக் கொண்ட திறந்த வெளிப் பிரதேசமொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்.
    02. குறித்த இடத்தைச் சென்றடைவதற்கான பிரவேச வீதியானது 12 அடி அல்லது அதற்கு மேற்பட்ட அகலத்தைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், போதிய சுத்தமான காற்றைச் சுவாசிக்கக் கூடிய வசிப்பதற்கு உகந்த இடமாகவும், சுற்றுப் புறச் சூழலையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்ற நல்ல நிலையிலுள்ள கட்டிடமாகவும் இருத்தல் வேண்டும்.
    03. அத்துமீறி வெளியே செல்ல முடியாதவாறு தப்பிச் செல்ல முடியாதவாறு போதிய உயரத்தைக் கொண்ட மதிலொன்று கட்டிட வளவைச் சுற்றி அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், போதிய பிரவேசிக்கக் கூடிய வசதிகளைக் கொண்ட பூட்டிட்டு மூடி வைக்கக் கூடிய வாயில் ஒன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.
    04. தடுத்து வைக்கப்படுகின்றவர்களை ஆண், பெண் என வேறாக்கி வைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
    05. தொலைபேசி வசதிகளையும், மின்சார வசதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், போதிய மின் விசிறி மற்றும் மின் குமிழ் வசதிகளைக் கொண்டிருத்தலும் வேண்டும்.
    06. 24 மணி நேர குழாய் நீர் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், 5,000 லீற்றர் அல்லது அதற்கு மேற்பட்ட நீரை களஞ்சியப்படுத்தி வைக்கக் கூடிய பிரதான நீர்க் குழாயுடன் இணைக்கப்பட்ட மேலதிக நீர்த் தாங்கியொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.
    07. குறைந்த பட்சம் 03 அல்லது அதற்கு மேற்பட்ட வாகனங்களை நிறுத்தி வைக்கக் கூடிய வாகனத் தரிப்பிட வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    08. போதிய மலசல கூட வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    09. குறைந்த பட்சம் திணைக்களத்தைச் சேர்ந்த ஐந்து (05) உத்தியோகத்தர்களுக்குப் போதுமான அலுவலக வசதி, ஓய்வெடுப்பதற்கான வசதி மற்றும் நீர், மின்சார வசதிகளுடன் மலசல கூட வசதிகளையும் தனியாகக் கொண்டிருத்தல் வேண்டும்
    10. தடுத்து வைக்கப்படுகின்றவர்களுக்கு உணவு உட்கொள்வதற்காக இடமொன்று ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
    11. இருவருக்கு தரித்திருக்கக் கூடிய மின்சார வசதிகளைக் கொண்ட பாதுகாப்புக் கூடமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    12. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அறுவருக்கு (06) ஓய்வுடன் நேரத்தைக் கழிப்பதற்காக போதிய வசதிகளை உடைய பொருத்தமான இடமொன்று இருத்தல் வேண்டும் என்பதுடன், அங்கு நீர், மின்சாரம் மற்றும் மலசல கூட வசதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
    13. ரூ.10,000/- இற்கு மேற்பட்ட பராமரிப்புப் பணிகளை கட்டிட உரிமையாளர் மேற்கொள்ளல் வேண்டும்.
    14. தீயிலிருந்து பாதுகாப்புப் பெறும் வகையில் காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
03. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக் கோரல் நடாத்தப்படும்.
04. 05 வருட காலப்பகுதி முடிவடைந்ததன் பின், இக் கட்டிடத்தை தற்காலிக தடுப்பு நிலையமாக தொடர்ந்தும் பேணிச் செல்வதற்குத் தேவைப்படும் பட்சத்தில், அப்போது விலைகளை தீர்மானிக்கின்ற நிபந்தனைகள் தொடர்பாகவும் விசேடமாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
05. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு, இது தொடர்பான மேலதிக விபரங்களை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, -சுகுறுபாயா, 5 ஆம் மாடி, 'B' பகுதியில் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் உதவிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன், விலைக்கூறல் ஆவணங்களை அதே முகவரியில் வைத்து வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை பரீட்சிக்கலாம்.

    தொடர்புகளுக்கு: தொலைபேசி இல. . 011 - 5329530 தொலைநகல் : 011 - 2885358
06. இதற்கான மாதிரி விண்ணப்பப் படிவத்தையும், விலைகூறல் ஆவணங்களின் தொகுதியையும். எமது - www.immigration.gov.lk இணையத்தளத்தின் மூலம் **2020.08.25 தொடக்கம் 2020.09.15 வரை** பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். அல்லது எழுத்துமூல கோரிக்கையொன்றை, குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் உதவிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம், **2020.08.25 ஆம் திகதி தொடக்கம் 2020.09.15 ஆம் திகதி வரை** மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை, அச்சிடப்பட்ட முழுமையான விலைகூறல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.
07. "மூலப் பிரதி" (Original) இணைப் பிரதி (Duplicate) என்றவாறு தயாரித்து பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை, **2020.09.15 ஆம் திகதி பி.ப. 2.00 மணி** அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, தலைவர், திணைக்கள கொள்முதல் குழு, குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் 5ஆம் மாடி, 'B' பகுதி, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது நேரில் வந்து ஒப்படைக்கப்படுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைகூறல்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், அவை திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
08. விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 105 நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கு விலைமனுக்கள் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
09. விலைகூறல் முன் சந்திப்பொன்று **2020.09.08 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு** பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "குறுபாயா", 5 ஆம் மாடி, பகுதி 'A' இல் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின், கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்தில் நடைபெறும்.

**யூ.வீ சரத் ரூப்பசிறி**
**கட்டுப்பாட்டாளர் நாயகம்**
**குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்,**
**"சுகுறுபாயா", ஸ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

## தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை

# விலைமனு அறிவித்தல்

### வாகன நிறுத்துமிட கட்டணத்தை அறவிடல் 2020/2021

தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகரசபை அதிகாரத்திற்குட்பட்ட கீழ்க்காணும் பிரதேசங்களில் காணப்படும் வாகன நிறுத்தங்களில் கட்டணம் அறவிடும் பணியை விலைமனுக்கோரி, ஒரு வருட காலத்திற்கு தகுதியுள்ள தரப்பினருக்கு வழங்குவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள அமைவிடங்கள் மற்றும் ஆகக்குறைந்த விலைமனுத்தொகை கீழே காணப்படும் வகையில் அமையப்பெறும்.

i. நுகேகொடை ஹைலெவல் வீதி மேம்பாலத்திற்கு கீழாக மற்றும் அதனைச் சூழவுள்ள வலயம் - ரூ.985,500.00
ii. கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையைச் (களுபோவில பொது வைத்தியசாலை) சூழவுள்ள வலயம் - ரூ.1,277,500.00
iii. தேசிய விலங்கியல் பூங்காவை திணைக்களத்தைச் சூழவுள்ள வலயம் - ரூ.1,168,000.00
iv. தெஹிவளைச் சந்தியிலுள்ள மேம்பாலத்திற்கு கீழாகவுள்ள மற்றும் அதனைச் சூழவுள்ள வலயம் - ரூ.1,022,000.00
v. கல்கிஸ்ஸ நவீன விற்பனை நிலையத்தைச் சூழவுள்ள வலயம் - ரூ.273,750,00
vi. கடற்கரையோர வீதி (Marine Drive) வெள்ளவத்தை பாலத்திற்கு சமீபமாகவுள்ள இடத்திலிருந்து ஃபிரேஸர் அவின்யு வரையானது - ரூ.292,000.00

இந்த வலயங்களுக்குச் சமீபமாக வாகனங்களை நிறுத்துவதற்காக, வாகனம் நிறுத்தும் இடங்களை ஒதுக்கி, அந்த இடங்களில் நிறுத்தப்படும் வாகனங்கள் மீது நகர சபையால் விதிக்கப்படும் கட்டணத்தை அறவிட்டு, உரிய பற்றுச்சீட்டை வழங்கி குறித்த செயற்பாட்டை முகாமைத்துவம் பண்ணுவது இதன் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அதன் பிரகாரம், மேற்படி வலயங்களிலுள்ள வாகன நிறுத்தங்களில் கட்டணம் அறவிட்டு அனுமதிப்பத்திரத்தை வழங்கும் உரிமையை டெண்டர் அடிப்படையில் பெற்றுத்தரப்படுகின்றது.

**விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான நிபந்தனைகள்**

01. விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடிவது, தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையால் வழங்கப்படும் விலைமனுவைச் சமர்ப்பிக்கும் ஆவணங்கள் மூலமாக மாத்திரமேயாகும். ரூ.2,500.00 மீளளிக்கப்படாத கட்டணமொன்றைச் செலுத்துவதன் மூலம், நகரசபையின் கலப்பு வருமானப் பிரிவிலிருந்து 2020.09.15 அன்று பி.ப.3.00 வரை விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறே குறித்த ஆவணங்களை அந்த பிரிவிலேயே இலவசமாக பரீட்சித்துப் பார்ப்பதற்கு வசதிகள் கொடுக்கப்பட்டுள்ளன.
02. விலைமனுக்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்திகதி மற்றும் நேரம் 2020.09.16 அன்று பி.ப.2.00 என்பதுடன் விலைமனுக்கள் பொறுப்பேற்கப்படுவது முடிவடைந்தவுடன் உடனடியாக அவை திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் விலைமனுக்களைச் சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதியொருவருக்கு கலந்துகொள்ளலாம்.
03. ஒவ்வொரு அமைவிடம் தொடர்பாகவும் வெவ்வேறாக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அனைத்து விலைமனுப்பத்திரத்துடனும் ரூ.100,000.00 விலைமனுப் பிணையொன்று ரொக்கப்பணமாக வைப்பிலிடப்படல் வேண்டும்.

**டப்ளியு.டி.ஏ.மொனெல்,**
**மாநகர ஆணையாளர்,**
**தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகரசபை** **திகதி : 2020.08.21**

## சுற்றுலாத்துறை அமைச்சு

## இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA)

# விலைமனு அறிவித்தல் – தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

1. கீழே விபரிக்கப்பட்டவாறான பெறுகைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் திணைக்கள பெறுகை குழுத் தலைவர் கோருகின்றார்.

| இல. | விடயம் மற்றும் ஒப்பந்த இலக்கம் | தகுதித்தன்மை | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபாவில்) | விலைமனுப் பிணைத் தேவைப் படுத்தல்கள் (ரூபாவில்) | விலைமனு முன்னோடிக் கூட்டம் | | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | திகதி மற்றும் நேரம் | இடம் | |
| வேலைகள் | | | | | | | |
| 01. | பெந்தொட்ட தேசிய விடுமுறை விடுதியில் முகாமையாளரின் விடுதி, அஞ்சல் அலுவலக கட்டிடம் மற்றும் அலுவலர்களின் இருப்பிடம் ஆகியவற்றின் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் (III ஆம் கட்டம்) SLTDA/RM/W/NCB/Refurbishment – Bentota 2020/04 | கட்டிட நிர்மாணத்தில் சி-4 அல்லது மேற்பட்டது | 20,000 ரூபா | 1,000,000 ரூபா. | 2020 செப்டம்பர் 4 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு | பெந்தொட்ட தேசிய விடுமுறை விடுதி | 2020 செப்டம்பர் 15 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |

2. 2020 ஒகஸ்ட் 25 ஆம் திகதியிலிருந்து மூடும் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், கொழும்பு-03, காலி வீதி, 80 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை திணைக்கள பெறுகைக் குழு, தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 0112 426800 – நீடிப்பு 305 என்ற தொடர்பெண்ணூடாக இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரசபை பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்களை வழங்கும் இடத்தில் இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் நகல் பிரதியுடன் விலைமனுக்களை மூடும் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, இல.: 80, காலி வீதி, கொழும்பு-03. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.
5. அனைத்து விலைமனுக்களும் அவைகளை மூடிய பின்னர், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, 4 ஆம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
6. விலைமனுப்பிணையானது இலங்கை மத்திய வங்கியின் கீழ் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டிருப்பதுடன் விலைமனுவின் செல்லுபடியாகும் திகதியிலிருந்து 28 நாட்களுக்கு அப்பால் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள 1987 ஆம் ஆண்டின் இலங்கையின் பொது ஒப்பந்தங்களின் பதிவாளரினால் வழங்கப்பட்டதும் மற்றும் இதற்குப் பின்னர் வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் (பிசிஏ 3) பதிவுச் சான்றிதழுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. சுற்றுலாத்துறை அமைச்சு, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வேறேதும் நிறுவனத்தினொரு ஊழியர் அல்லது ஒரு கம்பனி மற்றும் அல்லது தனிநபரொருவர் நெருங்கிய வியாபாரம் அல்லது உறவு ஆகியவற்றைக் கொண்டிருப்பின், ஒப்பந்தத்தை வழங்கும் தகுதியை இழந்து விடுவார்.
10. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும். மேலும், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையானது எவ்வித காரணங்களையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டிருப்பதுடன், எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரருக்கும் விலைமனுக்களை தயாரிப்பதற்கும் அல்லது அவற்றை ஒப்படைப்பதிலுமுள்ள எந்தவொரு ஆகுசெலவிற்கும் அல்லது எந்தவொரு செலவினங்களுக்கும் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையானது பொறுப்பேற்க மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை.**



# வன்டேஜ் உதைபந்தாட்ட தலைவர் கிண்ணம் :
# அரையிறுதியில் ஜாவா லேன், நியூ ஸ்டார் அணிகள்



வன்டேஜ் உதைபந்தாட்ட தலைவர் கிண்ண கால்பந்து தொடரின் முதலிரு காலிறுதிகளிலும் வெற்றி பெற்றுள்ள ஜாவா லேன் மற்றும் நியூ ஸ்டார் விளையாட்டு கழக அணிகள் தொடரின் அரையிறுதிக்கு தெரிவாகியுள்ளன.

சுகததாச அரங்கில் ஞாயிற்றுக்கிழமை (23) இரவு மின்னொளியின் கீழ் ஆரம்பமாகிய இந்தப் போட்டியில் 30 நிமிடங்கள் கடந்த நிலையில், நியூ ஸ்டார் அணிக்காக இந்த தொடரில் அதிக கோல்களைப் பெற்றுள்ள மொஹமட் அனஸ் போட்டியின் முதல் கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

முதல் பாதியில் புளூ ஈகல்ஸ் பெற்ற சிறந்த வாய்ப்பாக, பெனால்டி எல்லைக்கு வெளியில் இருந்து ஜீவன்த பெர்னாண்டோ உதைந்த பந்து கோல் கம்பத்தில் பட்டு வெளியேறியது. இதனால் நியூ ஸ்டார் அணி முதல் பாதியில் முன்னிலை பெற்றது.

தொடர்ந்து இரண்டாம் பாதி ஆரம்பமாகி 10 நிமிடங்களுக்குள், மைதானத்தின் ஒரு திசையில் இருந்து உள்ளனுப்பிய பந்தை கோல் எல்லையில் இருந்து பெற்ற அனஸ் தனது அடுத்த கோலையும் பதிவு செய்தார்.

அடுத்த 6 நிமிடங்களுக்குள் புளூ ஈகல்ஸ் வீரர் துமிந்த தனது அணிக்கான முதல் கோலைப் பெற்றார்.

போட்டியின் இறுதி நிமிடங்களில் புளூ ஈகல்ஸ் வீரர்கள் மேற்கொண்ட தமது இரண்டாம் கோலுக்கான முயற்சிகளை நியூ ஸ்டார் பின்கள வீரர்கள் லாவகமாகத் தடுத்தனர். அதேபோன்று, புளூ ஈகல்ஸ் அணியின் அனுபவ வீரர் நெத்ம மல்ஷான் எதிரணியின் கோலுக்கு அருகில் கிடைத்த சிறந்த வாய்ப்பையும் தவறவிட போட்டி நிறைவில் நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் 2 – 1 என வெற்றி பெற்று, தொடரின் அரையிறுதிச் சுற்றுக்குத் தெரிவாகியது.

உதைபந்தாட்ட தலைவர் கிண்ணத்தில் கொவிட்19 விதி மீறல்கள்

மீண்டும் எதிரணியின் கோலுக்கு அண்மையில் பந்தை பெற்ற ஜாவா லேன் வீரர் அப்துல்லா, அதனை கோல் நோக்கி செலுத்தினார். கோலுக்காக சென்றுகொண்டிருந்த பந்தை டிபென்டர்ஸ் வீரர் கோல் எல்லையில் இருந்து வெளியேற்றினார்.

தொடர்ந்து, டிபென்டர்ஸ் வீரர்களுக்கு முதல் பாதியில் கிடைத்த ஒரே வாய்ப்பாக சஜித் குமார முன் களத்தின் இடது புறத்தில் இருந்து உயர்த்தி உதைத்த பந்து கோலின் மேல் கம்பத்தில் பட்டு வெளியேறியது. இதனால் முதல் பாதி கோலின்றி நிறைவுற்றது. இரண்டாம் பாதியின் ஆரம்பம் முதல் ஜாவா லேன் வீரர்களது வேகம் முதல் பாதியைவிட அதிகமாக இருந்தது. எனினும், அனுபவ வீரர்களான மாலக பெரேரா, அப்துல்லா, நவீன் ஜூட் மூவரும் அடுத்தடுத்து வாய்ப்புக்களை வீணாக்க, போட்டி முழு நேர முடிவில் இரு அணிகளாலும் எந்த கோலையும் பெற முடியாமல் போனது.

வெற்றியாளரை தேர்வு செய்வதற்கு பெனால்டி வாய்ப்பு வழங்கப்பட்டது. இதன்போது, ஜாவா லேன் கோல் காப்பாளர் அஷ்பாக் அயூப் 2 பந்துகளை சிறந்த முறையில் தடுக்க, டிபென்டர்ஸ் வீரர்கள் ஒரு கோலை மட்டுமே பெற்றனர். மறுமுனையில், ஜாவா லேன் வீரர்கள் 3 கோல்களை பெற்று ஆட்டத்தை வென்று, வன்டேஜ் FFSL தலைவர் கிண்ணம் 2020 இன் அரையிறுதியிக்கு முதல் அணியாக தெரிவாகியது.

SINCE 1978
42nd
OBSERVER MOBITEL
SCHOOL CRICKETER
OF THE YEAR 2020
Recognizing talent, inspiring greatness.
Sri Lanka Telecom Mobitel
உங்களுடனே. என்றும்.

## 42வது ஒப்சவர்–மொபிடெல்

### மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை : ..........

**(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)**

பாடசாலை : ..........

வாக்களித்தவர் பெயர் : ..........

முகவரி : ..........

மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router — 2வது பரிசு: ரூ. 2,500
3வது பரிசு: ரூ.1,500 — 4வது பரிசு: ரூ. 1,000

42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 2020-08-29 இல. 25

GET UNLIMITED
Facebook Instagram Twitter LinkedIn
RS. 99 + TAXES
TO ACTIVATE DIAL #170#
For the best unlimited experience, use Mobitel 4G
FASTEST INTERNET WIDEST COVERAGE 4G LTE
Sri Lanka Telecom Mobitel We Care. Always.
* Terms and conditions apply

# ஓய்வு விஷயத்தில் டோனியை நல்லவிதமாக நடத்தவில்லை

## சக்லைன் முஷ்டாக் குற்றச்சாட்டு

ஓய்வு விஷயத்தில் டோனியை நல்லவிதமாக நடத்தவில்லை என இந்திய கிரிக்கெட் சபை மீது சக்லைன் முஷ்டாக் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் டோனியின் திடீர் ஓய்வு குறித்து பாகிஸ்தான் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் சக்லைன் முஷ்டாக் அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது:

டோனி போன்ற வீரரை இந்திய கிரிக்கெட் சபை சரியான முறையில் நடத்தவில்லை. அவரது ஓய்வு இந்த மாதிரி முடிந்திருக்கக்கூடாது. இதை என்னுடைய இதயத்தில் இருந்து சொல்கிறேன்.

நான் நினைப்பதையே அவரது கோடிக்கணக்கான இரசிகர்களும் நினைக்கிறார்கள். நான் இவ்வாறு சொல்வதற்காக இந்திய கிரிக்கெட் வாரியம் மன்னிக்க வேண்டும். ஆனால் அவர்கள் (கிரிக்கெட் சபை) டோனியை நல்லவிதமாக நடத்தவில்லை என்பதே உண்மை. இது எனக்கு வருத்தமளிக்கிறது. இந்த விஷயத்தில் இந்திய கிரிக்கெட் சபை தோல்வி அடைந்து விட்டது.



இந்திய அணிக்காக கடைசியாக ஒரு சர்வதேச போட்டியில் அவர் விளையாடி இருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். ஒவ்வொரு கிரிக்கெட் வீரரும் உயர்ந்த நிலையில் விடைபெறவேண்டும் என்றே விரும்புவார்கள். நிச்சயம் டோனிக்கும் இந்த கனவு இருந்திருக்கும். வழியனுப்பும் போட்டி நடத்தப்படாததால் அவரது இரசிகர்களும் வருத்தத்தில் இருப்பார்கள்.

டோனி கிரிக்கெட்டில் ஒரு மாணிக்கம். உண்மையான ஹீரோ. அவரை நினைத்து பெருமைப்படுகிறேன். அவர் ஐ.பி.எல். போட்டியில் களம் காண இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

## சம்பியன்ஸ் லீக் கால்பந்து:

# 6-ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்ற பேயர்ன் முனிச்

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் போட்டியில் பி.எஸ்.ஜி. அணியை 10 என்ற கணக்கில் வீழ்த்தி பேயர்ன் முனிச் அணி 6வது முறையாக சம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது.

கழக அணிகளுக்கான ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டிகள் போர்ச்சுகலில் நடைபெற்றது. இந்த போட்டியின் பேயர்ன் முனிச் (ஜெர்மனி) மற்றும் பி.எஸ்.ஜி. பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் (பிரான்ஸ்) அரைஇறுதி ஆட்டங்களில் வெற்றிபெற்று இறுதி போட்டிக்குள் நுழைந்தன.



இதையடுத்து போர்ச்சுகல் தலைநகர் லிஸ்பனில் சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியின் இறுதி போட்டி நடைபெற்றது. இதில் 5 முறை சம்பியன் பட்டம் வென்ற பேயர்ன் முனிச் அணியை எதிர்த்து முதல்முறையாக இறுதி போட்டிக்குள் நுழைந்த பி.எஸ்.ஜி. அணி மோதியது.

போர்த்துகல் நேரப்படி நேற்று இரவு 8 மணிக்கு போட்டி நடைபெற்றது. போட்டி தொடங்கியது முதலே இரு அணிகளும் கோல் அடிக்க தீவிர முயற்சி மேற்கொண்டனர்.

இரு அணிகளுக்கும் கோல் அடிக்க அதிக வாய்ப்புகள் கிடைத்தபோதும் அவற்றை தவறவிட்டன. இதனால் ஆட்டத்தின் முதல் பாதியில் (45 நிமிடங்கள்) இரு அணிகளும் கோல் அடிக்காமல் 0-0 என்ற கணக்கிலேயே இருந்தது.

இடைவேளைக்கு பின் போட்டியின் இரண்டாவது பாதி தொடங்கியது. இந்த பாதியில் எப்படியாவது கோல் அடித்துவிட வேண்டும் என இரு அணிகளும் தீவிரமாக விளையாடியது.

போட்டியின் 59வது நிமிடத்தில் பேயர்ன் முனிச் வீரர் கிங்ஸ்லி கமன் முதல் கோல் அடித்து அணியினரை உற்சாகத்தில் ஆழ்த்தினார்.

இதையடுத்து 1-0 என்ற கோல் கணக்கில் பேயர்ன் முனிச் அணி முன்னிலை பெற்றது. இதனால் ஆட்டம் சூடுபிடிக்கத்தொடங்கியது.

பி.எஸ்.ஜி. அணி வீரர்கள் தாங்களும் எப்படியாவது கோல் அடித்துவிட வேண்டும் என தீவிர முயற்சி மேற்கொண்டனர்.

ஆனால் அவர்களால் இறுதி வரை கோல் அடிக்கமுடியவில்லை. ஆட்டத்தின் 90 நிமிடங்கள் முடிவடைந்த பின்னரும் பி.எஸ்.ஜி. வீரர்களால் கோல் அடிக்கமுடியவில்லை.

90 நிமிடங்கள் முடிவடைந்து போட்டியில் கூடுதலாக கடைசி 5 நிமிடங்கள் கொடுக்கப்பட்டன. இந்த கடைசி 5 நிமிடங்களிலும் பி.எஸ்.ஜி.யால் கோல் அடிக்கமுடியவில்லை.

இதனால் பி.எஸ்.ஜி. பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் (பிரான்ஸ்) அணியை 10 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி பேயர்ன் முனிச் (ஜெர்மனி) அணி 6வது முறையாக ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் பட்டத்தை வெற்று கோப்பையை தட்டிச்சென்றது. இந்த வெற்றியை பேயர்ன் முனிச் வீரர்கள் உற்சாகமாக கொண்டாடி மகிழ்ந்தனர்.




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 ஓகஸ்ட் மாதம் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.